Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விளம்பி, பங்குனி 22-ஆம் நாள். (4-4-59) சனிக்கிழமை இதழ் 9.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்ட்ரிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# பிரதமர் பண்டாவுக்குப் பிறந்துள்ள

## புதிய தைரியம்?

## அரசியல் பிக்குகளுக்கும் அஞ்சாத ரகசியம்

### கதிர்காமயாத்திரை கைவிடப்படுமா?

— நமது அரசியல் நிருபர் —

சென்ற ஆண்டிலிருந்ததை விட இப்போது பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு அதிக தைரியம் பிறந்துள்ளது. முன்னர் சில புத்த பிக்குகள் அவரது வீட்டின் முன் முற்றுகையிட்டு, திரு. செல்வநாயகத்தாருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிராகரிக்கும்படி கேட்டனர். அவரும் அவ்விதமே செய்துவிட்டார்.

ஆனல் இம்முறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமன விஷயமாகச் சில அரசியல் பிக்குகள் செய்யும் கிளர்ச்சிகளுக்கு அவர் செவி சாய்க்க மறுத்துவிட்டார். ஒஸ்மன்-டி-ஸில்வாவின் உத்தியோகத்தை நீடிக்க முடியாதென்று உறுதியாகக் கூறிவிட்டார்.

பாதுகாப்புத்திருத்தச் சட்டப்படி கிடைத்துள்ள புதிய அதிகாரந்தான் அவரது இந்தப் புதிய தைரியத்துக்குக் காரணமா? எப்படியிருந்தாலும் சரி, பிரதமருக்குப் பிறந்துள்ள இந்தப் புதியதைரியம் வரவேற்கத்தக்கதாகும்.

ஏப்ரல் மாதம் 26-ந் திகதி சில அரசியல் பிக்குகள் கதிர்காமக் கடவுளிடம் சென்று இப்படியாக முறையிட மோட்டார்களில் ஊர்வலமாகச் செல்லப் போகிருர்களாம். அதற்கிடையே ஒஸ்மன்—டி—ஸில்வாவே இந்தக் கிளர்ச்சிகள் வேண்டாமென்று கூறித் தடுத்து விடுவாராயின் அதில் வியப்பில்லை. ஏனெனில் இந்தக் கிளர்ச்சி

(9-ம் பக்கம் பார்க்க)

### சரித்திர ஆராய்ச்சிக்கழகம் அங்குரார்ப்பணக்கூட்டம்

உண்மைச் சரித்திரத்தை மறைத்தும், திரித்தும் எழுதியும் பேசியும் வரும் இந்நாட்களில் தமிழினம் தனது பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் உள்ளதை உள்ளவாறே உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டியது மிக அவசியமெனக் கலைப்புலவர் க. நவரத்தினம் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நிறுவப்பெற்ற ஈழத்தமிழர் சரித்திர ஆராய்ச்சிக்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார். இக்கூட்டம் வடபகுதிக் கல்வியதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் தலைமையில் நடைபெற்றது. பள்ளிக் கூடங்களிற் சரித்திரப்பாடம் கற்பிக்கும்முறையை ஆராய்வதுடன் தமிழரின் உண்மைச் சரித்திரத்தையும் ஆராய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே அனைவரும் அன்று கூடவேண்டியதாயிற்று எனத் தலைவர் குறிப்பிட்டார். இக்

(9-ம் பக்கம் பார்க்க)

## இரு ஆண்டுகளில் ஆங்கிலத்தைக் கைவிட முடியுமா?

### இந்தியா—பாகிஸ்தான் காட்டும் வழி

— 'துலாம்' எழுதுவது —

*1961-ம் வருடத்திலே, அதாவது இன்னும் இரண்டு ஆண்டுகளில் இலங்கை அரசாங்க நிர்வாகமனைத்தும் சிங்களத்திலேயே நடைபெறுமென்றும், ஆங்கிலம் முற்ருகக் கைவிடப்பட்டுவிடுமென்றும் தபால் மந்திரி மரைக்கார் பேராதனைக்குப் பக்கத்திலே ஒரு பள்ளிக்கூடத்தில் பேசுகையில் பயமுறுத்தினர்.*

மூன்று வருடங்களுக்கு முன்பாக அவசர அவசரமாக நிறைவேறிய சிங்களம் மாத்திரம் சட்டமும் இதையே கூறுகின்றது. அச் சட்டப்படி, சில அரசாங்க இலாகா நிர்வாகம் சிங்களமயமாக்கப்பட்டு வருகிறது.

அரசாங்கத்திலே வேலைக்குச் சேர விரும்புகிறவர்களுக்கும், வேலை காரணமாகவும், உத்தியோக உயர்வுபெறவும் சிங்கள மொழிப் பரீட்சையில் தேற வேண்டுமென்றும் ஒரு நிபந்தனை போட்டிருக்கிருர்கள். "சிங்களத்திலே நீதி விசாரணையை நடத்த முடியுமா?" என்று பல நீதிபதிகளையும் அரசாங்கம் கேட்டுவருவதாயும், ஒரு தமிழ் நீதிபதி, தம்மால் இது முடியுமென்று பதில் அளித்துள்ளதாயும் கேள்விப்பட்டேன்.

தனிப்பட்ட முறையில் அந்த நீதிபதி சிங்களத்தில் விசாரணையை நடத்தும் திறமை பெற்றிருக்கலாம். சிங்களப் பகுதிக்கு அது ஏற்றதாகவும் இருக்கலாம். ஆனல், இந்த முறையைத் தமிழ்பேசும்மக்கள் ஒப்புவார்களா? இது அவர்களுக்கும் நீதிபரிபாலனத்துக்கும் நல்லதா? என்பது முற்றிலும் வேறுவிஷயம்.

**சீர்குலையும்**

சிங்களம் மாத்திரம் சட்டம் நிறைவேறியபின், நியமிக்கப்பட்ட 'சுவபாஷா' குமாஸ்தாக்களால், பல இலாகாக்களிலும் நிர்வாகம் சரியாக நடைபெற முடியாமல், அதிக தயக்கம் ஏற்படுவதாக அறிகிறேன். தேசிய பிராவிடென்ட் நிதி இலாகாவிலே பல சுவபாஷா குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாயும், இதனல் நிர்வாகத்துக்குப் பெரிய மண்டையிடியாகி, வேலை மிகவும் சுணங்குவதாயும் கூறப்படுகிறது. சுவபாஷா குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்ட பல இலாகாக்களிலும் நிலைமை இப்படித்தானும்.

மேலதிகாரிகளில்; சிங்களவருக்கும் சிங்களம் சரிவரத் தெரியாது. புரியாத சிங்களத்தைப் புரிந்துகொள்ள மிகவும் சங்கடப்பட்டுவருவதாகவும், ஆங்கிலம் அகற்றப்பட்டுவிட்டால், அரசாங்க நிர்வாகயந்திரம் மிகவும் சீர்குலையுமென்றும் விஷயமறிந்தவர்கள் மூலம் அறிகின்றேன்.

(15-ம் பக்கம் பார்க்க)

### முதல் யாழ்ப்பாணப் பிரதமர்!

கொழும்பு.

கொழும்பு வை. எம். ஸி. ஏ. பார்லிமென்டின் 50-வது ஆண்டுவிழா விருந்து வைபவத்தில் அதன் பிரதமர் திரு. சரவணமுத்து பேசுகையில், "நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன்" "யாழ்ப்பாணத்திலிருந்து வரும் முதல் பிரதமரும் நான்தான்'' என்று ஹாஸ்யமாகச் சொன்னர்.

விருந்துக்குத் தலைமை வகித்த பிரதமர் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், திரு. சரவணமுத்துவின் பேச்சைப் பாராட்டிவிட்டு, "அவர் இலங்கைப் பார்லிமென்டிலும் அங்கம் வகிப்பதுடன், இலங்கையின் முதல் யாழ்ப்பாணப் பிரதமராக வரவேண்டுமென்றும் விரும்புகின்றேன்'' என்று பலத்த கரகோஷத்திடையே கூறினர்.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

BRIDGESTONE TYRES




DISTRIBUTORS
TUCKERS AUTODROME

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

ஏக விநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்"

## பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை நிர்வாக வட்டாரத்தின் பெருங் கவலை

நமது சிறப்பு நிருபர்

யாழ்ப்பாணம்

அரசாங்கம் காட்டிவரும் அசிரத்தை காரணமாகப் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறதென்று நம்பிக்கையான தகவலொன்று எட்டியிருக்கிறது. இத்தொழிற்சாலையின் தலைவிதியை நிர்ணயிப்பதில் அமைச்சரவைக்கும் பரிபாலன சபைக்குமிடையில் பலத்த அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள்ளதாம். அதேநேரத்தில் தொழிலாளர் சங்கம் இரண்டிலொன்று பார்த்துவிடுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்பி இருக்கிறது.

வடபகுதியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலைகளிலொன்ருன இந்த நிலையத்தின் அமைப்புவேலைகள் ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு முன்னரே பூர்த்தியடைந்துவிட்டதாயினும், இன்றுவரை இயங்காது முடங்கிக் கிடப்பது பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் அரசாங்க நிதியிலிருந்து தண்டச் செலவாக வெளியே போய்க்கொண்டிருக்கும் அதே நேரத்தில் வருமானம் சிறிதுகூட இல்லாத நிலையில் மேற்படி தொழிற்சாலை தூங்கிக்கிடக்கிறது.

அது மௌனமாயிருப்பதற்குக் காரணம் இயந்திர சாதனங்களில் இயற்கையாக ஏற்பட்டுள்ள பலவீனமேயென்பது பகிரங்க இரகசியமாகிவிட்டது. இயந்திர சாதன பரீட்சார்த்த வேலைகள்படுதோல்வியடைந்து வருவது நிர்வாக வட்டாரத்துக்குப் பெரும் கவலையைக் கொடுத்திருக்கிறது.

**படுதோல்வி**

இயந்திர சாதனங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பே இணைக்கப்பட்டு முடிந்து பரிசீலனை செய்யப்பட்ட போது படுதோல்வியில் முடிந்தது. குழாய்கள் வெடித்துச் சிதறியதுடன் மற்றும் உபஉறுப்புக்கள் உருகிப் போய்விட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. குளோறின் முதலான ரசாயனப் பொருள்கள் சரியான முறையில் வெளியேருமல் தடைபட்டு நின்றதுடன், வீண்விரயமாயினவென்பதையும் அவதானித்தனர். அத்தனைக்கும் காரணம் அந்த இயந்திர இணைப்பு வேலைகள் சரியான முறையில் நடைபெறவில்லையென்பதேயாகும். அது மட்டுமல்ல அந்த இயந்திரம் மிகவும் பழைய தென்றும் கடைசி நேரத்தில் வெளியானது.

**கம்பனி வேலை**

சுவிற்சர்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த இயந்திரத்தைப் பொருத்தும் பொறுப்பு கொழும்பிலுள்ள

(9-ம் பக்கம் பார்க்க)

'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

# ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

**ஹென்ற்லி (காமென்ட்ஸ்) லிமிடெட்,**
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.


## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# புத்தர் இலங்கைக்கு வந்தாரா ?

கௌதம புத்தர் இலங்கையிலுள்ள மகியங்கனையைத் தரிசித்த வரலாற்றுச் செய்திகள் மகாவம்சத்தில் காணப்படுவதைத் தவிர, வேறு எந்த வரலாற்று நூல்களும் அவர் இலங்கைக்கு வந்ததாகக் கூறவில்லை. மகிந்தா — சங்கமித்தா மூலமாகவே இலங்கையில் பௌத்த மதம் பரவியதென்பர். போதிமாதவர் இலங்கை வந்திருந்தால் அவர்காலத்தில் இலங்கையில் பௌத்தமதம் பரவியிருக்க வேண்டுமல்லவா? அப்படியாயின் மகிந்தாவும் சங்கமித்தாவும் இலங்கை வந்து போதி மரக்கிளை ஒன்றை அநுராதபுரத்தில் நடுவானேன்?

போதிமாதவர் ஞானமடைந்த காலமுதல் மகாபரி நிருவாணம் எய்தியகாலம் வரை அவர் இந்தியாவைவிட்டு வெளியே போனது கிடையாது. எனவே, சரித்திர மேதைகள் இதைப் பற்றி ஈழநாடு இதழில் எழுதினல் உதவியாயிருக்கும்.

அல். ஹாஜ் வி. எம்.
ஷம்சுத்தின்
கொழும்பு-10.

### கல்விப் பகுதியார் கவனிப்பார்களா?

ஆசிரிய தராதரப் பத்திரத்தில் முதலாந்தராதரப்பத்திரம் பெற்று, பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சி முடிந்தவுடன் பயிற்றப்பட்ட முதலாந் தராதரப் பத்திரம் வழங்குவதாயின், மேற்படி தராதரப் பத்திரத்துடன் ஆறு, ஏழு வருடச் சேவை செய்த இரண்டாந் தராதரப் பத்திரம் பெற்ற உபாத்தியாயர்கள் இரு வருடப் பயிற்சி முடிந்ததும், எஸ்.எஸ்.சி. சித்தியடைந்து பயிற்றப்பட்டவர்களுடன் ஒரே தன்மையராக மதிக்கப்படுகின்றனர். அதாவது: மூன்று வருடத்தின்பின் முதலாந் தராதரப் பத்திரம் பெறுவதற்கு உரியவரென்று கணிக்கப்படுகின்றனர். இது நீதியா?

ஆசிரிய தராதரப்பத்திரத்துடன்பயிற்றப்பட்ட ஆசிரியன்,
அல்வாய்.

# முதலிக்குளக் குடியேற்றத் திட்டம்

## படித்த இளைஞர்களின் ஆர்வம்

திருக்கோணமலைப் பிரதேசம் தமிழர் தம் பிரதேசமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், தமிழர் முதலிக்குளம் போன்ற குடியேற்றத் திட்டங்களுக்கு விண்ணப்பித்து அங்கு சென்று குடியேறவேண்டும், எனத் திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. என். ஆர். இராஜவரோதயம் சமீபத்தில் விடுத்த வேண்டுகோள் பெரும் பயன் அளித்துள்ளது. கடற்படைத் தளத்தில் முன்பு தொழில் புரிந்தோர், படித்த இளைஞர்கள், மற்றும் திருக்கோணமலைப் பிரதேசத்தில் பல்லாண்டுகளாக வசிப்போர் பலர் தமது விண்ணப்பப் பத்திரங்களை மாவட்ட அதிபருக்கு அனுப்பியுள்ளனர். இப்பகுதி மக்கள் தற் சமயம் விவசாயத் துறையில் பெரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

### அரசினர் ஆசிரியர் சங்கம் திருமலையில் மாநாடு

திருக்கோணமலை பெருந்தெரு கலவன் பாடசாலையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை திரு. வே. செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வருடம் திருமலையில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்த மாநாட்டுக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டன.

பின் வரும் பிரேரணைகளை மாநாட்டில் சமர்ப்பிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

1. ஐந்துவருட சேவைக்குப் பின் தலைமையாசிரியர் பதவிக்குச் சேவை வரிசைக்கிரம அட்டவணையைப் பாராது தகுதி காண் பரீட்சை மூலம் தெரிவு செய்தல் வேண்டும்.

2. தமிழர் கிய்களர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள் பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைப் பயில்வதற்கு அரசாங்கம் ஒழுங்குசெய்து கொடுத்தல் வேண்டும்.

### இலவச இராப் பாடசாலை

திருக்கோணமலை சவேரியார் பாடசாலை முகாமைக்காரர் வண பிதா பீட்டர்பிள்ளை இங்கு ஓர் இலவச இராப் பாடசாலையினை அமைத்துள்ளார். ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள், எழுது கருவிகள் என்பன இலவசமாக அளிக்கப்படுகின்றன.

### திருமலை நவக்கிரக மண்டபம்

திருக்கோணமலை திரு. விஸ்வநாத சுவாமி சிவன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்படும் நவக்கிரக மண்டபத்திற்கு டக்டர் சி. சித்திரவேலு அத்திவாரக் கல் நாட்டினர்.

இந் நவக்கிரகங்கள் வவனியாவில் உள்ள ஆசாரியினல் உருவாக்கப்படும். பிரதிஷ்டை செய்வதற்கும் கும்பாபிஷேகத்துக்கும் ஏழாயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

### சிவயோக சமாஜம் யாழ்ப்பாணக் கிளை

திருக்கோணமலை சிவயோக சமாஜத்தின் அமைப்பாளர் சுவாமி கங்காதரானந்தாவுடன் இணைந்து யாழ்ப்பாணத்துப் பட்டதாரித் துறவி ஒருவர் சேவைசெய்வார் என எதிர் பார்க்கப்படுகின்றது. இச் சமாஜத்தின் கிளை யொன்றினை நல்லூரில் அமைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. இப்போது அங்கு இச் சமாஜத்தின் ஆதரவில் யோகாசன வகுப்புகள், கூட்டு வழிபாடுகள் நடைபெற்றுவருவதாகத் தெரிகிறது.

### திருமலை நகரமண்டபம்

திருக்கோணமலையிற் கட்டப்பட்டுவரும் நகரமண்டபத்தின் கீழ்ப்பகுதிக் கட்டிட வேலைகள் முடிவடைந்து கொண்டிருக்கின்றன. இக் கட்டிடத்தை ஜூன் மாதத்தில் மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலகா அவர்கள் திறந்துவைக்க, பட்டினசபைத் தலைவர் திரு. பா. நேமிநாதன் ஏற்பாடு செய்து வருவதாக வதந்திகள் அடிபடுகின்றன.


வாழ்க்கையில் இன்பந்தருவது எது?
உங்கள் வனப்பைக் காட்டும்
மங்களகரமான புகைப்படங்கள் தான்!
தத்ரூபமான புகைப்படங்கள் பிடிக்க

**பாரத் ஸ்ரூடியோ**
தயாராயிருக்கிறது.

யாவரும் விரும்பும் எல்லாவித சந்தர்ப்பங்களிலும்
**போட்டோ பிடிக்க அழையுங்கள்**

**BHARAT STUDIO** PHOTOGRAPHERS
Phone 252 Grams BHARATFOTO
82/1, Kasturiar Road, JAFFNA



உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்ரிங் முதலிய வேலைகளுக்கும் உகந்த இடம்




**சுந்தரம்ஸ்**
**பற்றறி சேவிஸ்**

402, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்


## வரி விளம்பரம்


### தேவை

நகரசபை எல்லைக்குள் ஒரு வீடு தேவை. த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.

சிறந்த முறையில் "ரைப் றைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரு, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ருவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்து படிப்பதற்கு, ஜோஸ் அன்ரு, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ருடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

திறமையுள்ள பைன்டர்கள் (Binders) தேவை. கலாநிலைய பதிப்பகம், P. O. Box 49, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

கொழும்புத்துறையில் மடத்திற்கருகில் வீடு வாடகைக்கு விடப்படும். த. பெ. இல. 49, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப் —கே. கே. எஸ். ரூேட், யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள நகைகளுக்கு, து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

குறித்த தவணையில் விரும்பிய டிசைனில் ஆர் நகைகள் செய்வதற்கு து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

புதிய டிசைனின் நெக்லஸ் முதலியன வேண்டுமானல், து. கிருஷ்ணசாமி அன் பிறதர், 55, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.


### இலங்கைச் சகோதரர் சங்கம்

இச் சங்கத்தின் பகிரங்கப் பொதுக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை திரு. க. கதிரவேலு தலைமையில் நடைபெற்றது. யாழ்ப்பாணச் சுடாநாட்டுச் சலவைத் தொழிலாளர்கள் குழுமியிருந்தனர். காரியதரிசியின் அறிக்கை சபையில் வாசிக்கப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அடுத்தாண்டிற்குரிய உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. க. கதிரவேலு. உபதலைவர்கள்: திரு. சி. நடேசன், திரு. கா. சின்னத்துரை. காரியதரிசகள்: திரு. கு. இ. நடராசா, திரு. மு. கந்தையா. தனாதிகாரிகள்: திரு. வ. சின்னத்தம்பி, திரு. சி. கந்தையா. இருபத்திரு அங்கத்தினர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதாரம்

## அதன் விருத்தியும் செயலாற்றும் முறைகளும்

கு. நாராயணசாமி

இன்றைய அரசியற் சூழ்நிலையில் தமிழ் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தமது நாட்டிலேயே உண்டுபண்ணுவதில் அக்கறை காட்டவேண்டியது அவசியம். சமீபகாலத்தில் இலங்கையிலே தோன்றிய கலவரங்கள் தமிழ் மக்களிடையே பீதியையும் அமைதியின்மையையும் உண்டாக்கியவிடத்தும் அது, அவர்களின் விழிப்புக்கும் வித்திட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை. அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்து எமது வாழ்க்கையைச் சொகுசாகக் கடத்திய காலம் மீண்டும் வரப்போவதில்லை. எமது பிறந்த நாட்டை வளமிக்க பிரதேசமாக்குவதிலேதான் எமது எதிர்காலம் தங்கியிருக்கின்றது. ஆனல் வரண்ட பிரதேசமாகிய யாழ்ப்பாணத்தை வளமிக்க பிரதேசமாக ஆக்குவதென்பது சுலபமான செயலன்று. இயற்கைக் கெதிராக நாம் போராடவேண்டிய கட்டம் வந்துவிட்டது. முயற்சி எடுத்தால் அதில் நாம் வெற்றி காண்பது நிச்சயம். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டிய தொண்டுகள், கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் முதலியவற்றை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### விவசாயம்:

யாழ்ப்பாணமக்களிற் பலர் நெற்பயிர்ச்செய்கையையே தமது வாழ்வுக்கு ஊதியமளிக்கும் தொழிலாகக் கைக்கொண்டிருக்கின்றனர். ஆனல் நெற்பயிர்ச் செய்கையினல் முழுப் பயனும் அடைய வேண்டுமானல் மக்கள் இன்றுவரையும் பின்பற்றிவரும் பழைய நெற்பயிர்ச் செய்கை முறைகளைக் கைவிட்டு விஞ்ஞானயுகம் அளித்துள்ள நவீன வசதிகளைக் கைக்கொள்வது அவசியம். மழையை நம்பி விவசாயம் செய்யும் எமது மக்கள் ஒரு போகமே நெற்பயிர்ச்செய்கை செய்ய முடிகின்றது. ஆனல் அந்த ஒரு முறையில்தானும் அதிக பயனடைகிருர்களில்லை. எனவே, உழுதல், விதைத்தல் நாற்று நடுதல், பசளையிடுதல் முதலிய பல துறைகளிலும் நவீன வசதிகளைக் கையாள வேண்டும். அத்துடன் யப்பானிய முறையைத் தழுவி அவர்கள் நெற்சாகுபடி செய்தால் விளைச்சல் இப்பொழுதிலும் பார்க்க அதிகமாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. கேகாலை, குருநாகல் முதலிய பகுதிகளில் யப்பானிய முறையைக் கையாண்டதினல் அதிக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் படித்த விவசாயிகள் சிலர் இம்முறையைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கிருர்கள். ஆனல் பல ஏழைவிவசாயிகளும் இதைக் கடைப்பிடித்தால் அவர்கள் முயற்சி அதிக பலனளிப்பது நிச்சயம்.

### பணவசதி உண்டா?

விவசாயிகள் நவீனமுறைகளைக் கையாளவேண்டுமென நாம் கூறும்போது அவர்கள் அத்தகைய முறைகளைக் கையாளப் பணவசதியுண்டா? பணமிருந்தாலும் கூட அவர்களது சிறு நிலப் பிரதேசங்களில் நவீனமுறைகளைப் புகுத்த முடியுமா? என்ற கேள்விகள் எழுகின்றன. பல விவசாயிகளிடம் பணவசதியில்லை. இதற்குக் கூட்டுறவு இயக்கத்தில் உதவியை நாடலாம். ஐக்கியநாணய சங்கங்கள் இதற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, சுரண்டிவாழும் நோக்கத்தையுடைய தனிப்பட்டவர்களிடம் கடன் பெருது ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாகக் குறைந்த வட்டியில் பணத்தைப் பெறலாம். ஆனல் யாழ்ப்பாண மக்கள் விவசாய நிலத்தைப் பிரித்துப் பங்குபோட்டுத் தமது மக்கட்குச் சீதனமாகக் கொடுப்பதால் கூடிய தொகுப்பாக நிலத்தைவைத்து விவசாயம் செய்கிருர்களில்லை. இந்தநிலை யாழ்ப்பாணச் சூழ்நிலையில் மாற்ற முடியாததொன்றெனினும் அது மாற வழியுண்டு. கூட்டுப் பண்ணை முறையை மக்கள் பின்பற்றினல் விவசாயத்தில் வெற்றிகாணமுடியும். இந்தியாவில் சமீபகாலத்தில் இந்த முறையையே அரசாங்கத்தார் புகுத்தியிருக்கின்றனர். இதனல் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் இப்பொழுது பிரசாரம் செய்துவருகிருர்கள். நாகபுரியில் இவ்வாண்டு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் இம்முறையை நாடுமுழுவதும் திறமையாகக் கையாள வழிகள் வகுக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப் பட்டிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் புதிய முறைகளை மக்களிடையே வாலிபர், விவசாயக்கழகங்கள் மூலம் பிரசாரம் செய்வது இன்றியமையாததாகும்.

### சிறு தானியங்கள்

அரிசியையே நாம் முக்கிய உணவுப் பொருளாகக் கருதுகிரும். அரிசிக்குப் பதிலாக வரகு, குரக்கன், சாமி முதலிய தானியங்களையும் நாம் உபயோகித்துப் பழகுவது அவசியம். நெல் விளைவிப்பதற்கு நாம் சிரமப்படுவது போல் இச்சிறு தானியங்களுக்குச் சிரமப்படத் தேவையில்லை. எனவே நெல் விளைச்சல் இயற்கைக் காரணங்களால்குறைந்தகாலத்தில் நாம் இத் தானியங்களை உண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ஆங்கிலேயர், நாட்டில் எதிர்பாராத அசம்பாவிதங்களால் கோதுமை விளைவு குறைந்தால், அவர்கள் அதற்குப் பதிலாக வேறு தானியங்களை (கம்புபோன்ற தானியவகை) உட்கொள்கிருர்கள்.

எமதுசுயதேவைக்கான காய்கறிவகைகளை அநேகமாகநாமே உற்பத்தி செய்கிரும். ஆனல் பல புதிய காய்கறிவகைகளை நாம் சிறந்த முறைகளைக் கொண்டு உண்டாக்க முடியும்.

உருளைக்கிழங்கு முட்டைக்கோவா யாழ்ப்பாணத்தில் சில இடங்களில்விளைவிக்கப்படுகின்றன. இதைநாம் மேலும்விருத்தி செய்யவேண்டும். நல்ல பசளையிட்டு இவற்றைப் பல பரந்த ஏக்கர் நிலங்களில் நாம் உற்பத்திசெய்யவேண்டும். மரவள்ளிக்கிழங்கு பலவித உபயோகங்களுக்கு உகந்தது. ஆனல் இது எம்மக்கள் பலருக்குத் தெரியாது. மரவள்ளிக்கிழங்கு மாவாக்கப்பட்டுப்பலவித உணவுவகைகள் செய்யப்படுகின்றன. மரவள்ளி மாவைக்கொண்டு செயற்கை அரிசியும் செய்ய முடியுமென இந்தியாவிலுள்ள மைசூர் உணவு ஆராய்ச்சிக்கழகத்தால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மரவள்ளிக்கிழங்கைநாம் சோற்றுக்குப் பதிலாக ஏன் வாரமொருமுறையாக உண்ணக் கூடாது? புடைவை உற்பத்திக்குத்தேவையான கஞ்சிப்பசைக்கும் இக்கிழங்கு உபயோகப்படுமென ஆராய்ச்சியாளர் நிரூபித்திருக்கின்றனர். எனவே, நாம் இக்கிழங்கை அதிகமாகப் பயிரிட்டு அதனல் பெறக்கூடிய பல நன்மைகளையும் பெறுவது சிறந்ததாகும்.

வெங்காயம், மிளகாய் முதலிய தோட்டப் பயிர்ச் செய்கைகளிலும் பலமுன்னேற்றமடைய இடமுண்டு. சிறு வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் எம்மவர்கள் பெரு வெங்காயம் (பம்பாய் வெங்காயம்) உற்பத்தியிலும் ஈடுபடவேண்டும். இது இங்கு வெற்றியீட்டக் கூடிய அளவிற்குஉற்பத்தி செய்யலாம் என அறியக்கிடக்கிறது.

### புகையிலை

யாழ்ப்பாணத்து மக்களது பிரயாசைக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது புகையிலைச் செய்கையாகும். யாழ்ப்பாண மண் புகையிலை விருத்திக்குச் சிறிது உகந்ததாயினும், மக்களுடைய சலியாத உழைப்பின்றி செடிவளரக் கூடிய சுவாத்தியமில்லை. அதிக பிரயாசையின் பின் பலனளிக்கும் இச் செடி யாழ்ப்பாண மக்களது ஒரேயொரு பணப்பயிராகவும், சுருட்டுத் தொழிலுக்கு உயிர்நாடியாகவுமிருந்து பல ஆயிரக்கணக்கான தொழிலாளிகட்கு வாழ்வளிக்கிறது.

சிகரெட் புகையிலையும் யாழ்ப்பாணத்திற் பயிரிடலாம் எனத் திருநெல்வேலி கிருஷிகத்தோட்டத்தில்அரசாங்கத்தார் 1915-ம் ஆண்டு பரீட்சித்துப் பார்த்து முடிவு கட்டினர். இதன் பயனுக இப்பொழுது ஏறத்தாழ 2000 ஏக்கர் வரையில் சிகரெட் புகையிலை பயிரிடப்படுகிறது. சிகரெட் புகையிலை மேலும் பல ஏக்கர்களில் பயிரிடப்பட்டு சிகரெட் தொழிற்சாலையுமமைத்து சிகரெட் உற்பத்திசெய்ய முயலவேண்டும். மக்கள் ஆர்வம் காட்டினல் இது கட்டாயமாக வெற்றியளிக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மக்கள் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. அதே சமயம் வேலையில்லாத் திண்டாட்டமும் வளர்கிறது. இதைத் தடுத்து நிறுத்தி மக்கள் சுக வாழ்க்கை நடாத்த வேண்டுமாகில் இன்றுவரை செய்தது போலன்றி அரசாங்க குடியேற்றத் திட்டங்களில் குடியேற வேண்டும். அதேசமயம் பல விருத்தியடையாத கைத்தொழில்களை விருத்திசெய்வதுடன் புதிய கைத்தொழில்களில் ஈடுபடுவதும்அத்தியாவசியமாகும்.

### கைத்தொழில்

மக்கள் வாழ்வுக்கு முக்கியமான பொருள்களில் உடையும் ஒன்ருகும். எமக்குத் தேவையான உடைவகைகளை ஓரளவிற்கு நாமே உற்பத்திசெய்யக்கூடிய வசதிகள் இங்கேஉண்டு. நெசவுத்தொழில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலும் சிறுபான்மையாக இருந்து வருகின்றது. பணமுடையவர்கள் முதலீடுசெய்தால் நெசவுத் தொழிற்சாலைகள் அதிக பலனைத்தரலாம். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பெருமக்கள் பலர் முதலீடு செய்து பருத்தித்துறையில் ஒரு பிரமாண்டமான நெசவுத் தொழிற்சாலையைத் திறக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துணுக்காய்ப்பகுதியில் பருத்திச்செய்கைக்கான சுவாத்தியம் உண்டெனப் பல வெளிநாட்டு நிபுணர்கள் ஆராய்ச்சியின் பின் கண்டுபிடித்திருக்கின்றனர். இதற்காகத் துணுக்காயில் 3000 ஏக்கர் நிலம் அரசாங்கத்திடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இந்நிலத்திற் பருத்தி பயிரிடும் வேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

பருத்தித்துறையில் நிறுவப்படவிருக்கும் நெசவுத் தொழிற்சாலை யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான வேட்டி, சால்வை, துவாய், சாரம், பப்ளின் வகைகள்; சேலைகள், ரவுக்கை வகைகள்; ரசூர் வகைகள் முதலியவற்றை உற்பத்தி

(15 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவுக் கொள்கை நல்லதா? கெட்டதா?

கூட்டுறவுக் கொள்கையைப் பற்றித்தான் இப்பொழுது இலங்கையிலும் இந்தியாவிலும் அரசியல் தகராறு ஏற்பட்டுள்ளது. இலங்கையில், உணவு அமைச்சர் தயாரித்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி வங்கி மசோதாவைக் குறித்து, மந்திரிகளுக்குள்ளாகவே பலத்த கருத்து வேற்றுமை. இவ்விஷயத்தைமந்திரிசபையில் முடிவுசெய்யாமல், அரசாங்கக் கட்சிக் கூட்டத்தில் விவாதித்து முடிவுசெய்ய வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இவ்விஷயம் ஏப்ரல் மாதம் 7-ம் திகதியன்று அரசாங்கக் கட்சிக்கூட்டத்தில் விவாதத்துக்கு வரும். இம்மசோதா சட்டமானல் உணவுமந்திரியின் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்துவிடுமென்பது எதிர்ப்பாளர்கள் கூறும் ஆட்சேபம்.

இதேசமயம் இந்தியாவில், நாகபுரிக் காங்கிரஸ், கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டுமென்று பலத்த விவாதத்துக்குப் பிறகு தீர்மானித்தது. அதற்கு ஆரம்பமாக சேவைக் கூட்டுறவுச் சபைகளை நாடெங்கும் அமைக்கவேண்டும் என்று செய்த முடிவை, சென்றவாரம் லோக் சபை ஒப்புக்கொண்டது. கூட்டுறவு விவசாயம் ஏற்படின், சாகுபடி குறையுமென்றும், தனிப்பட்ட கமக்காரருக்கு விவசாயத்தில் உற்சாகம் குறைந்துவிடுமென்றும் தெரிவிக்கப்பட்டது. நேருஜி இதை மறுத்து, சிறு விவசாயிகளுக்குக் கூட்டுறவு முறையால் அதிக நன்மை ஏற்படுமென்ருர்.

சரியாகவோ, தவருகவோ இப்போது எல்லாத் துறைகளிலும் கூட்டுறவுக் கொள்கை இந்தியாவிலும் இலங்கையிலும் பரவிவருகின்றது. இதுபற்றிச் சாதகமாகவும் பாதகமாகவும் வெளியான கருத்துக்களைக் கவனிப்போம்.

### மஸானி எதிர்ப்பு

"கூட்டுறவுப் பண்ணையின் ஆபத்து" என்ற தலைப்பிலே, இந்திய லோக் சபைப் பிரதிநிதி எம். ஆர். மஸானி, இந்த யோசனையைப் பலமாக எதிர்க்கின்ருர். அவர் கூறியதாவது:-

நான் கூட்டுறவு முறையை ஆதரித்துவந்துள்ளேன். பம்பாயில் கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்தவர்களில் நானும் ஒருவன். கூட்டுறவில் பலவிதங்கள் உண்டு. கமக்காரர்களுக்குக் கடன், டிராக்டர், விளைவு நெல், உரம் முதலியவைகளையுதவும் சேவைக்கூட்டுறவு ஸ்தாபனங்களால் நன்மை உண்டு. சாகுபடி விற்பனைக் கூட்டுறவு ஸ்தாபனங்களும் அவர்களுக்கு உதவக் கூடும்.

ஆனல் ருஷிய—சீன முறையில் நடக்கும் கூட்டுப் பண்ணையைக் கூட்டுறவு என்று கூறமுடியாது. விவசாயிகளிடமிருந்து கூடுமான சாகுபடியைப்பறித்துச் சர்வாதிகாரியிடம் ஒப்புவிப்பதற்கே அது உதவும். அவையனைத்தும் ராணுவ பூதத்துக்கு இரையாகும். நாகபுரி காங்கிரஸ் தீர்மானப்படி விவசாயி தன் சொந்த நிலம் என்ற உரிமையையும் உற்சாகத்தையும் இழப்பர். சொத்துரிமை என்பது வெறும் துண்டுக் கடதாசியாகும்.

### ருஷியாவின் தவறு

இதனல் உற்பத்தி பெருகும் என்று ஒரு காரணம் கூறப்படுகிறது. ஆனல் கம்யூனிஸ்ட் நாடுகளிலும், வேறு தேசங்களிலும் உற்பத்தி குறைந்துள்ளன. தனிப்பட்டவர் நடத்தும் சொந்தப் பண்ணையில் உற்பத்தி அதிகமாகவுள்ளது. இந்தியாவிலே எருதுகட்டி உழுத நிலத்தில் 410 மணங்கு கரும்பு உற்பத்தியாகியிருக்க, டிராக்டரால் உழுத நிலத்தில் 356 மணங்குதான் உற்பத்தியாகி உள்ளது. எருதுகள்மூலம் உற்பத்தி அதிகமாகும். யூகோஸ்லேவியாவிலும், போலந்திலும் கூட்டுறவுப் பண்ணைகளால் உற்பத்தி குறைந்துவிட்டதால், அங்கு அவற்றை மாற்றி, தனிப்பட்ட விவசாயிகளின் பொறுப்பிலேயே மீண்டும் சாகுபடி நடத்துகின்ருர்கள். மேலும் கூட்டுறவுப் பண்ணையாலும், யந்திரங்களை அதிகமாகப் பாவிப்பதாலும் வேலையில்லாக் கஷ்டம்பெருகும். ருஷ்யாசெய்த தவறை இந்தியா செய்யக் கூடாது என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் பீவான் எச்சரித்துள்ளார். ஆசார்ய விநோபாவேயின் கிராமதான இயக்கத்திற் கிடைத்த லகாரப் பேட்டைக் கிராமத்தில் விவசாயிகள் கிராம நிலத்தைக் கூட்டாகச் சாகுபடிசெய்ய விரும்பவில்லை. விவசாயி தன் சொந்தத்தில் ஏதாவது நிலம் வேண்டும் என்றே ஆசைப்படுகிருன். மனிதன் இயற்கையிற் சுயநலமான பிராணி. நாம் மனிதனுக்காகச் சட்டம் செய்யப்போகிருேமா? அல்லது......தேவைகளுக்கா?

### ஆபத்தான விஷயம்

கட்டாயச் சட்டமூலம் நிலங்களைப் பறிப்பதாயின் உள்நாட்டுச் சண்டையெனும் பெரிய ஆபத்துக்கள் விளையும். அரைகுறைத்திட்டங்களால் பெருநஷ்டம் ஏற்படும். உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற உற்சாகம் விவசாயிக்கு இல்லாமற் போகும். கூட்டுப்பண்ணை முறையை இராஜாஜி, கே. எம். முன்ஷி, ஸ்ரீ ஜயபிரகாஸ் நாராயணன் முதலியோர் பலமாக

(7 ஆம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# இருதார மணம்

தேவன் — யாழ்ப்பாணம்

சினிமாவிலும் சிறுகதைகளிலும் நடக்கமுடியாத சம்பவம் சின்னத்தங்கச்சியின் வாழ்க்கையில் நடந்தது. இருபத்து மூன்று வருஷங்களுக்கு முன்பு அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்ததைச் சொல்லவில்லை. அவர்கள் வளர்ந்து ஒருவருக்கு அடடா! அந்த இரண்டும் பெண்கள் என்பதை முன்பே சொல்ல மறந்துபோய் விட்டது. அவர்களில் ஒரு பெண்ணுக்குக் கல்யாணமான பிறகுதான் இவ்வளவும் நடந்தது.

அந்த இரண்டு பெண்குழந்தைகளுக்கும் கண்மணி, சிந்தாமணியெனப் பெயரிட்டு வளர்த்தாள். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இம்மாதிரிப் பெயர்கள் 'பாஷனா'யிருந்தன. இப்போது இரண்டெழுத்து மூன்றெழுத்துப் பெயர்கள் நாகரிகமாயில்லையா, அதைப்போல. இருவருக்கும் ஒரே மாதிரி, ஒரே நிற உடைகள் வாங்கிக் கொடுத்தாள். இதென்ன, தகப்பனில்லாத குழந்தைகளா, எல்லாமே தாய்செய்தது என்று கூறுவதற்கு என்று கேட்டால், சின்னத் தங்கச்சிக்குக் கணவன் இருந்தும் இல்லாததுபோலத்தான். திடகாத்திரமான தேகம் படைத்தவனாயிருந்தும் ஒரு விபத்தில் அகப்பட்டதன் காரணமாகக் கையில் ஒரு நடுக்கம். எந்த வேலையும் அவனால் செய்ய முடியாது. ஆகவே, சின்னத் தங்கச்சிக்குக் குடும்ப பாரத்தைத் தாங்கும் பொறுப்பு ஏர்பட்டது.

கொண்டு வந்த ஸ்ரீதனத்தையும் உழைப்பையும் விவேகத்தையும் மூலதனமாகக் கொண்டு முன்னேறிக் கொஞ்சம் மிச்சமும் பிடித்து இருபது ஆண்டுகளைத் தள்ளிவிட்ட பிறகு பெண்களின் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்கலானாள். இருவரும் தோற்றத்தில் ஒரே மாதிரியிருந்தார்கள். உருவம் மட்டும் ஒத்திருந்ததே தவிர குணமும் நடத்தையும் வெவ்வேறாயிருந்தன. ஒரே பந்தலில் இரண்டு கல்யாணங்களையும் நடத்திவிட்டால்...... நல்ல யோசனை! ஆனால் இரண்டு மாப்பிள்ளைகளுக்கு எங்கேபோவது? எங்கேயாவது இரட்டைக் குழந்தைகள் ஆண்களாக இருந்தால்...... அடடா! ஆசையைப்பார்! தினமும் எல்லோருக்கும் இரட்டைக் குழந்தைகளா பிறக்கின்றன?

வாகீசன் வந்தான், பெண் பார்க்க. இரண்டு பெண்களும் அலங்கரித்துக் கொண்டு நின்றார்கள். 'இவள் தான் பெண்' என்று முன்னால் கூட்டி வந்து 'பாடத் தெரியுமா, ஆடத் தெரியுமா" என்று பரீட்சிப்பது இந்த ஊர் வழக்கமில்லையே. 'முன்னால் நிற்கிறவள்' என்று காட்டினார்கள். முன்னால் நின்றவளுக்கும் பின்னால் நின்றவளுக்கும் தான் வித்தியாசமில்லையே! அவனுக்குப் பிடித்துவிட்டது. யாரை? கண்மணியையா சிந்தாமணியையா?

கண்மணி அடக்கமானவள்; கலகலப்பாகப் பேசமாட்டாள். சிந்தாமணி கொஞ்சம் நோஞ்சான். ஆனால் சிரிப்பும் குதிப்புமாக இருப்பாள். இதையெல்லாம் எங்கே கண்டான் வாகீசன். சரியென்று சொல்லி விட்டான். அவனுக்கு வகை சொல்ல, வழிகாட்ட ஆளில்லை. கன்னியைக் காட்டினார்கள், கண்ணைமூடிக்கொண்டு கல்யாணத்துக்குச் சம்மதித்தான்.

'யாராவது கல்லுக்குத்தி' விட்டாலும் என்ற அச்சத்தில் மேற்கொண்டு கருமங்கள் விறு விறு என்று நடைபெற்றன. சமயாசார முறைப்படி விவாகம் நிறைவேறுவதற்கு முன்னரே சட்டபூர்வமான விவாகப் பதிவு நடைபெற்றது. விவாகப் பதிவுகாரர் இருவரையும் பதிவுப் புத்தகத்திற் கையெழுத்திடச் செய்தார். அதன்பின் ஒரு பிரசங்கமே செய்தார். "சமயாசாரப்படி அல்லது சாதியாசாரப்படி கல்யாணம் நடக்காது போனாலும் நீங்களிருவரும் இன்று தொடக்கம் கணவன் மனைவியாகி விட்டீர்கள்...... இக்கல்யாணப் பதிவு மாவட்ட நீதி மன்றத்தினால் தள்ளப்பட்டாலன்றி, அல்லது இருவரிலொருவர் காலஞ் சென்றாலன்றி இன்னொரு கல்யாணம் செய்து கொண்டால் இலங்கை பீனல் கோட்டிலுள்ள சட்டத்துக்கிணங்க இருதார மணம் புரிந்த குற்றத்துக்குள்ளாகி அதற்குரிய தண்டனைக்கு ஆளாவீர்கள் என எச்சரிக்கை செய்கிறேன்." இவ்வாறு அவர் கூறி முடித்த போது வாகீசனும் கண்மணியும் பயபக்தியுடன் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். பதிவுகாரரின் மீசையும், கண்ணாடியும், பெரிய சந்தனப் பொட்டும், விரலுக்குப் பதிலாகச் சுட்டிக் காட்டுவதற்கு அவர் உபயோகித்த தடித்த 'பௌண்டன்' பேனாவும் சிந்தாமணிக்குச் சிரிப்பையுண்டுபண்ணின. கண்மணிக்குப் பின்னால் முகத்திற் புன்னகை தவழ நின்றாள்.

இரண்டு மாதங்களுக்கிடையில் திருமணமும் கோலாகலமாக நடைபெற்றது. சின்னத் தங்கச்சி கெட்டிக்காரி. செட்டாக, சிக்கனமாகக் காரியத்தை முடித்து விட்டாள். ஆனால் வெளிப்பார்வைக்குக் குறைவில்லாமல் மேளதாளம், ஊர்வலம், அலங்காரம் பலகாரம் எல்லாம் குறைவில்லாமல் ஏற்பாடாகியிருந்தன. தனிக்குடித்தனத்துக்குக் கண்மணி கணவனோடு புறப்பட வேண்டியிருந்தது. கைக்கு அடங்கிய பிள்ளையாய் வீட்டோடு வாழ்ந்தவளுடன் கூடவே சென்று எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்துவிட்டுக் கொஞ்ச நாட்களின் பின் திரும்பலாம் என்று சின்னத்தங்கச்சி நினைத்தாள். தன் கணவன் கதி என்னவது என்று கலங்கினாள். எல்லாம் தெரிந்த வாயாடியாக, வல்லமை படைத்தவளாக உள்ள சிந்தாமணியின் விஷயத்திலானால் இப்படிக் கவலைப்பட நேராது.

கணவனும் மனைவியும் சினிமாவுக்குப் போகும்போது குதித்துக்கொண்டு சிந்தாமணியும் போய்விட்டாள். வாசலில் கார்வந்து நின்றதும் "என்ன அத்தான், செருப்பைக்கூடக் கழற்றாமல் நேரே வீட்டுக்குள்ளே வருகிறீர்களே?" என்று சிந்தாமணி கேட்டதும் காதில் விழுந்தது. எவ்வளவு திறமைசாலி? அன்பு, கனிவு, எதிலும் குறைவில்லை. கருமத்திலும் கண். பெண் என்றால் இப்படியல்லவா பிறக்கவேண்டும். சொல்லுவார் புத்தி கேட்கிற, எதற்கும் பயந்து நடுங்குகிற கண்மணி என்ன செய்யப் போகிறாள்? சின்னத் தங்கச்சிக்கு ஒரு யோசனை 'பளிச்' சிட்டது. துணைக்குச் சிந்தாமணியை அனுப்பிவைத்தால்...

அப்புறமென்ன? கண்மணியுடன் சிந்தாமணியும் ரயில் ஏறினாள். சந்தித்த நண்பருக்கு எவள் தன் மனைவியென்று சொல்லிக்காட்டுவதே வாகீசனுக்குப் பெரிய சிரமமாகி விட்டது. தோற்றத்தில் ஒற்றுமையைத் தவிர்க்க உடையிலாவது வேற்றுமையைப் புகுத்தியிருக்கவேண்டும். அதுவும் இல்லை. மெதுவாகக் கண்மணியிடம் விஷயத்தை விளக்க வேண்டும் என்று அப்போது எண்ணினான்.

அவன் வேலைபார்த்த இடம் கொழும்பு. அங்கிருந்து பத்து மைலுக்கு அப்பால், பட்டினத்தின் வெளியோரக் கிராமம் ஒன்றில் அவனுக்குக் கட்டுபடியாகக்கூடிய வாடகையில் ஒரு வீட்டையமர்த்தி இருந்தான். அங்குபோய்ச் சிலமாதங்களிற் கல்யாண சுவாரசியத்தின் புது மெருகு மறைந்தது. கண்மணியின் கவர்ச்சி குன்றிவிட்டதாகப்பட்டது. எதைச் சொன்னாலும் ஏதென்று கேட்காமல் நசிந்து பணியும் கண்மணியிடத்தில் அவன் கசப்படைந்தான்.

ஆனால்... இதிலே புதுமை என்ன இருக்கிறது? 'அத்தான்' என்று கணீரென்று கொக்கரிக்கும் சிந்தாமணி, தகாததைச் சொன்னால் சகோதரிக்காகப் பரிந்து சண்டை போடும் சிந்தாமணி அவன் கருத்தைத் தொட்டாள். விறைப்பாய் நிமிர்ந்து நிற்கும் மரத்தைத்தான் பாய்ந்தோடும் ஆறு முட்டித் தள்ளுகிறது. மரமும் விழுகிறது. ஆனால் வளைந்து கொடுக்கும் புல்லை அது தடவிவிட்டுச் செல்கிறது.

பத்து நாள் நிற்கவென்று வந்தவள், மாதமொன்றாகியும் ஊருக்குத் திரும்பவில்லை. சின்னத் தங்கச்சி கடிதம் எழுதினாள், "உடனே வா" என்று. ரயிலிலே கூடிக் கொண்டுவர வசதியாகத் துணை கிடைத்ததும் வருவதாகப் பதில் வந்தது. வாகீசனின் போக்கைக் கண்மணி உணராமல் இல்லை. எதிர்த்தால் எல்லாம் தலைகீழாகிவிடுமோவென்று ஏங்கினாள். எதிர்த்தே பழக்கமில்லாதவளுக்கு, அடிமையாக வாழ்வதே இன்பம் என்று நினைப்பவளுக்கு இது வாழ்க்கையிலே தவிர்க்கமுடியாத அம்சம் என்று பட்டது.

ஊரிலிருந்து வந்த ஒருவர் சிந்தாமணியை அழைத்துவரும்படி சின்னத்தங்கச்சி சொல்லி விட்டதாகக் கூறினார். சின்னத் தங்கச்சி திடீரென்று முடிவு பண்ணினாளே ஒழிய, அவளுக்கு இரண்டு பெண்களையும் பிரிந்திருப்பது கஷ்டமாய் இருந்தது. கலகலப்பாகவிருந்த வீட்டில் 'உம்மணாமூஞ்சி'மாதிரி இருப்பது கசந்தது. அத்துடன் தான் செய்தது தவறோ என்ற ஐயமும் எழாமல் இல்லை. வாழ்க்கையில் எவ்வளவையோ கண்டவளுக்கு இதை உணர்வது முடியாத காரியமா?

தன்னால் வரமுடியவில்லை. தகப்பனாலும் முடியாது. அயலவன் ஒருவன் கொழும்புக்குப் போவதை அறிந்ததும் ஒத்தாசை கேட்டாள். இவ்வளவுக்கும் இடையில் மூன்று மாதங்கள் ஓடி விட்டன.

சிந்தாமணி வருவாளென்று காத்திருந்த சின்னத் தங்கச்சிக்கு வாகீசனின் கடிதந்தான் வந்தது. 'கண்மணி கர்ப்பிணி ஆகிவிட்டாள். இன்னுமிரண்டு மாதங்களில் அவளை ஊரில் கொண்டுவந்து விடுகிறேன். அதுவரை...' பேரப்பிள்ளையைக் காணப்போகிறோமென்று குதூகலிப்பதா? பெற்ற பிள்ளையைக் காணோமே என்று குமுறுவதா என்று தெரியவில்லைச் சின்னத்தங்கச்சிக்கு. 'பொறுப்போம்... வரட்டும்' என்கிற முடிவைத்தவிர வேறெதுவும் தென்படவில்லை, அவளுக்கு.

கடைசியில் அவர்கள் மூவரும் வந்துசேர்ந்தார்கள். கண்மணி தாயைக் கண்டதும் களிப்புக்கடலில் மூழ்கினாள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பின் வாகீசன் திரும்பவேண்டியிருந்தது. சிந்தாமணியும் பெட்டி படுக்கையைத் தயார் பண்ணுவதைக்கண்ட சின்னத் தங்கச்சி 'என்னடி?' என்றாள்.

“அம்மா, அத்தான் வரட்டுமாம். கொஞ்ச நாளைக்குத் தானே” என்றாள் சிந்தாமணி.

சின்னத்தங்கச்சி புருவத்தை நெரித்தமாதிரியைப் பார்க்க வேண்டும்! அதில் நாணேற்றியிருந்தால் சிந்தாமணி சிம்பு சிம்பாகியிருப்பாளென்றுதான் தோன்றும். அவள் வாயைத் திறப்பதற்குள் எங்கிருந்தோ வாகீசன் வந்துசேர்ந்தான்.

“ஏன் மாமி அவள் இங்கேயிருந்தால் உங்களுக்குக் கஷ்டம்தானே? என்னோடு வரட்டும்” என்றான். இருபத்து மூன்று வருஷங்களாகக் கஷ்டமில்லாமல் இப்போது என்ன வந்தது என்று அவளுக்குக் கேட்கத் தோன்றியது. ஆனால் மருமகனுடன் மரியாதைக் குறைவாகப் பேசநேர்ந்தாலும் என்று சும்மா போய்விட்டாள்.

தன் கணவனிடம் 'கேட்டீர்களா?, என்றாள். அவன் கேட்டாலும் சரிதான், கேளாவிட்டாலும் ஒன்றுதான். கண்மணியிடமே நேரிற்கேட்டாள். அவள் “தடுக்காதீர்கள் அம்மா, போகட்டும்” என்றாள். சின்னத்தங்கச்சிக்குக் கதைகளிலேகூட இப்படி நடக்காதே என்றுதான் தோன்றியது.

மறுநாள் வாகீசனும் சிந்தாமணியும் கொழும்புக்குப் போனது உண்மை. இருதாரக் குற்றத்துக்குத் தண்டனையுண்டு சட்டப்புத்தகத்திலே. ஆனால் இது இருதார மணம்தானா? இதில் நடவடிக்கை எடுப்பது யார்? எப்படி? சுற்றிவளைத்துச் சொல்வானேன்? சிந்தாமணியும் வாகீசனும் தெய்வீக உறவு பூண்டு வாழவில்லைத் தான். ஆனால் அதற்கு மீட்சி எது? மீட்சிக்கு மார்க்கமெது?

இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்றோ - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

புதியமலாயன்அப்போதிக்கரீஸ் கம்பெனி

268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

# பெருவாழ்வே நல்லறம்

மு. சு. அருள்சாமி

[தமிழ்த் துறைத் தலைவர், லோயொலாக் கல்லூரி சென்னை]

பிள்ளைப் பருவத்தில் பள்ளிக்குச் சென்ற நாளில் நம் முதல் வகுப்பு ஆசிரியர் கற்றுக்கொடுத்த முதல் நீதி "அறஞ் செய விரும்பு" என்பதே. ஔவைப்பாட்டியின் அறிவுரை என்று கூறி ஆர்வம் ஊட்டினூர். இதன் பொருளைப் பிஞ்சு மனத்திற் பதியவைப்பதற்குப் பெருமுயற்சி செய்தார். "தருமம் செய்ய ஆசைப்படு" என்று நாள் தவருமல் பொருளுரைத் தார். ஐந்தாம் ஆண்டிலேயே அறம்பற்றி அறிந்து கொண்டோம் என்று எண்ணி மகிழ்ந்தோம்.

## அன்னைகாட்டிய உரை

ஆசிரியரின் வாய்ப்பொருளுக்கு அன்னையின் கைப்பொருள் எடுத்துக்காட்டாய் விளங்கியது. வகுப்பிற் கேட்ட அறத்தின்பொருள் வீட்டில் அன்னையால் விளக்கப்பட்டது. "தாயே தருமலட்சுமி; யாருமற்ற அனுதை நான்; நாலுநாள் பட்டினி" என்றுரைத்துப் பிடி சோறுகேட்டுத் தெருவாசலில் நின்ருன் பிச்சைக்காரன். அடுக்களை வேலையில் ஆர்வமுற்று இருந்த அன்னை, பானையில் இருந்த பழையதைச் சிறு கிண்ணத்தில் வைத்து ஏந்திவந்து பிச்சைக்காரனுக்கு இட்டுப் பெருமகிழ்வோடு திரும்பினுள். சில நாள் சோறு அளித்தாள். வேறுசில நாட்களில் பிடி அரிசி அளித்தாள். ஆசிரியரோ அறத்தைக் கற்றுக்கொடுத்தார். அன்னையோ அறத்தை வளர்த்துக் காட்டினுள். அறம்பற்றிப் புதியதோர் அனுபவமும் பிறந்தது. அன்ருேர் நாள் அன்னையின் மனம் அல்லலுற்றிருந்தது. வேளையில்லா வேளையில் வந்தான் பிச்சைக்காரன். அன்னையும் சுடுசொல் கூறி அவனை விரட்டிவிட்டாள். அன்று அறம் செய்ய அன்னை விரும்பவில்லை. ஆதலால் அவனைத் துரத்திவிட்டாள். விரும்பினுல் அறம் செய்யலாம்; விருப்பம் இல்லாவிடில் அறம் செய்யாமலும் இருக்கலாம் என்பதைத் தெரிந்தோம். "அறம்செய விரும்பு" என்பதற்கு அன்னைகாட்டிய அகல வுரையை உணர்ந்தோம்.

## புதிய உண்மை

வெளியுலக அனுபவம் பெற வேண்டித் தந்தையின் கைபற்றி வீதியிலே சென்ருேம். வகை வகையாய்க் கோலம்பூண்டு விதவிதமாய்க் கூவிப் பிச்சை ஏற்பாரைக் கண்டோம். அவர்கள் தாம் "அறம் வளர்க்கும் அண்ணல்கள்" என்பதை அங்குக் கண்டு தெளிந்தோம். உருட்டி விழித்தாலும் ஓடிப்போ என்ருலும் உதைப்பேன் என்று கத்தினுலும் அஞ்சாது நேர்நின்று அரைமணி முழுமணி நேரமாய் உருக்கமொழி உரைத்துக் கல்நெஞ்சைக் கரைத்து பைக்குள் கைபோகச் செய்து காலணு வெளிவரச் செய்தான், பிச்சைக்காரன். மறம் கிடந்த நெஞ்சினுள் அறத்தைப் புகுத்தினுன் அறம் வளர்த்தான். தனிமையில் இரப்போனுக்கு எதுவும் கொடுக்கவிரும்பாத தந்தையும் பலர் முன்னிலையில் பெருவிருப்பத்தோடு பிச்சைக்காரனுக்குக் காசு வழங்கியதைக் கண்டோம். பெருமையைக் காப்பாற்ற வேண்டுமாயின் அறம்செய்ய விரும்புதல் வேண்டும் என்னும் புதிய உண்மை நமக்குப் புலனுயிற்று.

## அறச் சின்னங்கள்

சுற்றுலாச் சென்ற நாளில் பற்பல அறச் சின்னங்களைப் பார்த்தோம். தருமம் விளங்க இருக்கும் தண்ணீர்த் தொட்டியும் தண்ணீர்ப்பந்தலும் கண்டோம். பளிங்குக் கற்களால் அமைக்கப்பெற்ற பேரற மண்டபங்கள் கண்ணைக் கவர்ந்தன. கலை நடமிடும் மன்றங்களும் கல்வி நிலவும் கல்லூரிகளும் நோய்நீக்கும் மருத்துவ மனைகளும் வானளாவ உயர்ந்து நின்றன. பொன்னை, பொருளைப் பிள்ளைகளுக்குத் திரட்டி வைத்துவிட்டுச் செல்லும் பேதை வணிகர்களைப்போல் அன்றி, அறநிலையங்கள் அமைத்துநில்லா உலகில் நிலையான புகழை நிலைநாட்டிச் சென்ற அறவணிகரின் அறிவைப் பாராட்டினேம். பெற்ருல் இவரைப்போல் புகழ் பெறுதல் வேண்டும் என்று எண்ணினேம். இதற்காகப் பேரறங்கள் பல இயற்றுதல் வேண்டும் என்பதும் தெரிய வந்தது.

## சிற்றுரைகள்

கட்டிளங் காளைப்பருவத்திற் கல்லூரிக்குச் சென்ற நாளில் அறத்தை ஆராய்ந்து அதற்கோர் எல்லை வகுக்கத் திட்டமிட்டோம். விரிவுரையாளரை அணுகினேம். அவர் சற்று விரிவாகவே கூறிவிட்டார். அறம் முப்பத்திரண்டு என்ருர். குட்டிக் கதைகள் பல கூறி அறங்களையெல்லாம் தெளிவுற விளக்கினுர். இடையே ஒன்றிரண்டு குறும்புப் பேச்சுக்கள் எழுந்தன. "மந்தை வெளியில் மாடுகள் உராய்வதற்காகக் கல் நாட்டுதல் அறமென்றீர்கள். கங்குல் போழ்தில் அவ்வழியே செல்பவர் கால் இடறி வீழ்வதற்குக் காரணமாய் இருப்பதால் "மந்தை வெளிக்கல் மறமும் பயக்கும்" என்று கூறுதலே சாலும்" என்ருன் ஒரு குறும்பன். இன்னெருவன் "வீதியில் மின்விளக்குப் போடுதலை முப்பத்திமூன்ருவது அம்சமாகச் சேர்க்கலாம்'' என்ருன். இந்தச் சிற்றுரைகள் எல்லாம் நம் அற ஆராய்ச்சியை அசைக்கவில்லை. முப்பத்திரண்டு அறங்கள் என்று முடிவு கட்டி மகிழ்ந்தோம்.

அறம்பற்றிய அனைத்தையும் அறிந்துவிட்டதாய் மகிழ்ந்தோம். ஆனல் அறம்பற்றி அணுவளவுகூடத் தெரிந்தோம் இல்லை. திருவள்ளுவரிடம் சென்றபோதுதான் அறத்தின் அரும்பொருள் விளங்கியது. "மனத்துக் கண் மாசிலனுதல் அனைத்தறன்'' என்ற அமுத மொழிதான் அறத்தின் புதை பொருளை நமக்கு அளித்தது.

## மனிதனே அறம்

அறத்தின் பிறப்பிடம் மனம். அற ஊற்று மனச்சுனையில் எண்ணமாய்ப் பொங்குகிறது. சொல்லாய்ப் பாய்கிறது. செயலாய்ப் பரவுகிறது. மனிதனுடைய எண்ணம், சொல், செயல் அனைத்தும் சேர்ந்ததுதான் அறம். மனிதன் தான் அறம். மனித வாழ்வுதான் அறம். தண்ணீர்த் தேக்கத்தின் நீர், நகர மாந்தருக்கு நலம் பயக்கவேண்டி அதனை நாடோறும் கவனிக்கின்றனர். வந்துசேரும் மாசை உடனுக்குடன் போக்கித் தூய நீராக்கி மக்களுக்குத் தருவது நீராளர் கடமையாகும். சுனைநீர் உலகோர்க்குப் பயன் விளைவிக்க வேண்டுமாயின் தூயதாய் இருத்தல்வேண்டும். அணுகும் மாசு எல்லாம் அகற்றப்பட்டால்தான் மக்கள் அருந்துவதற்கு ஏற்ற இனிய நீராய் இருக்கும். இவ்வாறே அற ஊற்றை நாம் கருத்துடன் காக்கவேண்டும். மனத்தில் மாசு படியவிடக் கூடாது. படிந்த மாசையும் உடனே போக்கிவிட வேண்டும். பொருமை, வெளவுதல், புறங்கூறல், பயனில சொல் போன்ற புல்லிய மாசுகள் மனத்தே வந்து பொருந்தாதபடி காத்துக் கொள்ளவேண்டும். மாசு இல்லா மனமே அனைத்தறன். மாசில்லா மனத்துவழி அமைந்த வாழ்வே அனைத்தற வாழ்க்கை.

## சான்ருேர் வகுத்த நெறி

வரையறுக்கப்பட்ட நன்னெறியில் இயங்கும் நல்வாழ்வே அறம். இல் வாழ்க்கையைத் தமக்கு உரிய வாழ்க்கையாகக் கொள்பவர் இயைந்த நல்லாளைத் துணையாகக் கொண்டு, நன் மக்களைப்பெற்று, அனைவருக்கும் அன்பு காட்டி, புதியோர்க்கு விருந்தளித்து, எவரிடமும் இனியவை கூறி, செய்ந்நன்றியறிந்து, நடுவு நிலைமைக்கு இருப்பிடமாகி, அடக்கமும் ஒழுக்கமும் அகத்தினுள் நிறைத்துப் பிறனில் விழையாப் பேராண்மையுடன், பொறைக்கு உறைவிடமாகி அழுக்காறு, வெஃகுதல், புறங்கூறல், பயனில சொலல் ஆயபொல்லாக் குணங்களை நீக்கித் தீவினைக்கு அஞ்சி, ஒதுங்கி, ஒப்புரவறிந்து, ஈகைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிப் புகழ் பெற வாழ்தல் வேண்டும். இல் வாழ்க்கை இனிதுற நடைபெறுதற்கென்று சான்ருேர் வகுத்த தூய நெறிகளின்படி அமைந்த வாழ்வே இல்லறம் — இல் வாழ்க்கை. துறவோர்க்குக் கூறிய செந்நெறி வழியேசெல்லும் வாழ்வே துறவறம் — துறவுவாழ்க்கை.

## அறக் கடவுள் கடமை

அன்பு கலந்த நல் வாழ்க்கையே அறம் என்பதற்கு மற்ருெரு குறளும் சான்ருய் விளங்குகிறது. "என்பிலதனை வெயில் போலக் காயுமே, அன்பிலதனை அறம்" என்னும் குறளில் வரும் அறக் கடவுளின் இயல்பை ஆயும்போது உண்மை நன்கு விளங்கும். தன்முன் சென்ற உயிரை நோக்கி "தண்ணீர்த் தொட்டி கட்டுகிருயா?" என்று கேட்காது அறக் கடவுள். "தண்ணீர்ப்பந்தல் வைக்காததேன்?" என்னும் கேள்வியும்பிறக்காது. "கலைமன்றம், கல்வி நிலையம், மருத்துவமனை மற்றும் பல மணி மண்டபங்கள் கட்டியிருக்கிறேன்" என்று தம் புகழ்பாடிச் செல்லும் தகுதி படைத்தோரையே அறக்கடவுள் ஆர்வம் பொங்கத் தழுவிக்கொள்ளும் என்று எண்ணுதல் தவறு. "அனைத்து மக்களுக்கும் பயன் விளைவிக்கும் வகையில் அன்பு நிறைந்த தூயவாழ்க்கை வாழ்ந்தானு", என்பதை ஆய்வதே அறக்கடவுள் கடமையாகும் என்பதை அக் குறள் விளக்குகிறது. அறக் கடவுள் என்னும் சொல் வாழ்க்கைக் கடவுள் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. நல்வாழ்வே அறம் என்பதை இது நன்கு வலியுறுத்துகிறது.

## பெரு வாழ்வு

துன்பத்தால் துயரம் அடைவோர்க்கு இன்பம் பயக்கும் நற்பணியில் ஈடுபட்டு, இயற்றும் சின்னம் அறமாகாதா? என்று வினவலாம். இல்லையென்பார் யாருமிலர். பசியால் வெம்புவான் மீது எழும் அன்பைப் பிடி சோற்ருலன்றி வேறு எதனுல் காட்ட இயலும்? தண்ணீர்ப் பந்தல் தானே தாகத்தால் சோர்வுற்றவன்பால் கொண்டுள்ள பரிவைப் புலப்படுத்தும். பேதைமை என்னும் பேரிருளில் கிடந்து தவிப்போரைக் காண்பதால் கரை பொங்கி எழும் கருணையின் அறிகுறியாய்க் கல்வி நிலையமே அமையமுடியும் என்பதையும் நாம் அறிவோம். இவையெல்லாம் நல்வாழ்க்கையின் கூறுகள். நல்லறச் சின்னங்கள். நாளெல்லாம் தீமை செய்து, நல்லோர் பலரை வாட்டி ஈட்டிய பொருளால் இவைகளைச் செய்தால் இவைகள் அறச்சின்னங்களல்ல; மறச் சின்னங்களாகும். அன்பு ததும்பும் உள்ளத்தையும், தூய்மைநிலவும் வாழ்க்கையையும், பெறற்கரிய உடைமையனைத்தையும் பிறர்க்கு வழங்கும் பேராண்மையையும் கொண்டவன் தன்பெருவாழ்வே பேணும் நல்லறமாகும்.

## அடிபடுதல், அடிப்படுதல்

இவ் விரண்டு சொற்களிலும் ஓரெழுத்தே மிக்கும் குறைந்தும் உள்ளது. ஆயினும் இவ் விரண்டு சொற்களும் பொருளில் முற்றும் வேறுபட்டன. அடிபடுதல் என்பதில் அடி என்பது அடித்தற் ருெழிலையும் படுதல் என்பது சார்தல் என்னும் பொருட்டாய்ச் செயப்படு பொருளாம் தன்மையினையும் உணர்த்தின. அடிபட்டான் என்பது அடிக்கப்பட்டான் என்னும் பொருளையுடையது. இவ்வாறே பிடிபட்டான் என்பதும் அமையும். அடிப்படுதல் என்பதில் அடி என்பது கால் என் என்னும் பொருளையும் படுதல் என்பது சார்தல் என்னும் பொருளையும் உணர்த்தின. அடிப்படுதல் என்பது அடியைப் பற்றி நிற்றல், கீழ்ப்படிதல் எனப் பொருள்படும். அடிப்பட்ட சான்ருேர் என்ற இடத்து அடிப்பட்ட என்பது பழமையாய் வந்த என்ற பொருளில் நின்றது.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிருப்பர்

Std. 14.

மாதர் பகுதி

# வீட்டுக்கொரு கறவைப் பசு

நா. தவமணி

இந்து மதத்தின் பாரம்பரிய பழக்க வழக்கத்தின்படி பசு தெய்வமாகும். காலத்தோடு வளர்ந்துவரும் புதுக்கருத்தின்படி—நிதர்சன வாழ்க்கைக்குப் பொருந்தாத குருட்டு நம்பிக்கை இதுவெனக் கொண்டாலும் அதனைப் போற்றிக் காப்பதை இன்றும் சில இடங்களிற் காணலாம்.

### உயர்ந்த செல்வம்

பசுக்களை உயர்ந்த செல்வமாகக் கருதிவந்த வரலாறுகளைப் புராண இதிகாச மூலமாக அறிகிறோம். பாரதத்தில் விராட நகரில் கரந்துறைந்த பஞ்சபாண்டவர் மந்தைகளை மடக்கி விரட்டிச்சென்ற கௌரவருடன் போரிட நேரிட்டது.

தெய்வத்தன்மை பொருந்திய காமதேனு எனும் பசுவினாலே வசிட்டருக்கும்—முன்னாளில் அரசனாகவிருந்த விஸ்வாமித்திரருக்கும் முரண்பாடு ஏற்பட்டது. விஸ்வாமித்திரர் என்னும் மகரிஷியைப் புராணம் காணுவதற்குக் காரணமாக இருந்தது இந்தப்பசுவே தான்.

அக்காலத்திற் பசுவை மிகவும் உயர்ந்த நிலையில்வைத்து மதித்துக் காத்துப் பேணினர். பசுவினால் அதிக பயன் பெற்றனர்.

ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணன் ஆநிரை மேய்த்தான். யேசுநாதர் மாட்டுத் தொழுவத்திலே திருவவதாரம் செய்தார். இங்ஙனம் தெய்வத்தன்மை பொருந்திய தலமாய் பசுவாழுமிடம் மதிப்பில் உயர்ந்துள்ளது.

### புதிய சாதனைகள்

பசுவின் இத்தெய்வத்தன்மை குறித்து ஒப்புக்கொள்ளாவிடினும் பசுவினால் ஏற்படும் பயனை இழக்கலாகாது. ஒரு நாட்டின் செல்வத்தை எடைபோடுவதற்குப் பசுக்கூட்டமும் இன்றியமையாததாகும். பொருளாதார வளம் குன்றிய நாடுகளின் நிலைமையை ஈடுசெய்யும் வழிகளில் பசு வளர்த்தலும் ஒன்றாகும். இதனால் அந் நாட்டில் உள்ள சீணித்த நிலையைச் சீர்செய்ய முடியும்.

அவுஸ்திரேலியா போன்ற புல்வெளிகள் நிறைந்த நாடுகளிற் பசுவினாற் கிடைக்கும் பயன் அளப்பில. அங்கு பசுக்களின் அபரிமிதமான பாலைத் தேக்கி—வளர்ந்த விஞ்ஞான அறிவின் துணைகொண்டு நீண்ட நாட்களுக்குக் கெடாதிருக்கத்தக்கவிதமாகப் புட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். அந்த நாட்டின் பொருளாதாரம் பசுச்செல்வத்திலேதான் தங்கியிருக்கிறது. அதனை நிலைப்படுத்துவதற்கான புதிய சாதனைகளை அவர்கள் செய்து வருகின்றனர்.

நாணயப் பரிவர்த்தனை நடைமுறையிலில்லாத காலத்தில், மனிதர்கள் செல்வத்தினைப் பசுக்களின் எண்ணிக்கையைக் கொண்டு கணித்தனர். இன்று எஸ்கிமோவர் போன்ற ஜாதியார்களின் செல்வமும் அவர்களிடமுள்ள கலைமானின் எண்ணிக்கையைக் கொண்டுதான் மதிக்கப்படுகிறது.

### வெளிநாடுகளிலிருந்து

நம்நாட்டில் ஒரு காலத்தில் பசுக்களை அதிகமாக வளர்த்து—அதன் பயனை அனுபவித்து உணவுக்கஷ்டமின்றிய நிலையில் வாழ்ந்துதான் வந்திருக்கின்றனர். காலப்போக்கில் அந்நியர் வருகையினாலும் போலி நாகரிகத்தினாலும் இதனைச் சிறுகச்சிறுகக் கைவிடலாயினர். அத்தோடு பெருகிய ஜனசங்கியையினால் குடிநிலங்கள் அற்றுப்போகத் திறந்த மந்தைவெளிகளெல்லாம் குடிமனைகளாக மாறியிருக்கலாம்.

இந்நாளிற் பாலுணவின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு—பாலுணவுகள் வெளிநாடுகளிலிருந்து தினமும் இறக்குமதி செய்யப்படுகின்றன. மனிதருக்குத் தேவையான சீவாதாரப் பொருள்கள் அப்பாலுணவில் இருப்பதினால் பசுக்களை வளர்க்கும் நிலை அருகின. காலப்போக்கில் அது சோம்பற்தனத்தை உற்பத்தி செய்துவிட, பசுவளர்க்கும் தொழிலுக்கான ஊக்கமும் முற்றாக நீங்கியதென்றுதான் கூறவேண்டும்.

வெளிநாட்டுப் புட்டிப் பாலுணவுகளில் என்னதான் போஷாக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பினும் அது உடன்பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றின் தன்மை பொருந்தியிருக்கமாட்டா.

### பசு வளர்த்தல்

எனவே, நாம் நமது வீடுகளில் பசுக்களை வளர்க்க முற்படவேண்டும். பசு வளர்ப்பது ஆதாயமான பொழுதுபோக்காகவும், அன்றாடம் வேற்றாரிடம் நாம் பெறும் பாலில்—பாலுக்குப்பதில் அதிக நீருக்குத்தான் பணம் கொடுக்க வேண்டியுளது. மற்றும் தயிர், மோர் ஆதியனவை வேறிடத்தில் இருந்து பெறுவதும் விரும்பத்தக்கதல்ல. எமது கண்காணப் பக்குவப் படுத்தும் சுத்தம்—குணம் அதில் இருக்குமென எப்படி நம்ப முடியும்?

குறைந்தது நாலைந்துபேர் வசிக்கும் குடும்பங்களிலுள்ள பெண்மணிகள் வீட்டுக்கொரு பசுவாயினும் வைத்து வளர்க்க வேண்டும். வீட்டில் இலட்சுமீகரம் விளங்குவதற்கும் குழந்தைகளின் போஷாக்குக்கும் இது மிகமிகத் தேவையானது.

பசுவை வளர்ப்பது சிரமத்துக்குக் கூடிய ஆதாயத்தைத் தருவதாகும். அதற்காகக் கொடுக்கும் புல், பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, வைக்கோல் ஆதிய உணவுக்காக ஏற்படும் செலவுகளைவிட, அது தரும் பயன் ஆதாயமானதாகும். பசுவின் சாணம் பசளையாக உதவுகின்றது.

### கிராமப் புறத்தில்

கிராமப்புறத்துப் பெண்மணிகளில் அதிகமானவர்கள் தமது வீடுகளிற் பசுக்களை வளர்த்து வருவதைக் காண்கிறோம். அங்கு மந்தைகள் நடமாடி மேய்வதற்கான வெளிகளும் பிறவசதிகளும் அதிகமுளவாயினும் அவர்களின் சுறுசுறுப்பான உழைப்பும் இதற்கு அனுசரணையாகவுளது. பட்டினவாசிகளான பெண்கள் எதற்கும் பணத்தை வீசிப் பொருள்களைப் பெற்றுச் சோம்பேறி நிலையை ஆக்கிக் கொள்வதினால், சிரமமாகவே இருக்கும். அப்படிப்பட்ட சோம்பற்தனத்தை விடுத்துப் பசுவை வளர்க்க முற்பட வேண்டும்.

குடும்பம் செழித்து நிலைகொள்ள — சிக்கனமும், சேமிப்பும் பெருக இது அத்தியாவசியம். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு கறவைப் பசு இருந்தால் பெருகிவரும் பற்றாக்குறை உணவு நெருக்கடியைச் சமாளிக்கலாம். அதனால் நாட்டின் பொருளாதாரமும் சிறப்புறும். பெண்மணிகள் அனைவரும் இதனைத் தெரிந்துகொள்வார்

# அதுவும் பெண்தானா?

ராஜ ராஜேஸ்வரி

எனக்கு ஐந்தும் பெண் குழந்தைகள். ஆறாவதும் பெண்ணாகப் பிறந்துவிடுமோ என்று எனக்குப் பெருந்திகில். அவருக்கும் அப்படித்தான். கதிர்காமம் முதலான க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஆண்குழந்தை வேண்டுமென்று அங்கப் பிரதட்சணம் எல்லாம் செய்தார். எனக்கோ இராப் பகலாக அதுதான் விசாரம். வெளியில் யாரிடம் சொல்லுவது!

கமலாவுக்கு ஆறும் பெண்ணாகப் பிறந்தது. ஏழாவதும் பெண், என்று 'நர்ஸ்' சொன்னதுதான் தாமதம். அவள் "பெண்ணா" என்று சொல்லிக்கொண்டே சாய்ந்துவிட்டாள். அவள் காரியமும் அத்துடன் முடிந்தது. அந்த மாதிரி எனக்கும் ஏற்பட்டுவிடுமோ என்று பயம். தையல்நாயகியைத்தான் வேண்டிக்கொண்டேன். "நீ இரண்டே ஆண் குழந்தைகளை கணபதியையும் கந்தனையும் கச்சிதமாகப் பெற்றெடுத்தாய். பெண் குழந்தை வேண்டாமென்று தானே நீ பெறவில்லை. ஆனால் எனக்கோ ஐந்தும் பெண்ணாகக் கொடுத்துவிட்டாய். ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி என்பார்கள். நாங்கள் ஆண்டிகளாக வேண்டுமா? ஆறாவதாவது ஆணாகக் கொடுத்தால் ஆச்சு. இல்லாவிட்டால் நானும் கமலாவைப்போல்" என்று எனக்கு நானே அடிக்கடி பேசிக்கொள்வேன்.

எத்தனையோ பேர் குழந்தையில்லை என்று தவிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு குழந்தைகூடக் கிடைப்பதில்லை. எங்களுக்கோ போதும் போதும் என்றாலும் பெண்ணாகக் கிடைத்துக்கொண்டு போகிறது. இதற்கு என்ன செய்வது?

விஞ்ஞானிகள் என்னென்னவோ எல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். நமக்கு இஷ்டமான குழந்தையை ஆணோ, பெண்ணோ பெறக் கூடும் என்று கூட யாரோ கண்டுபிடித்திருப்பதாக அவர்கூடச் சொன்னார். ஆனால் ஒன்றும் பயனில்லை.

நாளோ நெருங்கிவந்துகொண்டிருந்தது. வரவரத் திகிலும் அதிகரித்தது. அவர் ஒரு நாள் வந்தார். "ராஜி! ஏதோ வாடியிருக்கிறாய். பெண் பிறந்துவிடுமென்று கவலையா? கவலைப்படாதே, பெண் பிறந்தால் பிறக்கட்டும். பெண்கள் இல்லாவிடில் உலகமேது? வீட்டுக்குத்தான் லட்சணமுண்டா"? என்று ஆறுதல் சொன்னார்.

எனக்காக வாயளவில் இப்படி அவர் சொன்னாலும் மனத்துக்குள் அவருக்கும் கவலைதான். நிம்மதி இல்லை. பெண் என்றால் வெறுப்பில்லை. நானும் ஒரு பெண்தான்; எங்கள் அம்மாவும் பெண்தான்; அந்தத் தையல் நாயகியும் ஒரு பெண்தான். ஆனால் எங்களுக்கெல்லாம் ஏதோ விதமாகக் கலியாணம் ஆகிவிட்டது. எனக்குள்ள இந்த ஐந்து பெணகளுக்கும் நல்ல புருஷனைக் கிடைக்க வேண்டுமே! நன்றாக வைத்துக் கொள்ளவேண்டுமே. அவர்கள் கண்கலங்கக் கூடாதே. கல்யாணம் செய்யாமல் பெண்களை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தால், அது வேறுவித கவலை. ஆண்களானால் விசாரமேயில்லை. விவாகம் செய்யாமல் இருக்கலாம். ஆனால் பெண்ணைப் பிறந்தவளுக்கு விவாகமில்லாமல் இருக்கமுடியுமா? அவரும் நானும் என்ன சாசுவதமா? நாங்கள் கண்ணை மூடிவிட்டால், பிறகு, என் பெண்களை யார் பத்திரமாகக் காப்பாற்றுபவர்கள்? கல்யாணம் ஒன்று செய்துவிட்டால், நமது கவலைவிடும். அவர்கள் அதிர்ஷ்டம் போல் நடக்கிறது. நமது கடமை தீருமல்லவா?

ஆனால் இக்காலத்தில் ஒரு பெண்ணுக்குத் தக்க வரனைப் பார்த்து விவாகம் செய்வதென்றால் லேசா? "கல்யாணம் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார்" என்பார்கள். குலம், குணம் எல்லாம் நமக்குத் தகுதியானதாக இருக்கவேண்டும். சீதனம் அதிகமாகக் கொடுத்தால்தான் படிப்பும், உத்தியோகமுமுள்ள நல்ல மாப்பிள்ளை கிடைப்பார்.

ஆஸ்தியெல்லாம் எழுதி வைத்து, பெண்எப்படியாவது கண்ணைக் கசக்காமல், புக்ககம் சென்று புருஷனுடன் குடித்தனம் செய்தால் அதுபோதும். ஆனால் ஒன்றா, இரண்டா. ஐந்து! இந்த ஐந்துக்கும் எப்படி நல்ல வரனை வந்து கல்யாணம் நடக்கப்போகிறது? "எங்கள் வாழ்க்கைக்கே இந்தத் தண்டனை போதும். ஆனால் ஆறாவதும் பெண்ணாகக் கிடைத்துவிட்டால், எங்களாற் தாங்கவே முடியாது. உயிர்விட்டு விடுவேன்" என்று தையல்நாயகியிடம் கண்ணீர் விட்டு அழுதழுது முறையிட்டேன்.

இடுப்பு வலி கண்டது. ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்ல அவர் வரவில்லை. ஐந்துக்கும் அவர்தான் வந்தார். தான் வந்தால் பெண்தான் பிறக்குமென்று அவருக்கு எண்ணம். இந்தமுறை வேறு யாரையாவது கூப்பிட்டுக்கொண்டு போ என்று ஒருவித அலட்சியத்துடன் கூறிவிட்டு ஆபீஸ் சென்றுவிட்டார். அவர் இப்படிச் சொன்னது என் மன வேதனையை அதிகரித்தது. என்ன காரணமோ அம்மாவும் வரவில்லை. பாரமெல்லாம் அந்தத் தையல் நாயகிமேற்போட்டு, அவளே துணையென்று நம்பி, பக்கத்து வீட்டுப் பத்மாவை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரி சென்றேன்.

எனக்குக் கண்ணை மூடியதுதான் தெரியும். நர்ஸ் குழந்தையைக் கொண்டுவந்தாள். என்ன குழந்தை என்று கேட்டேன். முருகன்மாதிரி ஆண் குழந்தை என்று புன்முறுவலுடன் கூறினாள் நர்ஸ். என் கலிதீர்ந்தது. என் வாழ்வு மீண்டும் மலர்ந்தது.

(வீட்டுக்கொரு கறவைப் பசு — தொடர்ச்சி) களேயானால் நம்மைப் பயமுறுத்தும் கஷ்ட நிலையினின்றும் விடுபடலாம்.

இல்லத்தின்விளக்குக்களான பெண்மணிகள் இல்லம் பிரகாசமடைய எதெதைச் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துகொள்ள வேண்டும். காலம் நமக்கு எவ்வளவு இலகுவான வசதிகளைச் செய்து தந்தபோதிலும்—அதினாலே பெருகிவரும் சீணித்த நிலையை பகுத்தறிந்து சுமுக நிலைகாண வேண்டியதை, உடனடியாகச் செய்து விடுவதே புத்திசாலித்தனமாகும்.

### வண்ணை சைவ மகளிர் சங்கம்


#### தேவாரப் போட்டி

இச் சங்கம் ஏப்ரல் மாதம் 8-ம், 9-ம், 10-ம் திகதிகளில் ஒரு தேவாரப் போட்டியை இந்து மகளிர் கல்லூரிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பிற்பகல் 5-30-க்கு நிகழ்த்துவதற்கு நிச்சயித்துள்ளது. போட்டியின் விபரம் பின்வருமாறு:

கீழ்ப்பிரிவு 8 வயதிற்குட்பட்டவர்கள், மத்தியபிரிவு 8—15 வயதிற்குட்பட்டவர்கள். மேற்பிரிவு 15—19 வயதிற்குட்பட்டவர்கள். இப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் காரியதரிசிக்கு எழுதி விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சைவமகளிர் சங்கக்காரியதரிசி,
401, காங்கேசன் துறை வீதி,
வண்ணார்பண்ணை.

★ நகைகளுக்கும்
★ வைரங்களுக்கும்



நகைமாளிகை

ஏ. கே. எஸ். அன் சன்ஸ்
65, கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

தமிழ் இனம் இன்று ஒற்றுமை வேண்டி நிற்கின்றது. ஒன்றுபட்டு வாழ வேண்டும். சிங்கள மக்களின் தொடர்பு சிறிதேனும் உள்ள எக்கட்சியையும் நம்பக்கூடாது. அப்படி, ஏதாவது ஒரு கட்சி தமிழினத்திற்குச் சுதந்திரமும், சுபிட்சமும் பெற்றுத்தர முடியுமானல், அது தமிழரசுக் கட்சியே தான். இவற்றையே இன்று ஒரு சில தமிழர் தமிழ் மக்களுக்குத் திரும்பத் திரும்ப ஓதி வருகின்றனர்.

இங்கு எழுதிய ஒருவர், சிங்கள மக்களை, சிங்களத் தலைவரை நம்பக் கூடாதென்றும், இவ்வளவு காலமும் தமிழர் அவர்களை நம்பி மோசம் போய் விட்டதாகவும் கூறுகின்றார். தாங்கள்—அதாவது அவர் குறிக்கும் தமிழ்த்தலைவர்கள் — யு. என். பி. போன்ற ஒரு சிங்களத் தேசியக் கட்சியுடன் சேர்ந்தும், கடைசியில் அந்த யு. என். பி ஏமாற்றிவிட்டதே என்றும் கூறுகிறார்.

இவரை நாம் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம்.

கருத்தரங்கம்

# இணைந்து வாழ்வதா? இன அடிப்படையிற் பிரிந்து நிற்பதா?

ம. ம.

இலங்கை சுதந்திரம் பெற்ற பொழுதோ, அதற்கு முன்னதாகவோ யு. என். பியை விட வேறு தேசியக் கட்சிகள் இருக்கவில்லையா? ஏன் அவற்றில் ஒன்றுடன் அத்தமிழ்த் தலைவர்கள் சேரவில்லை? யு. என். பி. ஒரு முதலாளித்துவக் கட்சி. ஆனல், சிங்களத் தலைவர்களைக் கொண்ட கட்சிகளான கொம்யூனிஸ்ட், லங்கா சமசமாஜிக் கட்சிகள் — தொழிலாளரின் கட்சிகள் — அன்று இருந்தன; இன்றும் இருக்கின்றன. இலங்கை முழுவதற்கும் ஒரு பொதுப்படையான பொருளாதார அஸ்திவாரத்தில், சிங்கள — தமிழ் தொழிலாளர், விவசாயிகளை இணைத்து, சோஷலிச சமுதாயத்தை இலங்கையில் உருவாக்கத்திட்டமிட்டு, அதற்காகப் போராடி வரும் இவ்விரு கட்சிகளிலும் காணமுடியாத எந்தத் தனிச் சிறப்பை, எந்தத் தனி நம்பிக்கையை எங்கள் தமிழ்த் தலைவர்கள் யு. என். பியில் கண்டார்கள்!

இன்று சில கட்சித் தலைவர்கள் தாங்கள்தான் தமிழ்பேசும் மக்களுக்குத் தலைமை வகித்து, அவர்களுக்குப் புது வாழ்வு பெற்றுக் கொடுக்க முடியும் என்று நம்புகிறார்கள். இது சர்வாதிகாரத்தின்பாற்பட்டதன்றி வேறொன்றுமில்லை.

ஒரு சில தமிழ்த்தலைவர்கள் இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சியே உகந்ததென்றும், அத்தகைய ஆட்சியிலேயே சிங்கள மக்களும், தமிழரும் ஒற்றுமையாக, சம அந்தஸ்துடன் வாழ முடியுமென்றும் பிரசாரம் செய்து வருகின்றனர். சமஷ்டி அரசாங்கம் நடைமுறையில், இலங்கையில் நடைபெறக் கூடிய ஒரு விஷயமானல், அதற்குத் தேவையான முக்கிய அம்சம் பெரும்பான்மையினருக்கும், சிறுபான்மையினருக்குமிடையே உள்ள ஒற்றுமையே. இந்த ஒற்றுமை அடிப்படை இல்லாமல் ஒருபோதும் சமஷ்டி அரசாங்கம் இந்நாட்டில் ஏற்படமுடியாது.

இன்றைய அரசியலில், இலங்கையிற் சமஷ்டிக்கு ஆதரவு கொடுப்பதுடன் மாத்திரமல்லாது, அப்படிப்பட்ட ஒரு முடிவு காணக்கூடிய முறையில் இயங்கி வரும் அரசியற் கட்சிகள் எவை? அவை இடதுசாரிக் கட்சிகளான கொம்யூனிஸ்ட், சமசமாஜிக் கட்சிகளேயாகும். சோஷலிச தத்துவம் சந்தர்ப்பவாதத் தத்துவமல்ல; அது சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட தத்துவம். அத்தத்துவத்தின் அடிப்படையில் சமஷ்டி அரசாங்கம் அமைப்பதற்கு விசேஷ காரணங்கள் உள்ளன. முதலாவதாக சோஷலிஸ்ட் கொள்கை நாட்டில் இன ஒற்றுமையை வற்புறுத்தி நிற்கின்றது. இரண்டாவதாகச் சோஷலிச தத்துவத்தில் மாகாண சுயாட்சி முறையும் ஒரு முக்கிய அம்சமாகும். மூன்ருவதாக: சோவியத்து ருஷியா, செஞ்சீனம் போன்ற சோஷலிச நாடுகளிலே சமஷ்டி முறை வெற்றிகரமாக நடைமுறையில் இயங்கி வருகிறது. ஆ●ம், சமஷ்டி அரசாங்கம் சோஷலிச வாதிகளுக்குப் புதிதானதொன்றல்ல; வெறுப்புக்குரிய தொன்றுமல்ல. ஆனல், சமஷ்டி என்ற பெயருடன் சில கட்சித்தலைவர்கள் வகுப்புவாதப் பிரசாரஞ் செய்வதுதான் நூதனமாக இருக்கின்றது.

இன்னுமொரு விஷயம். இக்கேள்வியைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களையே கேட்க விரும்புகின்றோம். சமஷ்டி அரசாங்கம் ஏற்படக்கூடிய விதத்தில், சிங்களரையும் தமிழரையும் தங்கள் தலைமைக்குக் கீழ் இயக்கிவரும் கொம்யூனிஸ்ட், சமசமாஜிக் கட்சிகளுடன் சேர்ந்து, இன ஒற்றுமையையும் வளர்த்து, அத்துடன் சோஷலிசக் கொள்கையையும் வளர்த்து, தமிழ் மக்களின் எதிர்காலத்தையும் பாதுகாத்து, அவர்களுக்கு நல்வாழ்வு பெற ஏன் தமிழரசுக் கட்சி முயற்சி செய்யவில்லை?

இன்று தமிழ்மக்களை எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினை, சிங்கள மக்களுடன் ஒன்று சேர்ந்து இலங்கையில் வாழ்வதா, அல்லது இன அடிப்படையிற் பிரிந்து, தனிமையில் வாழ்வதா என்பதே. இதற்கு நாம் விடைகாணும்பொழுது ஒரு விஷயத்தை மனதில் வைக்க வேண்டும். இப்பொழுது ஆளுங்கட்சியாக விளங்கும் எம். ஈ. பி. யும், அதன் வகுப்புவாதக் கொள்கைகளும் நிரந்தரமானவை, என்று எண்ணுவோர் தனித் தமிழ் நாட்டுப் பாதையே சிறந்ததென்று சொல்வர். ஆனல், இவர்களை விட்டு விட்டு, எம். ஈ. பி. அரசாங்கம் அழிவுப்பாதையில் வெகுவிரைவில் முன்னேறிக் கொண்டு செல்கின்றதென்ற உண்மையையும், வகுப்புவாதமும் அதனுடன் தனக்குச் சமாதி கட்டி வருகின்றது என்பதையும், இலங்கை, மற்றைய ஆசிய நாடுகள்போன்று, சோஷலிசப் பாதையில் வெற்றிநடை போடத் தொடங்கிவிட்டது என்பதையும் உணர்ந்தவர், அறிந்தவர், சிங்கள மக்களுடன் சேர்ந்து ஒற்றுமை இலங்கையை உருவாக்க முயலுவர். இவ்விரண்டு பாதைகளிலும் எந்தப்பாதை தமிழ் மக்களுக்கும், இலங்கை நாட்டிற்கும், நல்வாழ்வையும் ஒற்றுமையையும் தரக்கூடியது என்பதைத் தீர்மானிப்பது தமிழ் மக்களின் கடமை. அவர்கள் தங்கள் இனத்திற்கும், தங்கள் நாட்டுக்கும் செய்யவேண்டிய புனிதப் பணி அது.

# கூட்டுறவுக் கொள்கை நல்லதா? கெட்டதா?

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கிறார்கள். அவர்கள் எல்லாரும் மக்களை ஏமாற்றுபவர்களல்லர்.

நாட்டில் ஆறரைக் கோடி குடும்பங்களுக்குச் சொந்த நிலமுண்டு. ஒன்றரைக்கோடி குடும்பங்களுக்கே நிலமில்லை. நிலமில்லாத விவசாயிகள் 100க்கு 12 விகிதமே உள்ளனர். ஆகவே சிறுபான்மையருக்காகப் பெரும்பான்மையோரைத் தண்டிக்க வேண்டாம்.

இன்று விவசாயிகளுக்கு வேண்டியது நீர்ப்பாசன வசதி, உரம், முதலியனவே. நிலத்தை லாபகரமாக எப்படிச் சாகுபடி செய்யலாமென்பதைக் கற்பிக்க வேண்டும். இவ்விதமே யப்பான் முதலிய நாடுகளில் உற்பத்தி பெருகியுள்ளது. அதை விட்டு. கூட்டுப்பண்ணை என்ற பூச்சாண்டியைக் காண்பித்தால், விவசாயிக்கு உற்சாகம் குறைந்து, கிராமங்களில் நிலமுள்ளவருக்கும் இல்லாதவருக்கும் சண்டை சச்சரவுகள் ஏற்படும்.

"நகரிலுள்ள நாம் விவசாயியின் முதுகிலிருந்து இறங்குவதைத்தவிர வேறு எல்லாமும் செய்வோம்" என்றார் காந்தியடிகள். நகர்ப்புறங்களில் உள்ளவர்களே இந்தக் கூட்டுப்பண்ணையோசனையைக் கிளப்பிவிட்டவர்கள். விவசாய அனுபவம் கிடையாது. இது நமது விவசாயிகளின் முதுகின் மீது மேலும் ஏறி அமுக்குவதற்கே ஒப்பாகும்".

கூட்டுறவுப் பண்ணைக்கு சாதகமான கருத்துக்களை இனிக் கவனிப்போம்.

## உகந்த வழி

கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற தீர்மானம் பற்றி இந்திய லோக்சபையில் பிரதமர் நேருஜி பேசுகையில் இக்காலத்துக்கு உகந்தது கூட்டுறவு வழிதான் என்று வற்புறுத்தினர்.

"வேதகாலத்திலே மக்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும் நிலம் அதிகமாகவும் இருந்தது. அப்போது மக்கள் தனித்தனியாகச் சாகுபடி செய்தது இயற்கையே. ஆனல் இக்காலத்தில் ஜனங்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதற்கேற்றபடி நிலம் அதிகரிக்கவில்லை. ஆகவே மக்கள் கூட்டாகச் சேர்ந்து சாகுபடி செய்வது அவசியமாகின்றது. முன் காலத்தில் இருந்த முறைதான் இப்போதும் இருக்கவேண்டுமென்று கூறுவது இன்றைய பிரச்சினை தீருவதற்கு வழிசெய்யாது.

சேவை கூட்டுறவு ஸ்தாபனங்களும் கூட்டுறவுப் பண்ணைகளும் வெற்றிபெற வேண்டுமாயின், பயிற்சிபெற்றவர்கள் அவசியம் தேவையாகும். ஒரு சிலருக்கு இவ்விஷயமாக மிக மேலான பயிற்சி அளிக்கவேண்டும். மற்றவர்களுக்கு ஓரளவு பயிற்சி அளிக்கலாம். இந்தப் பயிற்சி விவசாயத்தை லாபகரமாக நடத்த உதவக்கூடும். எல்லா இடங்களிலும் பெரிய ட்ராக்டர்களைப் பயன் படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. அந்தந்த இடங்களுக்கு ஏற்ப அவற்றைப் பாவிக்கலாம்.

சில இடங்களில் 5000 முதல 20000ஏக்கர் வரையிலுள்ள அரசாங்கப்பண்ணைகளைப்பரீட்சார்த்தமாக நடத்துவது விரும்பத்தக்கது. மற்றவர்களுக்கு முன் மாதிரியாகவும்; உற்பத்தியை அதிகரிக்கவும் இப்படியும்செய்யலாம். ராஜஸ்தானத்தில் இப்படி அரசாங்கப் பண்ணைகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றுவருகின்றன. என்றாலும் கூட்டுறவுப் பண்ணைகளில் அந்நியர்கள் ஆதிக்கம் செலுத்தாமலும், விவசாயிகள் சேர்ந்து உழைக்கவும், அப்பண்ணைகள் சிறிய அளவில் இருப்பது நல்லது.

கூட்டாகச் சேர்ந்து விவசாயம் நடத்துவதால், உற்பத்தி பெருகுமென்றும், இதனல் இன வேற்றுமைகள் படிப்படியாக மறையுமென்றும் நான் உறுதியாக நம்புகிறேன். சமூக அமைப்பைப் படிப்படியாகவே மாற்றவேண்டுமேயன்றி திடீரெனச்செய்யக்கூடாது. கூட்டுப் பண்ணை என்பதை, பிரிவினை செய்யப்படாத இந்து குடும்பத்துக்கு ஒப்பிடலாம். ஒரு குடும்பம் சேர்ந்துஒற்றுமையாக நடப்பதுபோல், இரண்டொரு கிராமங்கள் ஒன்று சேர்ந்து விவசாயத்தை ஒத்துழைத்து நடத்துவதாக இருக்கும்.

## நிலம் சொந்தம்

கூட்டுறவுப்பண்ணைகளில் விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாகவே இருந்துவரும். அரசாங்கம் ஏதோ சூழ்ச்சி செய்வதாகக் கூறப்படுகிறது. எதிர்காலத்தைப்பற்றி நான் என்ன சொல்லமுடியும். தனிஉடைமையில் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆசாரிய விளேபாபாவே நிலத்தில் யாரும் தனி உரிமை பாராட்டக்கூடாதென்று கருதுகின்றார். அவரை நான் மதிக்கின்றேன். அது முடியுமாயின் நான் உண்மையில் மகிழ்ச்சியடைவேன். ஆனல் அவ்விதம் செய்ய முடியுமென்றும் நான் கருதவில்லை. அந்தக் கருத்தை நான் நிராகரிக்கவில்லை. என்றாலும், அது உசிதமாகுமென்று நான் கருதவில்லை. ஆகவே, அதை நான் வற்புறுத்தவில்லை.

தனி உடைமையைப் பற்றிக் கருத்துக்கள் மாறிவருகின்றன. தனி உரிமைகள் பங்குகளாகவும் துண்டுக் காகிதங்களாகவும் உருமாறுகின்றன. ஏழை விவசாயியின் நிலஉடைமை பற்றி பிரமாதப்படுத்தப் படுகிறது. ஆனல் சாதாரண விவசாயிக்கு அதிக நிலமில்லை. மிகவும் குறைவு: தனி உடைமையைப்பற்றிய கருத்துக்கள் பெரிதும் மாறிவருகின்றன. ஒரு காலத்தில் தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருந்த ரஸ்தாக்களும் பாலங்களும் இப்போது நகரசபைக்குச் சொந்தமாகியுள்ளன. ஆகவே இந்த மாறுதல்களைப்பற்றி நாம் பயப்படக் கூடாது. நமது முக்கிய நோக்கத்துக்கு இவை உதவிஅளிப்பதாயின், இம்மாறுதல்களை நாம் வரவேற்க வேண்டும்.


கூட்டுறவுப்பண்ணையை ஆதரிப்பவர்களிலும் சிலர் மிகத் தயக்கத்துடனே இதை முதலிற் பரீட்சார்த்தமாகச் செய்ய வேண்டுமென்கிறார்கள். நாம் 5000 வருஷ காலமாக நில விஷயமாய்ப் பரீட்சைகளை நடத்திவருகிறோம். கூட்டுப் பண்ணை முறையால் ஆபத்துகள் ஏற்படுமென்று யாரும் உண்மையில் கருதமுடியுமா? இது எனக்கு விளங்கவேயில்லை. எந்தவிதத்திற் பார்த்தாலும், கூட்டுறவு முறைதான் விவசாயத்தில் மட்டுமன்றிக் கைத்தொழில் முதலிய துறைகளிலும், முன்னேற்றமடைவதற்கு மார்க்கம் என்ற முடிவுக்கு வரவேண்டியதாகவுள்ளது. முதலில் பூமிதான கிராமங்களிலே இதைப் பரீட்சார்த்தமாக நடத்தலாமா? இதைப்பற்றி முடிவு செய்ய வேண்டியது ஆசார்ய விளேபாஜியைப் பொறுத்ததாகும்.


எங்களிடம்

பவுண் மார்க் ஓடுகள்
மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

நெல்லு, எள்ளு, அரிசி
முதலியனவும்



சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

R. சிவகுமாரன்
76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விளம்பி ஆண்டு பங்குனி மீ 22 உ (4-4-59)


## பெரிய தவறு

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமன விஷயமாகப் பிரதமர் செய்தது பெரிய தவறாகும். ஒரு தவறு பலதவறுகளுக்கு இடமளித்துவிட்டது; இது அரசாங்க ஊழியர்களிடையே பிளவுகளையும், மனக்கசப்புக்களையும் ஏற்படுத்துவதுடன், பொது மக்களிடையிலும் சிறப்பாகச் சிறுபான்மை மக்களிடையிலும் புதிய பீதிகளையும் அவநம்பிக்கைகளையும் கிளப்பிவிட்டுள்ளது. இதனால் பிரதமர் தமக்குத்தாமே புதியதோர் பிரச்சினையை வீணாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்.

அரசாங்கப் பதவிகளுக்குத் தக்கவர்களை, விருப்பு வெறுப்பின்றி நியமிக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனைச் சேர்ந்ததாகும். அரசியல் முதலிய எவ்விதக் குறுக்கீடுகளும் இருக்கப்படாதென்றே அந்தக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவிக்கு யாரை நியமிப்பதென்ற விஷயத்தை அக்கமிஷனிடம் விட்டிருக்கவேண்டியதே முறை. அவ்விதம் செய்யாமல் பிரதமர் தாமே இப்பொறுப்பை ஏற்றது, அக்கமிஷனை அவமதித்ததாவதுடன், பல புதிய சங்கடங்களையும் சிருஷ்டித்து விட்டது.

திரு ஒஸ்மன்-டி-ஸில்வாவை, பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமித்தது பழைய யு. என். பி. அரசாங்கம். என்றாலும், சென்ற மூன்று ஆண்டுகளாக அவரை அதே பதவியிலிருந்துவர எம். ஈ. பி. அனுமதித்தது. அப்பதவியை வகிக்க அவருக்குத் திறமை இல்லையென்றும், ஆகவே அவர் பதவிகாலத்தை நீடிக்க முடியாது என்றும் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார். தமக்கு நம்பிக்கையில்லாத ஒருவரை நீடித்து ஒரு பொறுப்பான பதவியில் எந்தப் பிரதமரும் வைத்திருக்க விரும்பமாட்டார்தான். ஆனால், அப்பதவிக்கு அடுத்தபடியாக யாரை நியமிப்பது என்ற பொறுப்பை அவர் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடமே விட்டிருக்க வேண்டும். இவ்விதம் அவர் செய்யத் தவறி, தமக்கு இஷ்டமான ஒருவரை, பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக்கலந்தாலோசியாமலே நியமித்துவிட்டது சர்வாதிகாரமாகுமேயன்றி உண்மையான ஜனநாயக முறையாகாது.

இதிலே பெரிய விபரீதம் என்னவென்றால், பொலீஸ் பகுதியிலே, அவ்வுயர்பதவியை வகிக்கக்கூடிய திறமைசாலிகள் பலர் இருந்தும், அவர்கள் "பௌத்தர்களல்ல" என்ற ஒரே காரணத்துக்காக அவர்களை ஒதுக்கிவிட்டதாகப் பிரதமர் தெரிவித்து, வேறொரு பௌத்தரை அப்பதவிக்கு நியமித்திருப்பதேயாகும். புதிதாக நியமனம் பெற்றவர் திறமைசாலியா? அல்லவா? என்பது பற்றி நாம் ஆராயத் தேவையில்லை. ஆனால் அரசாங்கத்திலே உயர் பதவிகளுக்கு, பௌத்தர்களல்லாதார் எவ்வளவு திறமைசாலிகளாயினும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று பிரதமர் இந்த நடவடிக்கை மூலம் காட்டியுள்ளது மற்றச் சமயத்தவர்களுக்கெல்லாம் பெரும் இடர் விழுந்தது போல் ஆவதுடன் பொலீஸ் உள்ளிட்டு, அரசாங்கத்தில் உள்ள பல உத்தியோகஸ்தர்களிடையேயும் மதவேற்றுமைகளைப்புகுத்தி, அவர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கு முறையையும் குலைப்பதாக இருக்கும். நாட்டிற் சமூக ஒற்றுமை வேண்டுமென்று ஒரு புறம் வேண்டுகோள் விடுக்கும் பிரதமர், மறுபுறம் புதிய சமய வேற்றுமைகளைக் கிளப்பிவிடக் கூடிய முறையில் காரியம் செய்கின்றார்.

பிரதமரின் இவ்வித மனப்பான்மையைக் கேட்டு, பௌத்தரல்லாத உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் வேதனை அடைந்துள்ளதிலும், தலைமைப் பதவிக்கு வரவேண்டிய திரு. ஸி. ஸி. திசநாயக்கா தம் பதவியைத் துறக்கக் கருதியதிலும் வியப்பில்லை. மொழி வேற்றுமைகளைக் கிளப்பியதால், நாட்டில் இன்னும் அமைதி ஏற்படவில்லை. இந்நிலையிற் புதிதாக மதத்துவேஷங்களுக்கு இடமளிப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாவதுடன், இந்நாட்டில் அமைதி ஏற்படுவதும் அதிக கஷ்டமாகும்.

இன்று பிரதமரின் நிலைமை நிச்சயம் பொறுமைப்படத் தக்கதல்ல. என்றாலும் இந்த நிலைக்கு மற்றவர்களைவிட அவர்தான் அதிக பொறுப்பாவார். "மாற்றானின் கருத்துக்கு மதிப்பளிக்கவேண்டும்" என்ற கொள்கையைத் தாம் கடைப்பிடிப்பதாக அவர் இவ்வாரம் கொழும்பில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். இந்நாட்டுப் பிரஜைகள் யாராயினும், அவர்களையெல்லாம், சமயம் மொழி முதலிய வேற்றுமை காட்டாமல் சரிசமமாக மதித்து நடத்துவதே பிரதமரின் மேலான கடமை. இக்கடமையிலிருந்து எள்ளளவும் பிசகினால், அவருக்குமட்டுமன்றி நாட்டுக்கும் சங்கடங்கள் அதிகரிப்பதாகும்.

## சுதேசி வாரம்

இன்று முதல் ஏழுநாட்கள் வரை இலங்கையில் சுதேசி வாரங் கொண்டாடப் பல அரசாங்க இலாகாக்கள் ஏற்பாடு செய்துள்ளனவாம். இவ்வாரத்தில், இலங்கையில் தயாரிக்கப்பட்ட துணிகளையும், பொருள்களையும் சற்றே மலிவாக விற்க ஏற்பாடு செய்வதுடன், வருகிற தமிழ், சிங்கள புதுவருஷப்பிறப்பன்று, எல்லாரும் சுதேசிப் பொருள்களையே வாங்கி உபயோகிக்கவும் வேண்டுமென்று சில மந்திரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வேறு விஷயங்களில் கருத்து வேற்றுமை என்ன இருப்பினும், சுதேசிக் கைத்தொழில்களை ஆதரிக்க வேண்டுமென்பதில் இங்கு மக்களிடையே அபிப்பிராயபேதம் இருக்கமுடியாது. புதுவருஷத்தன்று, எல்லாரும் கூடுமான வரை சுதேசிப் பொருள்களையே உபயோகிப்பதென்று விரதமெடுத்து அதைக்கடைப்பிடித்தால், இங்கு நமக்குத் தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்யவும், பலருக்கும் வேலைகிடைக்கவும், நாட்டின் செல்வம் வெளியேறாமல் தடுக்கவும் செய்யலாம்.

இறக்குமதிச்சரக்குக்களைவிட உள்நாட்டுச் சரக்குக்கள் மட்டரகமானவை என்றும், விலையும் அதிகமென்றும் பொதுவான கருத்து நிலவுவதால், மக்கள் இறக்குமதிச் சரக்குக்களையே விரும்பி வாங்குகின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். இங்கு உற்பத்தியாகும் சரக்குக்களின் தரத்தை உயர்த்தவும், விலையையும் கூடுமான வரை குறைக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். இந்தநோக்கம் கைகூடச்சிறிது காலமாகுமாதலால், உள் நாட்டுக் கைத்தொழில்களுக்கு அரசாங்கம் எல்லாப் பாதுகாப்பும் அளித்து, அவற்றை ஆதரிக்க வேண்டியதவசியம். இங்கு வேலையில்லாக் கஷ்டம் நீங்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்களனைவரும், இவ்விஷயத்தில் சற்றே தியாகபுத்தியுடன் உள்நாட்டுப்பொருள்களையே வாங்குவதென்றும் சுதேசி விரதம் பூணவேண்டும்.

நமக்கு முக்கியமான தேவைகள் உணவும், உடையுமே. துரதிருஷ்டவசமாக இவ்விரண்டிலும் நாம் பிறநாடுகளின் உடைகளையே எதிர் பார்ப்பவர்களாக இருக்கிறோம். இங்கு நிலவளமும், ஆள் பலமும் போதுமானதாக இருந்தும் நாம் நமக்குத் தேவையான உணவையும், உடையையும் உற்பத்திசெய்து கொள்ள முடியாமல் இருப்பது பெரிய குறை. அரசாங்கம் இவ்விஷயமாக, தமிழர், இந்தியர் என்ற வேற்றுமை பாராட்டாமல், மனித சக்தியனைத்தையும், உணவு, உடை உற்பத்திக்குப் பயன் படுத்த முன்வரின், இன்று நாட்டிலுள்ள அவல நிலை பெரிதும் மாற வழிபிறக்கும். இவ்விஷயத்தில் அரசியல் முதலிய பேதம் பாராட்டாமல் எல்லாரும், சுய நலனையும், தேச நலனையும் முன்னிட்டாவது, ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்.

## வர்த்தக சங்கடம்

இலங்கையுடன் வர்த்தகம் நடத்த இரு முக்கிய சங்கடங்கள் இருப்பதாக, சிங்கப்பூர், ஜப்பான் இவ்விடங்களிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளனவாம். ஒன்று, கொழும்புத் துறைமுகத்தில் கப்பல்களுக்கு ஏற்படும் அசாதாரணமானதயக்கம். இரண்டு, கொழும்பு வர்த்தக நிலுவைகளை வசூலிக்க வங்கிகள் மறுப்பது. இது காரணமாக இலங்கைக்குக் கப்பல் கட்டணங்கள் பெரிதும் உயர்த்தப்பட்டு, இங்கு சரக்குகள் விலையும் அதிகரிக்கின்றது. நிலைமை இவ்விதமே நீடிக்குமாயின், இங்கு வர்த்தகம் சீர் குலைவதுடன், வாழ்க்கைச் செலவும் பெரிதும் உயரும்.

பெருகும் வர்த்தகத்துக்கு அதிக துறைமுகங்கள் தேவை. வட இலங்கைத் துறைமுகங்களைச் சீக்கிரத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டும். காங்கேசன் துறை துறைமுகத்தை விருத்தி செய்ய 40 லட்ச ரூபாய் மான்யம் அனுமதிக்கப்பட்டதாகக் கூறப்படினும், சொற்ப அபிவிருத்தி வேலைதான் நடக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின் வருந்தத்தக்கது. தமிழ்ப்பகுதி என்ற காரணத்தால் இதில் கவனக்குறைவாக அரசாங்கம் இருக்குமாயின், அது தேசிய நலனுக்கு மாறாகி, தற்கொலை செய்து கொள்வதாகும்.

## இந்தியா - பாகிஸ்தான்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உறவுகள் மோசமாகி, பேச்சுக்கள் தடித்து வருவது கவலை அளிப்பதாகும். இருநாடுகளும் இராணுவ முஸ்தீபுகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றன. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஜெட் வெடிகுண்டு விமானங்களை ஏராளமாகக் கொடுத்து உதவுகின்றது. மறுபக்கம் இந்தியாவுக்கும் பொருளாதார உதவிகளை அமோகமாக அளிக்கின்றது. இந்தியா ஆயுதஉற்பத்திக்காகவும், இராணுவத்துக்காகவும் அதிகம் செலவிடுகிறது. ருஷ்யாவின் உதவியும் அதற்குண்டு. எல்லைப் புறங்களிலே அடிக்கடி குட்டிச் சண்டைகள் ஏற்படுகின்றன. இத்தகராறுகளைச் சுமுகமாகத் தீர்க்கவும் முயற்சி நடந்தாலும், எந்தச்சமயம் யுத்தத் தீ பற்றிக் கொள்ளுமென்று சொல்ல முடியாது. இவ்விரு ஆசிய நாடுகளுக்கும் யுத்தம் மூளுமாயின் இரு தேசங்களுக்கும் பெரும் நாசமேற்படுவதுடன், ஆசிய முன்னேற்றமும் பெரிதும் தடைபடும். இதைப் பாகிஸ்தானும், இந்தியாவும் உணர்ந்துள்ளதால்,யுத்தம் தவிர்க்கப்படவும், தகராறுகளைப்பேச்சுக்கள்மூலம் தீர்த்துக்கொள்ளவும் இரு நாடுகளும் கூடுமளவு வேண்டியன செய்யுமென்றே நம்பலாம்.

## ஜெர்மனி

வருகிற மே மாதம் 11-ந் திகதி ஜெர்மனிபற்றி வெளிநாட்டு மந்திரிகள் கூடிப்பேசலாம் என்றும், பின்னர் பெருந்தலைவர்கள் கூடலாம் என்றும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இம் மூன்று நாடுகளும் சேர்ந்து கூறிய யோசனையை ருஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது, சிறப்பாக ஜெர்மன் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளாகியும் ஜெர்மன் மக்களுக்கு இன்னும் விமோசனம் இல்லை. நான்கு "நேச" நாடுகளும் ஜெர்மனியைப் பங்குபோட்டு ஆக்கிரமித்துள்ளன. இதனால் ஜெர்மன் மக்களுக்கு எவ்வளவு சங்கடமென்பதை விளக்கத்தேவையில்லை.

அந்நிய இராணுவங்கள் வெளியேறி நாடு மீண்டும் ஒன்றுபட்டாலே ஜெர்மன் மக்களுக்கு விமோசனம் பிறக்கும். ஆனால் இரு போட்டி வல்லரசுகளுக்கிடையிலும் பீதிகளும், சந்தேகங்களும் நீடிக்கும் வரை, இது சுலபமல்ல. என்றாலும் இவ்வளவு காலமாக ஒன்றுகூடிப் பேசவும் சம்மதியாதவர்கள், இப்போது கலந்து பேசவாவது முன் வந்தது பெரியகாரியம். வெளிநாட்டுமந்திரிகள் பூர்வாங்கமாக ஒரு உடன்பாட்டுக்கு வந்து, பிறகு பெருந்தலைவர்கள் நேரில் கூடிப்பேசினால், இந்த முட்டுக்கட்டைதீர வழிபிறப்பது சாத்தியம். இரு ஜெர்மன் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ள முடிவதும் ஒற்றுமைக்கு முதற்படியாக இருக்குமென்று நம்புவது மிகையல்ல.

## யாழ்ப்பாணப் பிரதமர்

சென்ற திங்களன்று கொழும்பில் இரு பிரதம மந்திரிகளை ஒரே மண்டபத்தில் கண்டேன். ஒருவர் கனம் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, எம். பி. இலங்கையின்பிரதமமந்திரி. மற்றொருவர் திரு. செல்லப்பா சரவணமுத்து, கொழும்பு வை. எம். ஸி. ஏ. (கிறிஸ்தவ வாலிபர் சங்கம்) பார்லிமெண்டின் பிரதம மந்திரி.

பிரதமர் பண்டாவை உங்களில்அநேகமாக எல்லாருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் 'பிரதமர்' செல்லப்பா சரவணமுத்துவை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்.

நறுக்கு மீசை, மிடுக்குப் பார்வை. கம்பீரமான தோற்றம், புன்சிரிப்புத் தவழும் முகம். கச்சிதமான உடை. கணீரென்ற குரல். இருபத்தைந்துவயதிருக்கும். அவர் வை. எம். ஸி. ஏ. பார்லிமெண்டின் நூறாவது கூட்டத்தின் விருந்து வைபவத்திலே பிரதமர் பண்டாவை வரவேற்றுப் பேசுகிறார்.

"நான் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து வரும் முதல் பிரதம மந்திரியும் நான்தான்" என்று அவர் நகைச்சுவையுடன் குத்தலாகச் சொன்னதும் பிரதம மந்திரி பண்டா உள்ளிட்டு எல்லாரும் சிரித்துவிட்டார்கள்.

பின்னர் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில், சரவணமுத்துவின் பேச்சுத்திறனைப் பாராட்டிவிட்டு,அவர் இலங்கை பார்லிமெண்டிலும் மெம்பராகி, இலங்கையின் முதல் யாழ்ப்பாண பிரதம மந்திரியாக வர வேண்டுமென்று வாழ்த்துவதாகக் கூறியபோது சபையில் அனைவரும் சந்தோஷத்துடன் கரகோஷம் செய்தனர்.

ஆனால் இது நடக்கக் கூடியதா? இன்றுள்ள 'அப்பே ஆண்டுவா' அரசியல் நிலையைப் பார்த்தால், ஒரு தமிழராவது இலங்கையின் பிரதமராக முடியுமா என்றுதான் தோன்றும். ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவிக்கு வர, சிங்களவராக இருந்தால் மட்டும்போதாதாம், சிங்கள பௌத்தராகவும் இருக்க வேண்டுமாம்! அப்படிப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்துப் பச்சைச் சைவத் தமிழர் பிரதம மந்திரியாவதென்றால், அதற்கு 'அப்பே ஆண்டுவா'க்காரர்கள் அனுமதிப்பார்களா? எல்லாம் வெறும் ஆசைவார்த்தை என்றுதான் நமக்குத் தோன்றுகிறது. நம்பமுடிகிறதா?

ஆனாலும் 'வசிஷ்டர் வாக்காலே பிரம்மரிஷி'என்பது போல் பிரதமர் பண்டாரநாயக்கா, வாயளவிலாவது ஒரு யாழ்ப்பாணத்தமிழர் பிரதமராக வர வேண்டுமென்று கூறியது பெரிய காரியம். இதைப்பற்றிச் சிந்திக்கையில், ஸ்விட்ஸர்லாந்தின் நினைப்பு வந்தது. அங்கு நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவின் பிரதிநிதியும் நாட்டின் தலைவராக வருஷாவருஷம் மாறிமாறி வர மேலான ஒழுங்கு செய்திருக்கிறார்கள்.

இலங்கையை 'ஆசியாவின் ஸ்விட்ஸர்லந்து' என்று கூறிப் பெருமைப்படுகிறார் பிரதமர். ஸ்விஸ் அரசியலமைப்பைப் போல் இங்கு ஏற்படவேண்டுமென்றும்விரும்புகிறார். அப்படி ஏற்பட்டால், யாழ்ப்பாணத்திலிருந்தும், கிழக்கு மாகாணத்திலிருந்தும், மலைநாட்டிலிருந்தும் கூட ஒரு தமிழர் இந்நாட்டின் பிரதமராவது சாத்தியம் தானே! அந்த நாளும் வந்திடாதோ?

—ஐயாறன்

# வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்

## வெள்ளி விழாக் கொண்டாட்டம்

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் 4-4-59 சனிக்கிழமை பிற்பகல் 5-30 தொடக்கம் நடைபெறும்.

**இருபத்தைந்து ஆண்டுகள்**

வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு சென்ற ஆண்டுடன் 25 ஆண்டுகள் பூர்த்தியாயிற்று. 1958ஆம் ஆண்டில் வெள்ளி விழாக் கொண்டாடப்படாமல் பின் போடப்பட்ட காரணத்தால் இவ் விழா இன்று கொண்டாடப்படுகின்றது.

சங்கம் இதுவரைகாலம் ஆற்றிவந்த சேவைகளை ஆசிரிய உலகம் அறிந்துகொள்வதற்கு உபயோகமானமுறையில் **வெள்ளி விழா மலர்** வெளியிடப்பட்டுள்ளது. இம் மலரிற் சங்கத்தின் வளர்ச்சி பற்றியும், ஆசிரிய சமுதாயத்துக்கு அது ஆற்றிவரும் அரும் பெரும் பணிகளைப்பற்றியும், சங்கம் வளர்த்த பெரியார்களைப்பற்றியும் அறிந்துகொள்ளலாம்.

**சகாயநிதி**

இச் சங்கத்தில் 1958ஆம் ஆண்டு முடிவில் 888 அங்கத்தவர் உளர்: இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தொகை இருப்பு இருக்கிறது. சென்ற 25 வருடகாலத்திற் பல ஆசிரியர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் சகாயநிதி அளித்துளது. கடந்த காலத்தில் 91 ஆசிரியர்கள் இளைப்பாறினர். 34 பேர் இறந்தனர். இவர்களின் பேரால் மொத்தம் ரூபா 182839-07 சகாயப்பணமாக உதவப்பட்டது.

சங்கத்தின் இன்றைய தலைவர் திரு. ச. அம்பிகைபாகன் சங்கத்துடன் தமக்குள்ள தொடர்பைப்பற்றியும் அதன் முன்னேற்றத்தைப்பற்றியும் மலரில் எழுதியுள்ளார். முன்னாள் தலைவர் சி. சுவாமிநாதன், ச. பேரின்பநாயகன், திரு. கே. நேசையா ஆகியோரின் கட்டுரைகளும் இதில் உள.

வட-இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் கே. சுப்பையா, ஆசிரியமணி மு. வைத்திலிங்கம், இளைப்பாறிய ஆசிரியர். அ. மு. சாமுவேல், திருவாளர்கள் ஏ. ஸி. சுந்தரம்பிள்ளை, ஸி. ஓ. எலியாஸ் ஆகியோர் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டி ஆசிச் செய்திகள் அளித்துள்ளனர்.

இச் சங்கத்தின் செயலாளராகத் திரு. கே. சுப்பையாவும் பொருளாளராக திரு. ஸி. வைரமுத்துவும் பணியாற்றி வருகின்றனர்.

# அரசாங்கத்தின் பலமென்ன?

— நமது அரசியல் நிருபர் —

இப்போதுள்ள எம். ஈ. பி. அரசாங்கத்தின் பலமென்ன? பார்லிமெண்டில் எவ்வளவு எம். பிக்கள் அக்கட்சியிலுள்ளனர்? இக்கேள்வியைப் பிரதமர் கேட்டதற்கு, திரு. முனசிங்கா "ஏறத்தாழ 56 பேர்" என்று பதிலளித்தாராம். "அப்படியானல் 6 பேர் தம் கட்சியைவிட்டு விலகி விட்டால் நமக்கு மெஜாரிட்டி பலம் இராதுதானே" என்று பிரதமர் கூறியதும், "அப்படியாயின் எதிர்க்கட்சியிலிருந்து நமக்குத் தேவையான எண்ணிக்கையைப் பெறலாம்" என்று உணவு மந்திரி பிலிப் கூறினர்.

கூட்டுறவு அபிவிருத்தி வங்கி மசோதாபற்றி, உணவு மந்திரி பிலிப்புக்கும், நிதிமந்திரி சொய்ஸாவுக்கும் பலத்த வேற்றுமை. இதுபற்றி மந்திரிசபையில் வார்த்தைகள் தடித்தன. இம்மசோதாவைத் தாமும் மற்றும் சகாக்களும் எதிர்ப்பதாக நிதிமந்திரி கூறிப் பலமாகவே ஆட்சேபிக்கவே, பிரதமர், இவ்விஷயத்தை அரசாங்கக் கட்சியே தீர்மானிக்க வேண்டுமென்று முடிவு கூறிவிட்டார். அரசாங்கக் கட்சியில் உணவு மந்திரி பிலிப்புக்கு அதிக செல்வாக்கு உண்டென்பது குறிப்பிடத்தக்கது.

நிதி மந்திரியும் அவரது சகாக்களும் கட்சியை விட்டு வெளியேறினலும், எதிர்க்கட்சியிலிருந்து போதிய பலம் பெறலாமென்று மந்திரி பிலிப் கூறியதற்கு, பிரதமர் இத் தகராறை அவசரமாகத் தீர்த்து, தாம் ஜனநாயகமுறையைப் பின்பற்றப்போவதாகக் கூறி, மசோதா விவாதத்தை ஒத்தி வைத்தார்.

எதிர்க்கட்சியிலுள்ள இடதுசாரிகளை, மந்திரி பிலிப் வரவேற்று ஒத்துழைக்கத் தயாரென்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

## தமிழரசுத் தந்தையின் பிறந்ததின விழா

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 61-வது பிறந்த தினமாகிய 31-3-59 செவ்வாய்க்கிழமையன்று மாலை 6 மணியளவில், உரும்பராய் ஞானோதய வாசிகசாலையில் அன்னரது சேவைகளைப் பற்றிய பாராட்டு விழாவொன்று நடைபெற்றது. முன்னைநாள் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம், திரு. செல்வநாயகம் அவர்களது உருவப் படத்தைத் திரைநீக்கஞ் செய்துவைத்துப் பேசியதாவது:

இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு அவர் 10 வருடங்களுக்கு முன் கூறியவை அனைத்தும் இன்று உண்மையாகி வருவதை நாம் எல்லோரும் காண்கிறோம். பிரஜாவுரிமை பறிபோன காலத்தில், மொழியுரிமை, நிலவுரிமை பற்றிய ஆபத்துக்களையும் அவர் தீர்க்கதரிசிபோன்று கூறியிருந்தார். அவரது வழியிலே நாமும் நம்பிக்கையுடன் சென்றால், விடுதலை விரைவிலே கிட்டும்.

திருமதி பொன்னம்மா அழகரத்தினம், திருவாளர்கள், கே. கனகசுந்தரம், எஸ். தனேஸ்வரன் உட்படப் பலர் பேசினர். திரு. எஸ். ரி. குணரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

# நேரு மீது பண்டாவுக்குள்ள பெருமதிப்பு

## கிழக்கு மாகாணத்தில் 'அந்நியர்' குடியேற்றம்

— நமது கொழும்பு நிருபர் —

இந்திய பிரதமர் நேருஜியின் மீது பிரதமர் பண்டாரநாயக்கா தமக்குள்ள பெருமதிப்பை, கொழும்பு வை. எம். ஸி. ஏ. பார்லிமென்டின் நூருவது கூட்ட விருந்தின்போது பேசுகையில் வெளியிட்டார். சில வாரங்களுக்கு முன்பாக புதுடில்லியில் மௌலானா ஆஸாத்தின் ஞாபகார்த்தமாக நேருஜி ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்தின் முழு விபரங்களையும் தாம் படித்ததாயும், எல்லாரும் படிக்கவேண்டுமென்றும் திரு. பண்டாரநாயக்கா யோசனை கூறினர்.

நேருஜி அப்பிரசங்கத்தில், சமதர்மமுறையில் பொருளாதார அபிவிருத்தியுடன் நில்லாது, ஒழுக்கம், ஆன்மிகம் இவற்றை வற்புறுத்தி ஒவ்வொருவரும் தம் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றினல், உரிமைகள் தானகக் கிடைக்குமென்றும் சமாதானம் செய்பவர் பாக்கியவான்கள், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும் கூறியது குறிப்பிடத்தக்கது.

அந்த விருந்துக் கூட்டத்துக்கு கிறிஸ்தவரான நிதிமந்திரி சொய்ஸாவும் வந்திருந்து பேசினர். வை. எம். ஸி. ஏ. ஒரு கிறிஸ்த ஸ்தாபனமாயினும், எல்லா சமயத்தவர்களும் சரிசமமாகப் பங்குபற்ற முடிகிறதென்றும், அது போலவே இலங்கையிலும் பல சமயத்தவர்களும் சேர்ந்து வாழ முடியவேண்டுமென்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையுமென்றும் குறிப்பிட்டார்.

**அமைச்சர் பதில்**

தம்பலகாமம் கிராமாபிவிருத்தித் திட்டநிலங்களில், கந்தளாய் ஆக்கிரமிப்பாளர்கள் குடியேற்றப்பட்டுள்ளனரா? என்று திருக்கோணமலை பிரதிநிதி திரு. இராஜவரோதயம் பார்லிமெண்டில் கேட்டதற்கு, காணிக்கச்சேரிமூலம் 600 ஏக்கர் நிலத்தை 300 பேருக்குக் கொடுத்திருப்பதாயும், அரசாங்க நிலத்தில் ஆக்கிரமித்தவர்களை எங்காவது குடியேற்ற வேண்டியிருப்பதாயும், ஆனல் உள்ளூர் மக்களின் மனுக்களை அலட்சியம் செய்யவில்லையென்றும் நிலமந்திரி ஸி. பி. டி. சில்வா பதில் அளித்தார். கிழக்கு இலங்கையைத் தமிழர்கள் படிப்படியாக இழந்துவருவதற்கு இது ஓர் அத்தாட்சி என்று அஞ்சப்படுகிறது.

# பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பனியொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக்கம்பனி தன் வேலையை முடித்துவிட்டு வெற்றிகரமாக வெளியேறிவிட்டது. இக்கம்பனித் தொழிலாளரிடம் பயிற்சி பெற்றவர்களும் அனுபவம் குறைந்தவர்களுமான இளைஞர்களே இப்போது அதனை இயக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறர்கள். பரீட்சார்த்த வேலைகள் அவர்களது கண்காணிப்பில் ஒன்றன் பின் ஒன்ருக மூன்று தடவைகள் நடைபெற்றன. மூன்று தடவைகளும் படுதோல்வியே கிடைத்தது. கடைசியாகச் சென்றமாதம் நடந்த பரிசீலனை பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளதாம். அந்த இயந்திரத்தை இனி என்ன செய்தால் சரிப்படுத்த முடியுமென்று இப்போது தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றனர்.

இருந்தாலும் இன்னெரு தட்வை முயற்சித்துப் பார்ப்பதென்ற முடிவுடன் மீண்டும் இம்மாதம் 15-ந் திகதி பரீட்சார்த்த வேலைகள் நடைபெறவிருக்கின்றன. அந்த நான்காவது முயற்சியும் வெற்றியளிக்காதென்று இப்போதே அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் அடிப்படையில் பெரிய தவறுண்டென்று உணர்ந்திருப்பதினலேயாகும்.

**முற்றிலும் புதிது**

இத்தொழிற்சாலையின் பிரதம நிர்வாக பொறுப்பாளராக நியமிக்கப் பட்டிருக்கும் திரு. கோபால்ராவ் அத்துறையில் நிறைந்த அனுபவம் உடையவரென்று அறியப்படுகிறது. ஆயினும் அவருக்கு இங்கு நிறுவப்பட்டிருப்பது போன்ற அமைப்புடைய இயந்திரம் முற்றிலும் புதியதாம். இதனல் அவர் எதுவும் செய்யமுடியாத வகையில் திண்டாடி வருகிருரெனத் தெரிகிறது. ஆகவே பயிற்சி பெறும் நிலையிலுள்ளவர்களின் கையில் இத்தொழிற்சாலையின் இயந்திர சாதனங்கள் சிக்கிக் கொண்டு இப்போது திண்டாடுகின்றன.

இயந்திர இணைப்பைப் பரிசீலனை செய்து திருத்தியமைக்க வெளிநாட்டுத் தொழில் நுட்ப நிபுணர்களை அவசியம் அழைக்க வேண்டும் என்ற கருத்து சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இப்போது நிலவுகிறது. அண்மையில் நடைபெறவிருக்கும் பரீட்சார்த்த வேலைகளின் பின் இந்த முடிவு உறுதி செய்யப்படலாம்.

**ரூ. 25,000 வேதனம்**

உபயோகமற்ற நிலையில்— அதுவும் தோல்விக்கு மேல் தோல்வியளித்து வரும் இத் தொழிற்சாலை அரசாங்க நிர்வாக யந்திரத்தின் கண்ணேட்டத்தில் மற்ருெரு விதமாகப் பட்டு வருகிறது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதற்கு மூடுவிழா நடத்திவிட்டாலென்ன என்று கூட ஆலோசிக்கப்பட்டுவருகிறதாம். மாதந்தோறும் அங்குள்ள ஊழியர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வேதனமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அது ஒரு அனவசிய செலவாக இருப்பதால் மூடிவிடுவது உத்தமம் என்ற எண்ணம் அமைச்சரவைக்கு அண்மையில் உதித்தது என்று கூடச் சொல்லப்படுகிறது. ஆயினும் இந்த முடிவை வலுப்படுத்தும் வகையில் இப்போது தொழிற்சாலை நிர்வாகக்குழுவின் மீது பிழைகண்டு பிடிக்கும் படலம் ஆரம்பமாகியிருக்கிறது. இந் நிர்வாகக் குழு அமைச்சின் மீதே முழுக் குற்றத்தையும் சுமத்தியிருக்கிறது. வெளிநாட்டு நிபுணர்களை அழைக்க அமைச்சர் தவறிவிட்டாரென்று எடுத்துக் காட்டப்பட்டு வருகிறது. இரு சார்பினருக்கிடையிலும் நெருக்கடியான கட்டங்கள் உருவாயினவெனினும் மற்ருெரு நோக்கத்தின் பேரால் நிர்வாகக்குழு அதனைத் தந்திரமாகச் சமாளித்துக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

**பீதி**

இத்தொழிற்சாலையை அரசாங்கம் எப்படியும் மூடிவிட முயற்சிக்கிறதென்ற பீதி அங்கு பணியாற்றும் தொழிலாளருக்கு ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால் மாற்ருந்தாய் மனப்பான்மைகாட்டி அதனை அனதரவாகக் கைவிட்டிருப்பதேன் என்று தொழிலாளர் மத்தியில் பேசிக்கொள்ளப்படுகிறது.

ஆகவே சந்தர்ப்பத்தைத் தவறவிடாது ஒரு போராட்டத்தைத்தானும் நடத்துவது என்ற முடிவுக்குத் தொழிலாளர் சங்கம் வந்திருக்கிறது. இத்தொழிற்சாலையில் கடமையாற்றிவரும் 100க்கு மேற்பட்ட ஊழியர்களும் தங்களுக்கு வேலை பறிபோய் விடுமோ என்று அஞ்சுகிருர்கள்.

தொழிற்சாலையின் பரிதாப நிலை குறித்தும் அதற்குவிமோசனம் தேடும்வகையிலும்கைத்தொழில் அமைச்சரிடம் அறிக்கையொன்று சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது,

சந்தர்ப்ப நிலைவரங்களை வைத்துக்கொண்டு பார்க்கையில் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையின் நித்தியகண்டமும் பூரண ஆயுளுமாக இருக்கிறதென்பது புலனகிறது.

## பிரதமர் பண்டாவுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது புகழை ஓங்கச் செய்யாது. இது நீடித்தால் அவரே இதைக் கிளப்பிவிட்டுள்ளதாகவும் கருதப்படக்கூடும்.

மேலும் பிரதமர் இவ்விஷயத்திலும் நெளிந்து கொடுத்துவிட்டார். ஸில்வாவைத் திறமையற்றவர் என்று கூறிய பிரதமர் இப்போது தாம் அவர் திறமையைக் குறை கூறவில்லை என்று சொல்லியதுடன் அவரது சேவையைப் பாராட்டியும் பத்திரம் வழங்குவதாகத் தெரிவித்தார்.

மதவெறியர்களுக்கு வாயாப்புப்போடவே, ஒருபௌத்தரைத் தற்காலிகமாக இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமித்துள்ளதாயும், பின்னர் நிரந்தரமாக வேறு ஏற்பாடு செய்யப்படுமென்றும் கருத்துப்பட பெரிய பொலிஸ் அதிகாரிகளுக்கு ஆறுதல் கூறி, திஸ்ஸநாயக்காவின் ராஜினமாவையும் வாபஸ் வாங்கும்படி செய்தார்.

அவரது அரசியல் எதிரிகள் மற்றோர் நெருக்கடி உருவாகிறதென்றும் பொலிஸ் படையில் பலர் ராஜினமா செய்வாரென்றும் மனக்கோட்டை கட்டியிருக்கலாம். என்ருலும், தனது சாதாரணமான ராஜதந்திரத்தால் சமயோசிதமாகப் பேசி இந்த நெருக்கடியைப் பிரதமர் வெற்றிகரமாகச்சமாளித்துவிட்டர்ர்.

## சரித்திர ஆராய்ச்சிக்கழகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்துக்கு "வீரகேசரி" பிரதம ஆசிரியர் திரு. கே. வி. எஸ். வாஸ் சமுகமளித்திருந்தார்.

ஈழத்தமிழர் சரித்திரஆராய்ச்சிக் கழகத்தின் நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. எஸ். யு. சோமசேகரம்; உபதலைவர்கள்: திரு. ச. அம்பிகைபாகன். கலைப்புலவர் க. நவரத்தினம்; இணைச் செயலாளர்: திரு. ஸி. எஸ். நவரத்தினம்; வி. கே. நடராசா. பொருளாளர்: து. சீனிவாசகம். செயற்குழு: கே. அருணசலம். பி. எஸ். குமாரசுவாமி. ச. பேரின்பநாயகன். வி. நாகலிங்கம், முதலியார் செ. முத்துத்தம்பி. எம். இளையதம்பி. செல்வி. ரி. அருளம்பலம். வித்துவான்: க. கி. நடராஜன், எஸ். பி. நடராஜா, எஸ். சிவநேசன்.

# எலும்பினுள் வளர்க்கப்பட்டவை

ஆ. சி. சே. வீரக்கோன், Ph. D; F. R. E. S.

விலங்கியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்

யூகோசுலோவியாவில் உள்ள வின்கா அணுவுடைக்கும் கருவியில் 1958-ம் ஆண்டு 15-ந் திகதி (Vinca Atomic reactor) பழுதேற்பட்டது. இதனால் அக்கருவியை உபயோகித்துக் கொண்டிருந்த ஆறு விஞ்ஞானிகள் 700 லிருந்து 1000 ரோண்ஜன் * பலமுள்ள கதிரியக்கத்தால் தாக்கப்பட்டனர். முன் அனுபவப்படி இத்தாக்குதலால் அவர்கள் இறப்பது நிச்சயமென்றறிவோம். ஏனெனில் சில வருடங்களுக்கு முன் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள லோ அலோமா (Los Alamos) பரிசோதனைக் கூடத்தில் டாக்டர் லூயி சுலோடினும் மற்ருேர் விஞ்ஞானியும், தங்கள் சோதனைகளை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது காத்திராப்பிரகாரமாய் 800 ரோண்ஜன் கதிரியக்கத்தால் தாக்கப்பட்டார்கள். இவ்விருவரின் உயிர்களையும் காப்பாற்றுவதற்கு மனித சக்திக்குட்பட்ட எல்லாவித முயற்சிகளும் செய்யப்பட்டன. ஆனல் இவைகளொன்றும் பலனளிக்கவில்லை. ஒருவர் 9 நாளிலும் மற்றவர் 24 நாளிலுமாக இருவரும் இறந்தனர்.

### கதிரியக்கத்தாக்கம்

கதிரியக்கத்தினல் உடலில் நோயேற்படுகின்றது. சென்ற யுத்தத்தின்போது ஹிரோஷீமாவிலும் நாகசாகியிலும் அணுக்குண்டுகள் வெடித்த பொழுது கூட இறவாதவர்கள், பின்னர் கதிரியக்கத்தினல் ஏற்பட்ட நோயினல் இறந்தார்கள். (மனிதன் இறப்பதற்குக் கதிரியக்கம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.) அணுக்குண்டுகள் வெடித்த இடத்திற்கருகிலிருந்தவர்கள் கூடிய அளவு கதிரியக்கத்தினல் தாக்கப்பட்டார்கள். அணுக்குண்டுகள் வெடித்த இடத்திலிருந்து அரை மைலுக்குட்பட்ட இடங்களிலிருந்தவர்கள் கிட்டத்தட்ட 1000 ரோண்ஜன் கதிரியக்கத்தினல் தாக்கப்பட்டனர். இவைகள் வெடித்த இடத்தில் அரைமைலிலிருந்து ஒரு மைலுக்குட்பட்ட இடங்களில் வசித்தவர்கள் கிட்டத்தட்ட 700 ரோண்ஜன் கதிரியக்கத்தினற் ருக்கப்பட்டனர். இவர்களெல்லோரும் எட்டு வாரங்களுள் இறந்தார்கள்.

### உடல்நலம் பாதித்தல்

உடலில் கதிரியக்கம் காரணமாக ஏற்படும் நோய் கதிரியக்க நோய் (Radiation sickness) எனப்படும். அணுக்குண்டுகள் வெடிக்கப்பட்டதனல் யப்பானில் இந்நோய் தோன்றி மக்களையழித்தது. ஆனல் அங்கு உண்டாக்கப்பட்ட கதிரியக்கத்திலும் பார்க்கக் குறைந்த அளவு கதிரியக்கத்தாக்குதலும் இந்நோயைத் தோற்றுவிக்கும். இந்நோய் நூற்றுக்கணக்கான ரோண்ஜன்களில் இயங்கும். கதிரியக்கத்தினலும் ஏற்படலாம்; மிகக்குறைந்த ரோண்ஜன்களில் இயங்கும் X— கதிர்களாலும் ஏற்படலாம். X— கதிர்கள் எனக் கூறப்பட்டமையால் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஆஸ்பத்திரிகளில் X — கதிர்கள் உடல் நலத்தைப் பரிசோதிக்க உபயோகிக்கப்படும்பொழுது கதிரியக்க நோய் தோன்ருது. ஏனெனில், அங்கு உபயோகிக்கப்படும் கதிரியக்கத்தின் அளவு 10 ரோண்ஜன் களுக்குட்பட்டதேயாகும். இப்படிக் கூறியபடியால், X— கதிர்கள் தேகத்தைப் பாதிக்க மாட்டா எனக்கூறுவதற்கில்லை. அவை வேறு அநேக விதங்களில் உடல்நலத்தைப் பாதிக்கக் கூடும். ஆனல் அது வேறுகதை.

### நோயின் அறிகுறி

கதிரியக்கத்தாக்குதலின் அளவு கூடியதாகவிருந்தால், உடலில் கதிரியக்க நோயேற்படும். இந்நோயின் முதல் அறிகுறி வாந்தியேயாகும். பின் ஒன்றிரண்டு நாட்களில் வாந்தியெடுப்பது நின்று உடல் நிலையிற் சிறிது அபிவிருத்தியேற்பட்டது போலத் தோன்றும். ஆனல் மீண்டும் சில தினங்களில் வாந்தியும் காய்ச்சலும் காணப்படும். இப்பொழுது பசியின்மையும், பேதியும் சாதாரணமாகத் தோன்றும் அறிகுறிகளாகும். பிறகு உடல் மெலிவுற்றும் தலைமயிர்கள் விழுந்து வழுக்கையும் தோன்றும்; உடலிலுள்ள இழையங்கள் (tissues) எல்லாம் பழுதடைந்திருக்கும்; வயிறு, குடல் ஆகியவற்றின் உட்புறச் சவ்வுகள் அழிந்திருக்கும். அதனல் உணவு உடலினுட் கிரகித்துக்கொள்ளப்படமாட்டாது. நீண்ட எலும்புகளிலுள்ள கொழுப்புஅழிந்துவிடும். இங்கேதான் இரத்தச் சிவப்புத் தணிக்கைகள் உண்டாக்கப்படுகின்றன. இக் கொழுப்பு அழிவதனல் செந்நிற இரத்தத் தணிக்கைகளினெண்ணிக்கை குறைந்து, உடல்வெளிறி, இரத்தமின்மை நோய் ஏற்படும். மேலும் இரத்தம் தனது கட்டியாகக்கூடிய தன்மையை இழக்கும்; உடலுள் இரத்தக் கசிவு மேற்படும். இவ்விரத்தக் கசிவு முக்கியமாக முரசுகளிலும், குடலிலும் அதிகமாக இருக்கும். நோய்களைத் தோற்றுவிக்கும் கிருமிகளோ அல்லது வேறு உயிரினங்களோ உடலுள் வாழ்ந்து வளராமல் பாதுகாத்துக்கொள்ளும் தன்மையையும் உடல் இழக்கும். இதனல் நோய்கள் சீக்கிரமாகத் தொற்றிக்கொள்ளும். கடைசியாக இனப்பெருக்கவுறுப்புக்கள் பழுதடையும். இதனல் ஆண், பெண் கலங்கள் உற்பத்தியாகமாட்டா; மக்கள் அலிகளாவர்.

### சாதல் நிச்சயம்

கதிரியக்கத்தாக்குதல் குறைந்த அளவிலிருந்தால் கதிரியக்க நோயிலிருந்து தப்பலாம். இது 100 லிருந்து 200 ரோன்ஜனுக்குள்ளிருந்தால் நிச்சயமாக உடல் நலமடையும். கதிரியக்கம் 400 ரோண்ஜனுக்கு மேற்பட்டதாயிருந்தால் தாக்கப்பட்ட உயிரினங்களில் நூற்றுக்கு ஐம்பது சத விகிதமே உயிர்வாழமுடியும். கதிரியக்கத் தாக்குதல் 600 ரோண்ஜன்களுக்கு மேற்பட்டதாயிருந்தால் சாதல் நிச்சயம். முற்கூறப்பட்ட ஆறு யூகோசுலோவிய விஞ்ஞானிகளும் 700 லிருந்து 1000 ரோண்ஜன்களுக்குட்பட்ட கதிரியக்கத்தால் தாக்கப்பட்டனர். முன் அனுபவத்தின் பிரகாரம் அவர்கள் கட்டாயமாக இறக்கவேண்டும். இதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை. எஞ்சுவது, அவர்கள் கதிரியக்கத் தாக்குதலின் பின் எவ்வளவு சீக்கிரத்தில் இறப்பார்கள் என்பதேயாகும்.

ஆனல் சென்ற 16-2-59 இல் இவ்வறுவரில் ஒருவரே இறந்தாரெனவும், மற்ற ஐவரும் உடல் நலமடைந்து பெல்கிராட்டிலுள்ள தங்களது இல்லங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்ருர்களெனவும் அறிவிக்கப்பட்டது. கதிரியக்க நோய் முழுவதும் மாற்றப்பட்டதா? உண்மையாயின் இது எவ்வாறு செய்யப்பட்டது?

### கொல்லும் அளவு

சுண்டெலிகள், சீமைப்பெருச்சாளிகள் குரங்குகள், பன்றிகள், ஆடுகள் போன்ற விலங்குகளும் கதிரியக்கத் தாக்குதலினல் பீடிக்கப்படுகின்றனவென்பது அநேக வருடங்களுக்கு முன்னமே அறிந்தவோருண்மை. இவ்விலங்குகள் ஒவ்வொன்றும் கதிரியக்கத்தாக்குதலின் வேறுபடும் அளவுகளில் இறக்கும். இந்நிலை அவ்விலங்குகளுக்குக் "கொல்லும் அளவு" (lethal dose) எனப்படும். கொல்லக்கூடிய அளவுக்குக் குறைந்தால், தாக்கப்பட்ட விலங்குகளின் உடல்நிலை திருந்தக்கூடும். கதிரியக்க அளவு குறையக் குறைய உடல்நலம் அடைவது இலகுவாகும். கதிரியக்க நோய் மேற்கூறப்பட்ட விலங்குகளில் தோற்றும் மாறுதல்கள் இக் காரணத்தினல் மனிதர்களுடலில் ஏற்படும் மாறுதல்கள் போன்றவையே.

விலங்குகளினுடலில் கதிரியக்கத்தாக்குதலினல் ஏற்படும் மாறுதல்கள் சோதிக்கப்படுகையில் ஆச்சரியப்படும்படியான ஒரு விஷயம் அறியப்பட்டது. ஒரு சுண்டெலியின் வாலை ஈயத்தகடொன்றினல் மூடி, பின் அச்சுண்டெலியைக் கதிரியக்கத் தாக்குதலுக்கு உள்ளாக்கினல், அது சாதாரணமாக இறக்கும் அளவிற்கு அரைவாசி மேற்பட்டதாக்குதலைத் தாங்கும். உடலில் உபயோகமற்ற உறுப்பாகிய வாலை கதிரியக்கத் தாக்குதலினின்று பாதுகாத்ததினலேயே இவ்விலங்கு கதிரியக்கத் தாக்குதலினின்று ஓரளவு பாதுகாப்பையடைகின்றது. இவ்விதத்திலேயே பரிசோதனைகளைத் தொடர்ந்து நடத்தியபொழுது உடலில் வேறு சில பாகங்கள் கதிரியக்கத்தாக்குதலின்போது மூடப்பட்டால், இத்தாக்கல் உடலைப் பாதிப்பது நன்கு குறையும் என்றறியப்பட்டது. உதாரணமாக, மண்ணீரல் (Spleen) எலும்புக்குள்ளிருக்கும் கொழுப்பு (Bone-marrow) போன்ற உறுப்புக்கள் மூடப்படுவதினல் கதிரியக்க நோய் தோன்றுவதும் குறைகின்றது.

### ஒருவழி

இச்சோதனைகள் கதிரியக்க நோய் தோன்றியபிறகும் அதை மாறுவதற்கு ஒரு வழியைக் காண்பித்தன. கதிரியக்கத்தினற் பழுதடைந்த எலும்புக் கொழுப்பையோ அல்லது மண்ணீரலையோ உடலிலிருந்து எடுத்துவிட்டு அவற்றினிடங்களில், கதிரியக்கத்தாற் பாதிக்கப்படாத விலங்குகளின் உறுப்புக்களைப் பொருத்திவிட்டால், கதிரியக்க நோய் மாறக்கூடும் என்றறியப்பட்டது. ஆனபோதிலும், மனிதனில் கதிரியக்க நோய் ஏற்படும் பொழுது இத்தகைய ஒட்டுப்பொருத்து முறையைக் கையாண்டு நோயை மாற்றுவது இலகுவாகத் தோன்றவில்லை.

### ஒட்டுப் பொருத்து முறை

சாதாரணமாக உடல் தன்னுடைய நலத்திற்குக் கேடு விளைவிக்கும் மற்ற உயிரினங்களெதையும் தன்னுள்ளே வாழ்ந்து வளரவிடுவதில்லை. இவ்வுயிரினங்கள் உடலில் நோய்களையுண்டாக்கும் கிருமிகளாகவிருக்கலாம். அல்லது வேறு உயிரினங்களாகவிருக்கலாம். வேறு உயிரினங்கள் தன்னுள் வளராமல் தடுக்கும் திறன் உடலுக்கு இயற்கையாகவேயுண்டு. இவ்வியற்கைத் திறனையடிப்படையாகக் கொண்டே நெருப்புக்காய்ச்சல், பெரியம்மை, இளம்பிள்ளை வாதம்போன்ற நோய்களுக்குத் தற்கால வைத்தியமுறை தடுப்பளிக்கின்றது. ஆனல் இதே வல்லமை, நோய்களை உடலில் உண்டாக்காத வேறு உயிரினங்கள் உடலுள் வளர்வதையும் தடுக்கும். சத்திரசிகிச்சையில் ஓர் உடலில் ஒட்டுப்பொருத்துகள் செய்ய வேண்டியிருந்தால், அதே உடலின் தோலோ அல்லது வேறுபாகங்களோதான் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஒரே கருவிலிருந்து தோன்றிய இரட்டையர்களின் தோல்களைத் தவிர மற்றவர்களின் உறுப்புகள் ஒட்டுப் பொருத்தல் முறைக்கு உபயோகப்படமாட்டா. உலகிலுள்ள மக்களெல்லோரும் ஒரே கருவிலிருந்து தோன்றியவர்களா? இவ்வுண்மையின் காரணமாகவே தற்காலத்தில் நோயாலேயோ அல்லது விபத்துக்களின் காரணமாகவோ இழக்கப்பட்ட உறுப்புக்களை ஒட்டிப்பொருத்துவதில் சத்திர சிகிச்சையாளர் முழு வெற்றியைக் காணவில்லை.

உடலுக்கு இத் தடுப்புத்தன்மையிருந்தபோதிலும் கதிரியக்க நோய்க்கு என்ன தடுப்புள்ளது என்பதையும், மேற்கூறிய யூகோசுலோவிய விஞ்ஞானிகள் எவ்விதமாக உடல் நலமடைந்தார்களென்பதையும் இது மக்களுக்கு என்ன குறிக்கோளாக விளங்குகின்றதென்பதையும் அடுத்த வாரம் விளக்குகின்றேன். (தொடரும்)

---

* கதிரியக்கம், ரோண்ஜன் (Rontgen) எனப்படும் அளவுகளிலேயே கணக்கிடப்படுகின்றது. இவ்வளவின் பெயர் X — கதிர்களைக் கண்டுபிடித்த பெரியாரின் நினைவிலே இடப்பட்டுள்ளது.

---

# சென்ற வாரத்தில்

**ஞாயிறு 29**

24 மணித்தியாலத்துக்குள் காலை 9.30 வரை இலங்கையில் எந்தப் பாகத்திலாவது ஒரு துளி மழைதானும் பெய்யவில்லை.

மலாயா அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குக் கொம்யூனிஸ்டுகள் செய்த சதியொன்றுக்குச் செஞ்சீனம் உதவி செய்ததென மலாயா அரசாங்கம் அதன்மீது குற்றஞ் சாட்டிற்று.

திபேத் நிலைமை சம்பந்தமாகச் சீனத்தின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாதென முதலமைச்சர் நேரு தெரிவித்திருப்பதைப் புதுடில்லியிலுள்ள சீனத் தூதுவர் காரியாலயம் வரவேற்றிருக்கின்றது.

ஆபிரிக்காவிலுள்ள நியாசலாந்தில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி நடைபெறுகிறது. இதனை அடக்கி ஒடுக்குவதற்காக 5577 ஆபிரிக்கர்களை அரசாங்கம் சிறையிலடைத்துள்ளது.

**திங்கள் 30**

உயர்நீதிமன்ற வழக்கு விசாரணை யாழ்ப்பாணத்தில் டக்டர் எச். டபிள்யூ. தம்பையா தலைமையில் ஆரம்பமாயிற்று. இம்முறை 11 கொலை வழக்குகள் விசாரணை செய்யப்படும்.

இலங்கைப் பொலிஸ் தலைமை உதவி அதிகாரி திரு. ஸி. ஸி. திசநாயக்கா தமது பதவியைத் துறந்தார்.

சகல சீவசத்துக்களும் நிறைந்த உணவைப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு அளிப்பதற்கான திட்டத்தை இலங்கைக் கல்விப் பகுதியினர் வகுத்துள்ளனர். இத் திட்டத்தின்படி ஒரு பிள்ளைக்கு மாதமொன்றுக்கு ரூபா 20 செலவாகும்.

சிங்கப்பூரிலும் யப்பானிலும் உள்ள வர்த்தக நிலையத்தினர் தாம் இலங்கையுடன் வர்த்தகம் செய்து கொள்வது மிகுந்த கஷ்டமாகிக் கொண்டு வருகின்றதென இலங்கையிலுள்ள தமது வர்த்தகப் பிரதிநிதிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

தலாய் லாமா தலைமையில் உள்ள திபேத்அரசாங்கத்தைச் சீனத்து முதலமைச்சர் சௌ-என்-லாய் கலைத்துள்ளார்.

வட அத்லாந்திக் ஒப்பந்த நாடுகளும் வார்ஸோ ஒப்பந்த நாடுகளும் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென சோவியத் ருஷியா யோசனை கூறியுள்ளது.

இந்தியாவின் ரப்பர் உற்பத்தி சென்ற பத்து ஆண்டுகளில் அறுபது சதவிகிதம் உயர்ந்துள்ளதென அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகின்றது.

**செவ்வாய் 31**

தமிழரசுக் கட்சியின் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 61-வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் முறையில் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

மாலைத்தீவு உள்நாட்டு விவகாரத்தில் பிரிட்டிஷார் தலையிடுவதையும், அத்தீவிலுள்ள மக்கள் விருப்பத்துக்கு எதிராக அங்கு இராணுவத்தளம் அமைப்பதையும் இலங்கை ஆபிரிக்க-ஆசிய ஐக்கிய சங்கம் ஆட்சேபித்துள்ளது.

கொம்யூனிஸ்டுகள் ஈராக்கை முற்ருக ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஜோர்தான் மன்னர் ஹுஸைன் தெரிவித்தார்.

கல்கத்தாவிலிருந்து 200 மைல் தூரத்திலுள்ள அகர்தலா விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்ட இந்திய எயர் லைன் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியது. சகலரும் உயிர் இழந்தனர்.

**புதன் 1**

உலக விவகார இலங்கைக் கழகம் ஒன்றினை கொழும்புப் பல்கலைக்கழக மண்டபத்தில் முதலமைச்சர் பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்தார்.

இந்திய முதலமைச்சர் நேருவை மொஸ்கோவுக்கு வருமாறு ருஷிய முதலமைச்சர் குருஷேவ் அழைத்துள்ளதாகக் கிழக்கு ஐரோப்பிய இராச தந்திர வட்டாரம்ஒன்றில் பேசப்படுகிறது.

**வியாழன் 2**

திரு. எம்.டபிள்யூ.எப். அபேகூன் தற்காலிகமாகவே பொலிஸ்பகுதி தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதால் ஐ. ஜி. பி. நியமனம்பற்றி எவ்வித நடவடிக்கையும் கையாளுவதில்லையென பொலிஸ் அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வட.இந்தியாவிலுள்ள போப்பால் என்ற இடத்தில் 'ஹோலி' பண்டிகை சம்பந்தமாக இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் நடைபெற்ற குழப்பத்தில், இருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர்.

எயர் சிலோன் விமானிகள் மூன்ருவது தினமாக வேலை நிறுத்தம் செய்தனர்.

# சிறுவர் பகுதி

## குதூகலம் நிறைந்த வைபவம்

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழாவின் போது அக்கல்லூரி மாணவன் செல்வன் ஆர். பாலராஜா அனைவரையும் வரவேற்றுப் பேசியதாவது:**

உங்களில் அநேகருக்குப் பரிசளிப்புவிழா என்றால் பொழுதைப் போக்குவதற்குச் சமூகம் உண்டு பண்ணிய கருமங்களில் ஒன்று எனத் தோன்றலாம்.

ஆனால் கல்லூரிகளிலுள்ள எங்களுக்குப் புதுமையும் குதூகலமும் நிறைந்ததாகவே இவ்வைபவம் தோன்றுகிறது. புராணிக்காரச் சிறுவர்களாகக் கட்டைக்களிசான் அணிந்து கொண்டு திரிந்த காலத்தில், உங்களுக்கும் அப்படித்தானேயிருந்திருக்கும்.



உங்கள் காலத்தில்வருடாந்த பரிசளிப்பு விழாவுக்குப் பெரிய பெரிய உத்தியோகத்தராயுள்ள பழைய மாணவரின் வரவினால் திளைத்திருப்பீர்கள். உத்தியோகம் குதிரைக் கொம்பாகிவரும் இந்நாட்களிற் சாதாரண அரசாங்க ஊழியர்களாயுள்ள பழைய மாணவரின் வரவு எங்களுக்கு உற்சாகத்தை யூட்டுகிறது.

உங்களுக்கு மாகாண அதிபராகத் திரு. வி. குமாரசாமி இருந்தாரென்றால், எங்களுக்கும் கொண்டாடுவதற்கு திரு. எம். ஸ்ரீ காந்தா இருக்கின்றார்.

ஆனால் 'ஓல்ட் பாக்' என்னும் பூங்காவில் அரசாங்க அதிகாரிகளாக எங்கள் பழைய மாணவர்களே இருந்தார்கள் என்று பெருமை பேச முடிந்தால், சரித்திரத்தில் இன்னும் கொஞ்சக்காலம் பின்னால் போய் சங்கிலித் தோப்பில் உரிமை கொண்டாட வழியில்லையே என்று அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது. மன்னர் பரராஜசேகரனையும் செகராஜசேகரனையும் பழைய மாணவர்கள் என்று கொண்டாடவகையில்லாதவாறு 1890-இல் நிறுவப்பட்டது எங்கள் கல்லூரி. ஆகையினால் தன் மதிப்புக்குரிய மக்கள் மூலம் 'பழைய பூங்கா'வுக்கும் 'சங்கிலித் தோப்பு'க்கும் ஒரு இணைப்பை ஏற்படுத்த முடியாது போய்விட்டது.

ஆனால் நீங்கள் பேசிக்கொள்ள முடியாத பெருமையொன்று எனக்கு உண்டு. அதுதான் சங்கிலித் தோப்புக்கு அருகே நாம் போய்விட்டோம் என்பது. பழைய தமிழ் மன்னரின் ஆலயமான சட்டநாத கோவில் நிர்வாகி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையை உங்கள் கல்லூரி முகாமைக்காரர் என்று பெருமை பேச இடமிருக்கவில்லையே!

இதில் கலந்து கொள்ளும் அளவுக்கு இளமை துள்ளும் பழைய மாணவரை இவ்விழாவுக்கு வரவேற்கிறோம். நம் முன்னோரை நேரில் பார்க்க அளிக்கும் வாய்ப்பு அது.

பரிசு பெற்றோரை ஊக்கப்படுத்தவும் அத்தகைய அதிர்ஷ்டம் அற்றோரைத் தேற்றவும் குழுமியுள்ள பெற்றோருக்கும் நல்வரவு கூறுகிறோம்.

இங்குவந்துள்ள பல்வேறு தரப்பட்ட நண்பர்களையும் நாம் வரவேற்கிறோம். வேறு ஸ்தாபனங்களுடன் ஈடுபாடுகொண்டவர்கள் கூட இங்குக்கூடியிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் இந்துவின் தாராளமும் பொறுமையும் காரணமாயிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்து சமய பரந்த மனோபாவத்துக்குப் பிரதம விருந்தினரான சேர். கந்தையா வைத்தியநாதனை விடச் சிறந்த உருவம் இருக்க முடியாது. மாணவனாய், அரசாங்க அதிகாரியாய், அமைச்சராய், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கருவூலமான நாவலர் மண்டப அதிபராய், திருக்கேதீச்சரத்தின் பண்டைப் புகழைப் புனருத்தாரணம் செய்பவராய் அவர் புகழும் அன்பும் ஈட்டியுள்ளார்.

## புதிய மருமக்கள்

**பெயர்களும் பதிவு இலக்கமும்**

84. எஸ். பெருமாள், 20, நாகொல்லை வீதி, மாத்தளை.
85. ந. லீலாவதி, C/o தி. நடராசா, தெற்கு, சுன்னாகம்.
86. ஆ. செ. பரமேஸ்வரன், உடையார் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
87. சி. கந்தசாமி, உச்சியோடை, மானிப்பாய்.
88. ந. குகநாதன், "ராசபவனம்" சண்டிலிப்பாய்.
89. வை. சிவலிங்கம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
90. த. வரதராசா, "சரஸ்வதிபவனம்" துன்னாலை தெற்கு, கரவெட்டி.
91. அ. கங்காதேவி, 88, கல்லடிமூட்டு, சாவகச்சேரி.
92. சி. சுசீலாதேவி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.
93. பொ. ஆனந்தலிங்கம், 51, சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.
94. பெ. கானம்பாடி, 94, மேட்டுத் தெரு, கொழும்பு—13.
95. எஸ். ஆர். யேசுதாஸன், 48, 4-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.
96. கி. மரியாம்பிள்ளை தவராஜா, தபாற்கந்தோர் (அருகாமை) கரவெட்டி.
97. வே. சிவபாலன், மண்டூர் 1-ம் குறிச்சி, மண்டூர் E. P.

## மயில்

—(வித்துவான் க. வேந்தனார்)—

1. மழை முகிலுங் கூடுது
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்துநின்று
ஆனந்த மாய் ஆடுது.

2. நீலத் தோகை பொன் சொரிய
நின்று கூத்துப் போடுது
நீண்ட காலைத் தூக்கி மயிலும்
நின்று கூத்துப் போடுது.

3. கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது.

4. வானம் பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது.

5. மானும் புலியின் பக்கம் நின்று
மயிலின் கூத்தைப் பார்க்குது
மலையைப் போல யானை நின்று
மயிலின் கூத்தைப் பார்க்குது.

6. நஞ்சைக் கக்கும் நாகபாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளித்திடாமல்
அருகில் நின்று பார்க்குது

7. கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்.

செல்வக் குழந்தைகளே,

அனைவருக்கும் வணக்கம். வெயிலின் கொடுமை இந்நாட்களில் தாங்க முடியாமல் இருக்கின்றதென மருமக்கள் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றனர். பரீட்சை நடைபெறுவதால் கதைகள், கட்டுரைகள் எழுதுவதற்கு நேரம் கிடைப்பதில்லையென வேறு சிலர் தெரிவித்திருக்கின்றனர். பரீட்சையில் எனது மருமக்கள் ஊக்கம் காட்டுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். விடுமுறை நாட்கள் நெருங்கி வருவதால் கட்டுரைகள், கதைகள், கடிதங்கள் எழுதி அனுப்பப் போதியளவு நேரம் கிடைக்கும் அல்லவா?

சின்ன மாமா

### சோம்பேறித்தனம்!

உபாத்தியாயர் தன்னுடைய வகுப்பு மாணவரை "சோம்பேறித்தனம் என்றால் என்ன?" என்னும் விஷயம் பற்றி வியாசம் எழுதி மறுநாள் வகுப்புக்குக் கொண்டு வரும்படி சொல்லியிருந்தார். அடுத்தநாள் ஒருமாணவன் தன் அப்பியாசப் புத்தகத்தைச் சமர்ப்பித்தான். "சோம்பேறித்தனம் என்றால் என்ன?" என்ற தலைப்புடன் நாலு பக்கங்கள் வெறுமனே கிடந்தன.

"இது என்ன?" என்று கேட்டார் உபாத்தியாயர்.

"அது தான் சோம்பேறித்தனம்!" என்று பதிலளித்தான் சிறுவன்!

### சிறுவனின் சித்திரங்கள்

சேனகா சேனநாயக்கா என்னும் ஏழு வயதுச்சிறுவனுடைய சித்திரங்கள் சிறந்தபாராட்டுக்களைப் பெற்றுள்ளன. சென்றவாரம் கொழும்பில் நடைபெற்ற சித்திரக் கண்காட்சியில் இச்சிறுவனுடைய சித்திரங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இலங்கையின் சித்திர விற்பன்னர்களில் முன்னணியில் நிற்பவர்களான டேவிட் பெயின்டரும், முதலியார் ஏ. வி ஜி. எஸ். அமரசேகராவும் சேனகாவின் திறமையை வாயாராப் புகழ்ந்து, அவன் எதிர்காலம் சிறந்து விளங்க வேண்டுமென்றும் ஆசி கூறினர்.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- **ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய சிறுவர் சிறுமியர் அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 11-4-59க்குப்பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளிபாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினால் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(4-4-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..............................................

விலாசம்..............................................

..............................................

..............................

கையொப்பம்

..............................

பெற்றோர் அல்லது ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

இங்கே வெட்டவும்

ஒலி உண்டாவது எப்படி ? ஒலி பரவுவது எப்படி என்ற விபரங்களை நாளாந்த சம்பவங்களிலிருந்தும் சாதாரண இசைக்கருவிகளிலிருந்தும் உதாரணங் காட்டி அனைவரும் விளங்கக்கூடிய முறையில் இக்கட்டுரை எழுதப் பட்டுள்ளது.

# காற்றினிலே வரும் கீதம்

— இ. அம்பிகைபாகன் —

காற்றிலே வருங்கீதம் எவ்வளவு இனிமையானது! குளிர்ந்து, கனிந்து வரும் சங்கீதம், பட்ட மரங்களையும் தளிர்பெறச் செய்யுமென்று கற்பனை செய்கின்றனே கவிஞன்! அக்கீதத்தைக் கேட்டுச் சுவைக்காத மனிதர் இல்லையென்றுங் கூறத் துணிகிறார்கள் கலைஞர்கள். கலைகளுள் எல்லாம் ஓர் உயர்ந்த உச்சஸ்தானத்தை வகிக்கிறது என்கிறார்கள், இச்சங்கீதக்கலை. மனிதனது மனநிலைக்கும் காலநிலைக்கும் அமைய, அவனது இதயத்தைக் கவர, சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு, நாம் சங்கீதக் கலையைப் பயன் படுத்த முடிகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்கீத ஒலி, காற்றினிலே சேர்ந்து நீந்திவருவது எப்படி? கானக்குயிலினங்கள் கனிந்த குரல் எழுப்ப, அக்குரலிசை காற்றினிலே சேர்ந்து பரவி காதைவந்தடைவது எங்ஙனம்?

அதுதான் போகட்டும், குழந்தையின் மழலைமொழியைக் கேட்டுச் சுவைக்காதவர்கள் தான், குழலிசையும் யாழிசையும் இனிமையாக இருக்கிறது என்பார்கள்! இந்தக் கருத்துள்ளவர்களும் உண்டென்பது தான் என் நம்பிக்கை. "குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" என்று வள்ளுவரே கருதுகிறார் அல்லவா?

சரி; குழந்தையின் மழலை மொழிதான் இனிமையானது என்றாலும் அந்தக் கனிரசம் காற்றிலே பரவிச் செல்வது எப்படி?மழலைமொழியாகட்டும், குழலின்ஒலியாகட்டும், குயிலின் குரலாகட்டும் — ஏன்? வெறுங் கூக்குரலாகவோ, கோழியின் கொக்கரிப்பாகவோ இருக்கட்டும்—இந்த ஒலி, எவ்வண்ணம் உண்டாகிறது? ஒலி முதலில் இருந்து, அது எங்ஙனம் பரவுகின்றது? அதைத்தான் நாம் கவனிப்போம்.

**ஒலிக்குக் காரணம்**

முதலிலே, ஒலிக்குக் காரணமென்ன? ஒலி எப்படி உண்டாகிறது? என்பதைச் சற்றுக் கவனிப்போம். இதற்குப் பரிசோதனை ஏதாவது செய்ய வேண்டுமென்றில்லை. நாளாந்த வாழ்க்கையிலே நாம் எடுக்கக் கூடிய உதாரணங்களிலிருந்து, சகல வாசகர்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய சாதாரண சம்பவங்களிலிருந்து, ஒலிக்குக் காரணமென்ன என்பதை முடிவு செய்வோம்.

வயலின், வீணை, புல்லாங்குழல், நாதஸ்வரம், மிருதங்கம், தவில் போன்ற எந்த ஒரு வாத்தியத்தையுங் கவனித்தால், ஒரு உண்மை விளங்கும். அவற்றிலே ஒரு அதிர்வை நாம் உண்டாக்கும் வேளையிலே மாத்திரம், அவற்றின் இன்னிசையை கேட்கமுடிகிறது. அவ்வாத்தியங்களை அப்படியே வைத்துவிட்டால், ஒருவித ஒலியும் உண்டாவதில்லை.

வயலின், வீணை, போன்ற கம்பி வாத்தியங்களில், அக்கம்பி இழைகளைத் துடிக்கச் செய்து, அதிர்வை உண்டாக்கினால் ஒரு இன்னிசை எழுகின்றது. துடிக்குங் கம்பியைத் தொட்டு, அதிர்வைநிறுத்தினால் உடனே ஒலியும் நின்றுவிடுகிறது.

புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட் போன்ற காற்று வாத்தியங்களிலே அவற்றின் குழாய்களின் உள்ளே நிற்கும் காற்று நிரைகளை ஊதி அதிர்வடையச் செய்யும்போதுதான் இனிமை சொட்டும் இசை ஒலியைக் கேட்க முடிகிறது. இவற்றில் உள்ள துவாரங்கள் அனைத்தையும் இறுக்கமாக மூடியவண்ணம் ஊதினால், காற்று நிரைகள் துடிப்படைய முடியாமல், ஒலியுமில்லாமல் இருக்கின்றன.

மிருதங்கம், தவில், கடம் போன்றவற்றில் அவற்றைத் தாக்கித் துடிப்பை உண்டாக்கும்போதுதான், ஒலியும் உண்டாகிறது. அவற்றின் பரப்பை அழுத்தியவாறு தாக்கினால், அதிர்வு கட்டுப்படுத்தப்பட்டு, ஒலியும் கட்டுப்படுத்தப்படுகிறது.

இசைக் கருவிகளைவிட்டு, சாதாரண உதாரணங்கள் சிலவற்றைக் கவனிப்போம். சைக்கிள் மணியை அடித்து அதிலே அதிர்வை உண்டாக்கும்போது தான், ஒலியும் உண்டாகிறது. மணிமூடியைக் கையால் அழுத்தியவாறு அடித்தால் ஒலியும் கட்டுப்படுத்தப்படுகிறது. சைக்கிள் மணி மட்டுமல்ல கோயில் மணியும் அப்படியேதான்!

இவற்றிலிருந்தும், ஒலி உண்டாகும் வேறு எந்த சம்பவத்தைக் கவனித்தும், ஒலிக்குக் காரணம் அதிர்வு என்பதை விளங்கிக் கொள்ளலாம். நாளாந்த வாழ்க்கையிலே எங்கெங்கே ஒரு ஒலி கேட்கிறதோ அங்கங்கே ஏதோ ஒன்றின் துடிப்பை — ஏதோ ஒன்றின் அதிர்வை—நாம் காணமுடியும். ஏதோ ஒன்று அதிர்வடைந்து தான், ஒலி உண்டாகிறது.

**ஒலி பரவும் விதம்**

அதிர்வினல் உண்டாகும் ஒலி அவ்விடத்திலிருந்து, மற்றைய இடங்களுக்கு அலையலையாகப் பரவுகிறது. அலைகளாகப் பரவும் முறை, அலையியக்கம் (Wave Motion) எனப்படும். அலையியக்கத்திலே, ஒரு அசைவு, அது நிகழும் ஊடகத்துடன் சேர்த்து அசையாமல், அவ்வூடகத்தின் ஊடாக அசைந்து செல்லும். இதையும் ஒரு சாதாரண உதாரணத்தினல், இலகுவாக விளக்கமுடியும்.

அமைதியாக இருக்கும் நீர் நிலையமொன்றிலே சிறு கல் ஒன்றை எறிந்தவுடன், கல் விழுந்த புள்ளியிலிருந்து அலைகள் உண்டாகி, நீரின் பரப்பு எங்குமே பரவுவதைப்பலர்அவதானித்திருக்கலாம். நீரின்பரப்பைக் கவனித்தால், சில நிமிஷ நேரத்தில் அப்பரப்பு மீண்டும் நிலையாய் வந்து அலைகள் மறைவதைக் காணலாம். நீரின் பரப்பிலே இலேசான சிறு பொருட்களை மிதக்கவிட்டபின் கல்லை நீரின்மேல் எறிந்தால் அலைகள் பரவும் வேளையில் அம்மிதக்கும் பொருள்களும் மேலுங்கீழுமாக அசைந்து நிற்கும். ஆனல், அப்பொருள்கள் மேலுங் கீழுமாக அசைந்து நிற்கின்ற வேளையில், இடம் பெயர்ந்து செல்வதில்லை. காரணம் அந்நீரில் தோன்றுவது ஒரு அசைவேயன்றி, இடப்பெயர்ச்சி அல்ல. அதாவது அவ்வசைவு ஊடகத்துடன் சேர்ந்து அசைவதில்லை. ஊடகத்தினூடாக அசைந்து செல்கிறது. இத்தகைய இயக்கந்தான் அலையியக்கம் எனப்படுகிறது.

இவ்வலையியக்கம் நிகழ்வதற்கு ஒரு ஊடகம் மிகவும் அவசியம். அவ்வூடகம் திடப்பொருளாக இருக்கலாம்; திரவமாக இருக்கலாம்; வாயுவாகவும் இருக்கலாம்; ஆனல், வேற்றிடத்தின் ஊடாக அலையியக்கம் நிகழ முடியாது. அதனூடாக ஒலி செல்லவும் முடியாது.

**ஒலியின் வேகமும் ஊடகமும்**

ஒருவன், ஒரு மரத்தை வெட்டும்போது சற்றுத் தூரத்தே நிற்பவர்கள் முதலில் அந்த வெட்டுச் செயலைக் காண்பார்கள். பின்புதான் வெட்டிய ஒலியைக் கேட்க முடியும். ஒருவன் துணியை அடித்துத் தோய்ப்பதை, தூரத்தே நின்று பார்த்தால் அடிக்கும் அசைவையும், அடித்த சத்தத்தையும் ஒரே நேரத்தில் கண்டும் கேட்டும் உணரமுடியாது. முதலிலே அடிக்கும் அசைவு தோன்றும். சிறிது பின்புதான் அடித்த ஒலி கேட்கும். இடியும் மின்னலும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன. ஆனல் நாம் முதலில் மின்னலைக் காண்கின்றோம். பின்புதான் இடியின் ஓசை கேட்கிறது.

இதற்கெல்லாம் காரணம் என்ன?

ஒலி உண்டாகிய இடத்திலிருந்து நம்மை வந்தடையச் சற்று நேரம் எடுப்பதுதான் காரணம். ஒளி மிகவும் வேகம் கூடியது. உண்மையில் ஒளி ஒரு செக்கனுக்கு 186000 மைல் தூரஞ் செல்லும். ஆனல் ஒலி வேகங் குறைந்தது. ஒரு செக்கனுக்கு ஒலி காற்றிலே ஏறக்குறைய 1100 அடி வரையில் தான் செல்லும். இதனல்தான் ஒரு நிகழ்ச்சியால் உண்டாகும் ஒளியை முதலிலும் ஒலியைச் சற்றுத் தாமதித்தும் நாம் உணர நேரிடுகிறது.

ஒலியினதும் வேகம், அது செல்லும் ஊடகத்துக்கேற்ப மாறுபடுகிறது. திடப்பொருள்களுள்ளே மிகவும் வேகமாகவும் அடுத்தபடியாகத் திரவங்களிலும்,மிகவும் குறைவான வேகத்துடன் வாயுக்களிலுஞ் செல்கிறபண்பு, ஒலிக்குண்டு. வாயுக்களிலும், அவற்றின் வெப்பநிலை அமுக்கம் ஆகியவற்றுக் கேற்ப ஒலியின் வேகம் மாறுபடுகிறது.

திடப்பொருள்களுள்ளே ஒலி வேகமாகச் செல்கிறதென்பதையும், காற்றிலே அதனிலும் குறைந்த வேகத்துடன் செல்கிறதென்பதையுங்கூட, நாளாந்த அநுபவங்களிலிருந்து விளங்கவைக்கலாம். மிகவும் தூரத்திலே புகைவண்டி வரும்போது அது வரும் ஒலி கேட்காமல் இருக்குஞ் சமயத்திலும், காதைத்தண்டவாளத்திலே வைத்துக் கேட்டால், ஒலி அப்படியே கேட்கும்! ஒரு மேசையின் ஒரு நுனியிலே காதை வைத்திருக்கையில் மறுநுனியிலே ஒருவர் மெதுவாகச் சுரண்டினலும், அந்தஒலி அப்படியே காதுக்குக் கேட்கும்! எனவே, ஒலியின் வேகம்வாயுக்களிலும் பார்க்கத் திடப் பொருள்களில் அதிகமானது என்பது விளங்குகிறது.

—தொடரும்

உங்கள் கட்டிடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

**இரும்புச் சாமான்களுக்கு**

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: 697

# மாணவர்களுக்குச் சரித்திர போதனை
## ஐ. நா. உதவித்திட்ட அதிகாரி யோசனை

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன உலகிலே தமது செல்வாக்கை இன்னும் இழந்துவிடவில்லை என்பது எனது நம்பிக்கை. சகோதரத்துவம் இந் நாட்டில் முதலிடம் பெறுமாயின் மக்களிடையே நல்லுறவும் நல்லெண்ணமும் ஏற்படுமெனத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் திரு. ஐ. பி. துரைரத்தினம் கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள ஐ. நா. தொழில் நுட்ப உதவிச் சபையின் பிரதிநிதி திரு. ஜோன்நீல்சன் கொரி இவ்விழாவில் பங்கு பற்றிப் பேசியதாவது: விஞ்ஞானத்துறையில் மனிதன் இன்று மகத்தான சாதனைகளை நிலை நாட்டி வருகின்றான். அதே வேளையில் உலகின் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் கல்வியறிவு அற்றவர்களாக இருக்கின்றனர். ஏறத்தாழ அரைவாசிப்பேர் பஞ்சத்தினலும் பசியினலும் வாடுகின்றனர். சமூக, பொருளாதார தொழில்நுட்பச் சிக்கல்கள் பின்தங்கிய நாடுகளை இன்று பெரிதும் பாதித்துவருகின்றன. இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாடுகளின் உதவி அவசியமாகின்றது. ஐ. நா. வின் தொழில் நுட்ப உதவித் திட்டம் அத்தகைய உதவிகளைச் செய்துவருகின்றது.

பள்ளிக்கூடப்பாடத்திட்டங்களைப்பற்றி ஐ. நா. உதவித் திட்ட அதிகாரி பேசும்போது, மாணவர்களுக்குச் சரித்திரம் சிறந்த முறையில் போதிக்கப் படவேண்டுமெனவும் யுத்தங்கள்பற்றிய நிகழ்ச்சிகளுக்கு முக்கியவத்துவம் கொடாது சிறந்த சமுதாயத்தை நிறுவுதற்காக, மனிதன் நடத்திய வாழ்க்கைப் போராட்டங்களை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமெனவும் அவர் கூறினர்.



அருள்வழி

# இஸ்லாமிய நோன்பு

— அமீர் —

இஸ்லாம் ஓர் இயற்கை மதம். ஏக தெய்வக் கொள்கையின் அடிப்படையில் எழுந்த இம் மதம் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டது. அத்துடன் உயர்ந்த கோட்பாடுகள் நிறைந்த மதமுமாகும்.

இஸ்லாமிய தத்துவங்களையும் கொள்கைகளையும் நன்கு ஆராய்வோர் இவ்வுண்மையை உணரலாம். இஸ்லாத்தின் ஐந்து முக்கிய கடமைகளில் ஒன்றான நோன்பும் சிறந்த தத்துவக் கோட்பாடுகளை உள்ளடக்கித் திகழ்கின்றது.

### தனிச்சிறப்பு

நோன்பிருத்தல் என்பது மனித குலத்துக்குப் புதிய தொன்றன்று. உலகிலுள்ள பல்வேறு மதங்களும், நாடுகளும் இதனைப் பலவாறாகப் பின்பற்றினாலும், இது மனித சமுதாயத்தின் தொன்மை யானதொரு பழக்கமாகும். ஆயினும் இஸ்லாமிய நோன்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. இஸ்லாமிய மதம் நோன்பென்னும் இவ்வுண்ணா விரதத்துக்குப் புதிய பொருளையும் கருத்தையுமளித்துச் சிறப்புப் பெறுகிறது.

மனிதனின் ஆத்ம பரிசுத்தத்துக்கும், தீமையிலிருந்து தன்னைத்தற்காத்துக் கொள்ளுவதற்கும், இந்நோன்பு துணை செய்வதால் இஸ்லாமியர்களுக்கு நோன்பு முக்கியமானதொரு கடமையாக்கப் பட்டிருக்கிறது.

### கடமை

"தீமையினின்று நீங்கள் உங்களைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டே, நோன்பு உங்களுக்குக் கடமையாக்கப்பட்டிருக்கிறது"— என்பது திருக்குர்ஆன் வாக்கியமாகும்.

நோன்பு ஹிஜ்ரி இரண்டாம் வருடமே இஸ்லாமியர்களுக்கு விதியாக்கப்பட்டது. அன்று முதல் இஸ்லாமியர்கள் இந் நோன்புக்குப் பெருமதிப்பளித்து வருகின்றனர். உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழும் இஸ்லாமியர்கள், இந் நோன்பினை ஏக காலத்தில் ஒரே நோக்கத்துடன் கருத்து வேற்றுமையின்றி ஒருமித்துப் பின் பற்றிவருவது சிறப்பானதொரு அம்சமாகும்.

### 30 நாட்கள்

ரம்ழான் மாதத்தில் அம்மாதம் முழுவதும் நோன்பிருக்க வேண்டும். அதிகாலையிலிருந்து மாலைவரை உண்ணாமலும், பருகாமலும் உடலின்பம்கொள்ளாமலும் உண்ணா விரதமிருப்பதென்பது ஓர் இலேசான கருமமன்று. எனவே, இக்கடமையை இஸ்லாமியர்கள் ஒரு நாளன்று, முப்பது நாட்களும், கைக்கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்பதனைப் பார்க்குமிடத்து, இதற்கு எத்துணை மனவுறுதிவேண்டும் என்பதை நாம் நன்கு உணரலாம். இவ்வகையிலே, நோன்பு மூலம் இஸ்லாம் கற்றுத்தரும் மனவுறுதிப்பாட்டுப் பயிற்சியும், புலன்களையடக்கிவாழும் பண்பும் மனிதகுலத்துக்கே ஒரு வரப்பிரசாதமாகும்.

### தியாகம்

நாளெல்லாம் உண்டு, களித்து, உடலிச்சை தீர்த்து உலக ஆசாபாசங்களில் மூழ்கி வாழும் மனிதன், ஒரு மாதத்திற்கு அதாவது ஒவ்வொரு வருடத்திலும் ஒரு மாதத்திற்கு, மனத்தையடக்கி,உலகஆசாபாசங்களைத் துறந்து, ஊணையொறுத்து, உடலினைத் தன்வசப்படுத்தி வாழ்வது மகத்தானதொரு தியாகமாகும்.

பசியையும் தாகத்தையும் போக்கிக் கொள்ளுவதற்குரிய உணவும் நீரும் ஒருவரிடம் இருக்கும்பொழுது, அவைகளின் ஆசையை ஒழிப்பதை விடப் பெரிய தியாகம் ஒன்றுமில்லை. மனித குல முன்னேற்றத்துக்கு மனிதனின் உழைப்பும் தியாகமும் அவசியமாகின்றன. எனவே, நோன்பு, மனிதனைத் தியாக உளம்படைத்தவனாக்குவதில், பெரும் பங்கு கொள்கிறது.

### வெற்றி பெறும் ஆற்றல்

ஒரு நேரம் தேநீர் அருந்துவதை நிறுத்திவிடு என்றால், முடியாது தவிக்கும் மனிதனை, புகைபிடித்தல், தாம்பூல மருந்தல், பொடிபோடுதல் போன்ற பழக்கங்களைக் கைக்கொண்டு அப்பழக்கங்களை விட்டொழிக்க முடியாமல் தவிக்கும் மனிதன், ஒரு நாளைக்கு இரண்டுவேளையுணவையும், பானங்களையும், தாம்பூலம், பொடி முதலிய அனைத்தையும் ஒரு மாதத்திற்குத் தொடர்ந்தாற் போல் தவிர்த்து நடக்கச் செய்யும் தனிப்பெருமை இஸ்லாத்தின் நோன்பினைச்சாரும்.

வாழ்வுப் போராட்டத்தில் தொடர்ந்து தாக்கும் துன்பங்களைச் சகித்து வாழத்தெரியாது தவிக்கும் மனிதன், நோன்பினால், அவற்றை எதிர்த்து வெற்றி பெறும் ஆற்றலைப் பெறுகிறான்.

### மற்றோர் உண்மை

இஸ்லாத்தில் ஆண்-பெண் என்றோ, செல்வன்—வறியவன் என்றோ வேறுபாடில்லாமல் நோன்புஎல்லோருக்கும்முக்கிய கடமையாக்கப்பட்டிருப்பதால் மற்றோர் உண்மை புலனாகிறது. பசியே என்னவென்று தெரியாது வாழ்க்கையின் உயர்ந்த நிலையில் வாழ்வோர்—செல்வந்தர், இந்நோன்பினால் பசியின் கொடுமையினை உணர்கின்றனர். ஏழையொருவனுக்கு அன்னமிட்டறியாப் பணக்காரன், ஏழையின் பசி எவ்வாறென்பதை முப்பது நாட்களும் உண்ணாவிரத மிருத்தலால் அறிய ஏதுவாகின்றது. இதனால், மனிதனின் உள்ளுணர்ச்சியை விழித்தெழச்செய்து, அவனை நல்லதொரு பாதைவழியே நடக்கச் செய்கிறது, இஸ்லாம்.

மனிதன் தனது வாழ்க்கையிலே கற்றுக்கொள்ள வேண்டிய மாபெரும் பாடத்துக்கு, நோன்பு ஒரு பயிற்சிக்கூடமாக விளங்குகிறது. மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் இரட்டைக் குழந்தைகளாகும். மனிதன் இன்பங்களை மிக அதிகமாக அனுபவிப்பதைவிடுத்தும், துன்பத்துக்கும், துயரத்துக்கும், சோதனைக்கும் ஆளாக வேண்டிவரும் என்பதனைமனத்திற்கொண்டு, தன்னை அவற்றுக்குத் தயாராக்கிக் கொள்ளும் அரிய பயிற்சியை நோன்பு கற்றுத்தருகிறது.

### உளத்தூய்மை

உடற் பயிற்சியால் மனித உடல் பலப்படுவதுபோல், நோன்பினால் உளத்தூய்மையும் அதனால் அவனது நல்லொழுக்கமும் பலப்படுகிறது. நோன்பின்போது தீய சிந்தனைகளைத் தவிர்த்து, மனத்தை ஒருமுகப்படுத்தி, தீய பேச்சுகள் பேசுவதை விட்டொழித்து, மனத்தைக்கிளறும் வாசனைத் திரவியங்களை நீக்கி, உடலின்பத்தை வெறுத்தொதுக்கி வாழ்வதால், மனிதன் ஒழுக்கக்குன்றாய்த் திகழ்கிறான்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால்—
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

### உடல்நலம்

உடல் நலத்துக்கும் நோன்பு சிறப்புற்றிலங்குகிறது. வருடத்திற் பதினொரு மாதங்களும் தவறாது உண்டு களித்துச் சுகித்த மனிதன், உண்ணாவிரத மூலம் தன் உடலுறுப்புகளுக்கு ஒரு மாதம் ஓய்வு கொடுப்பது உடல் நலச் சுகத்துக்குச் சிறந்ததாகும். இதனை மருத்துவ நிபுணர்களும் ஆமோதிக்கின்றனர்.

உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு இரண்டு வேளைகள் உண்ணாவிரதமிருப்பதால் எவ்வளவோ உணவுப் பொருள்கள் மிஞ்சுகின்றன. அப்படியே ஒரு மாதம் நோன்பிருப்பதால் எவ்வளவு உணவுப் பொருள்கள் மிஞ்சும் என்பது சொல்லாமலே விளங்கும். இதனால் உணவுத் தட்டுப்பாடு ஓரளவு நீங்குவதுடன் பஞ்சமும் மறைகிறது.

### இருகால நோன்பு

இஸ்லாமிய மாதமும் தேதியும் வானத்திலே பவனி வரும் வெண்ணிலாவைப் பொறுத்திருக்கிறது. இதனால், வருடத்தில் ஏறத்தாழ பதினொரு நாட்கள்வரை குறைவாக இருப்பதால், இஸ்லாமிய மாதங்கள் மாறி மாறி வருகின்றன. சில சமயம் நோன்பு (ரம்ழான்) மாதம் கோடைக்காலத்திலும், சிலசமயம் மாரிகாலத்திலும் வருகின்றது. ஒவ்வொரு முஸ்லிமும் வெவ்வேறுபட்ட இரண்டு காலங்களின் நோன்பையும் அனுபவிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் தனது சோதர முஸ்லிம்களின் துன்பங்களைப்பற்றி—அவர்கள் உலகின் எப்பாகத்தில் வசிப்பவர்களாயினுஞ் சரியே—நன்கு அறிந்துகொள்ளுகின்றான். கோடை நிலவும் பகுதியிலே வாழும் முஸ்லிம் தாகத்தின் கொடுமையினை உணருகிறான்; அதேவேளை குளிரான பாகத்தில் வாழும் முஸ்லிம் நீண்ட நேரம் பட்டினி யிருப்பதின் கொடுமையினை உணருகிறான். அரபுமாதத்தையொட்டி நோன்பு அமைக்கப்பட்டதின் தாற்பரியம் இதுவே.

அரபு மாதங்களில் ஒன்றான ரம்ழான் மாதத்தில் நோன்பு கடமை யாக்கப்பட்டிருப்பதன் காரணம், இச் சங்கைக்குரிய மாதத்திலேயே பரிசுத்த திருக்குர்ஆன் அருளப்பெற்றதாகும். எனவே, இச் சங்கைக்குரிய மாதத்தில் முஸ்லிம்கள் நோன்பு நோற்று நன்மை பல அடைவார்களாக!

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| தூ பு. கே. | வெ | செ. | |
| சூ | 9உ பகல் இடப வெள்ளி இவ்வார கிரக நிலை | | |
| | | | |
| சனி | வியா | | ரா |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(4-4-59 — 10-4-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம்பாதம்) சினேகிதர்களின் உதவியால் மனக்கவலை நீங்கும். குடும்பத்திற் பிளவுகள் தோன்றி மறையும். நடந்த கருமங்களால் சில கஷ்டங்கள் ஏற்பட்டு நீங்கும். புது முயற்சிகளில் ஊக்கம் அதிகரிக்கும்.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம் ரோகினி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) நன் மாற்றங்களுண்டாகும். அரசசேவைகளிற் செல்வாக்குகள் அதிகரிக்கும். பூமித் தொழிலால் இலாபம் உண்டாகும். கிழமையின் முடிவில் கஷ்டங்கள் ஏற்படக் கூடும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புனர் பூசம். 1, 2, 3-ம் பாதம்) இவ்வாரத்தில் காரியதாமதங்கள் சிறிது ஏற்படும். புது முயற்சிகளில் ஊக்கம் அதிகரிக்கும். சினேகிதர்களுடன் வெறுப்புண்டாகும். எக் கருமத்திலும் மனமானது ஒரேவழியிற் செல்லாதிருக்கும்.

**கடகம்**(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) எதிர்பார்க்காத முறையிற் சில கருமங்கள் நடைபெறும். குடும்பத்தில் மங்கள கருமங்கள் நிகழும். பிரயாணத்தாற் சில நஷ்டங்கள் ஏற்படக்கூடும். புதுக் கருமங்கள் செய்வதைத் தவிர்த்தல் நன்று.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) பணச் செலவுகளுக்கு இடமுண்டு. பொதுமக்களின் உதவிகள் கிடைக்கும். பெண்களின் உறவுகளால் சில கஷ்டங்கள் ஏற்படும். புத்திரர்களால் மனச் சந்தோஷமுண்டு. விருந்தாளிகளின் வருகை மகிழ்ச்சியை உண்டாக்கும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம் சித்திரை 1-ம், 2-ம் பாதம்) தேகாரோக்கியக் குறைவுண்டாகும். கொடுக்கல், வாங்கல் மூலம் பணவிருத்தியுண்டு. பெண்களின் உறவினால் சில கஷ்டங்கள் நீங்கும். பகைவர்களைப்பற்றிக் கவனமாக இருக்கவேண்டும்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்)வாக்குவாதங்களைத் தவிர்த்தல் நன்று. பொதுமக்களின் உதவிகள் கிடைக்கும். புது முயற்சிகளில் ஊக்கமுண்டாகும்.கடன்படவேண்டி நேரிடும். நண்பர்கள் உதவி குறையும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம் அனுஷம் கேட்டை) குடும்பக் கவலை சிறிது ஏற்பட்டாலும் வார இறுதியில் நீங்கப் பெறும். கொடுக்கல் வாங்கல் மூலம் பணவிருத்தி அதிகரிக்கும். கிழமையின் முடிவில் நன் மாற்றங்களை எதிர்பார்க்கலாம்

**தனுசு** (மூலம், பூராடம்,உத்திராடம் 1-ம் பாதம்) அன்னியர்களின் உதவிகளால் மனக் கவலை நீங்கும். நன்மையாகத் தோற்றுவன யாவும் பின்னர் கவலையை வருவிப்பதாகும். பிறரது வஞ்சகச் செயல்களால் கஷ்டத்தை அடையவரும் புதுக் கருமங்கள் தொடங்காதிருத்தல் மிக நன்று.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதங்கள். திருவோணம்,அவிட்டம் 1, 2-ம் பாதம்) பணச்செலவுகளதிகரிக்கும். நினைத்த கருமங்கள் மிக்க பிரயாசையின் பின்நிறைவேறும். பகைவரால் தீமை ஏற்பட இடமுண்டு. இனபந்துக்களுள் கொண்டாட்டங்கள் நிகழும்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம். சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம்) புதிய சிநேகித விருத்திகள். நற் கருமங்கள் செய்வதில் அதிக ஊக்கமுண்டாகும் வியாபாரத் தொழிலினால் அதிக வருவாய் கிடைக்கும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) உண்டாட்டுக் களியாட்டங்களில் செலவு ஏற்படும். பெண்களின் நேசமதிகரிக்கும். சினேகிதவழியால் நன்மைகளேற்படும். பெரியோர்களைப் பகைக்க வேண்டாம். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும்.

## வெற்றி நிச்சயம்

குரங்கு போல் மனம் கூத்தாடுகின்றதே. இதன் கூத்தை எப்படி அடக்குவது என்று தெரியவில்லையே. ஒன்று சொன்னாய். இதற்கு நல்ல மருந்து உன்னிடம் உண்டு. அதை மறந்து போனாய் சொல்லுகிறேன் கேள்.

சிவத்தியானம் எனும் மருந்தை தினந்தோறும் சாப்பிட்டுவா. மனக் குரங்கின் பிணி மாறும்.

அதைச் சாப்பிடும்போது அனுபானத்தைக் கூட்டிச் சாப்பிடு. அதுவும் உன்னிடம் உண்டு.

அது என்னவென்றால் நாவடக்கம். இச்சை அடக்கமென்னும் சரக்கோடு சேர்த்துச் சாப்பிடு.

இதுவும் போதாது. பத்திய பாகத்திலே தான் முற்றும் தங்கியிருக்கிறது. அதுவும் உன்னிடம் உண்டு.

அது என்னவென்றால், மிதமான ஊண்; மிதமான நித்திரை; மிதமான தேக அப்பியாசம் என்பவையே. வெற்றி நிச்சயம்.

ஆன்மலாபத்தின் பொருட்டு இதைச் செய். மனத்தை ஒருவன் அடக்கி வெற்றிகொள்ள முழுமனத்தோடு விரும்புவானானால், சிவ தியானத்தை தினந்தோறும் செய்துவரக்கடவன். படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை அவன் கண்கூடாகக் காணுவான்.

சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத்துநிற்கும். — நற்சிந்தனை

சினிமா உலகம்

# வெள்ளித் திரையில் பூதானம்

ஆச்சாரிய வினேபாஜியினுடைய பூமிதான இயக்கத்தின் கருத்தையும், தத்துவத்தையும் விளக்குவதற்குச் சினிமாத் திரையை உபயோகித்துள்ளனர். "துறவியும் விவசாயியும்" என்னும் சிறு திரைப் படத்தை ஆர்வம் நிறைந்த செய்திப்பட டைரக்டர் என். சுக்தேவ் என்பவர் பூர்த்தி செய்துள்ளார். அவரும் அவருடன் சேர்ந்த படப்பிடிப்பாளர்களும் ஆச்சாரிய வினேபாவின் நடமாட்டங்களை நெருங்கிய தூரத்திலிருந்து படம் பிடித்துள்ளனர். ஆச்சாரிய வினேபாஜியின் ஆஜ்மேர் விஜயமும், அங்கு நடந்த வருடாந்த சர்வோதய சம்மேளனமும் இத் திரைப்படத்தில் இடம்பெறுகின்றன.

## இந்தியத் திரைப்படங்களுக்கு உலகின் கணிப்பு

சக்கரவர்த்தி அக்பரின் காலத்துக் கதையை அடிப்படையாகக்கொண்ட இந்தியத் திரைப்படம் ஒன்று, வருகிற ஒக்டோபர் மாதம் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய ஐரோப்பியநாடுகளில் திரையிடப்படவிருக்கிறது. அப் படத்தின் பெயர் "மொகல்-ஏ-அஸாம்" என்பது. இந்தி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்படும் இப் படத்தில் திலிப்குமார், பிரிதிவிராஜ், மதுபாலா முதலிய சிறந்த வட இந்திய நட்சத்திரங்கள் நடிக்கிருர்கள். இப் படத்தின்மூலம் இந்தியா தனக்கு ஏற்கனவே உலக 'மார்க்கட்'டில் ஏற்பட்டுள்ள மதிப்பைப் பலப்படுத்துமென நம்பப்படுகிறது. இந்தியாவின் "பாதெர் பஞ்சாலி", "அபராஜிதோ" ஆகிய படங்கள் சர்வதேச பரிசளிப்பு விழாக்களில் பரிசுகள் பெற்றுள்ளன. "இந்தியத்தாய்" என்ற படத்திற்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்புக்கிடைத்தது.

## அனதைகள் உதவி நிதி

அனதைகளின் அவல வாழ்க்கையைப் போக்க ஆதரவுதர முன் வந்திருக்கின்ருர் எம். ஜி. ராமச்சந்திரன் "அனதைகள் உதவி நிதி" என்ற நிதியை ஏற்படுத்தி அதில் அவர் வெற்றியும் கண்டுள்ளார்.

எம் ஜி. ஆர், வீரப்பா, நம்பியார் மூவரும் எல்லா இடங்களுக்கும் சென்று ஏறத்தாழ பத்தாயிரம் ரூபாயளவில் இந்த நற்கருமத்திற்காகச் சேர்த்திருக்கின்ருர்கள். அனதைகளுக்கு வாழ்வளிக்க முற்பட்ட கலைஞரை மக்களெல்லோரும் வாழ்த்துகின்ருர்கள். அவர் வகுத்த பாதையில் மற்றக்கலைஞர்களும் செல்ல முன்வர வேண்டுமென்பதே அவர் நோக்கம்.

## கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

நரசு ஸ்ருடியோவில் தயாராகிவரும் இப்படத்தை டி. எஸ். இராஜகோபால் டைரக்ட் செய்கிருர். இதில் எஸ். எஸ். இராஜேந்திரன், எஸ்.வி. சுப்பையா, பி. சரோஜாதேவி, கிரிஜா ஆகியோர்கள் நடிக்கின்றனர். "புதுடில்லி" என்ற பெயரில் ஏற்கனவே ஹிந்தியில்வந்த கதையைத் தமிழில் தயாரித்திருக்கிருர்கள். நல்ல கருத்தைப் போதிக்கும் சுமாரான படம்இது. சில இடங்களில் கதைப்போக்கு ஆமைவேகத்தில் போய்க் கொண்டிருக்கிறது.

## மாமியார் மெச்சிய மருமகள்

ஏ.வி.எம். ஸ்ருடியோவில்தயாரிக்கிருர்கள். இப்படத்தைப் பிரபலதென்னிந்திய டைரக்டர்களாகிய கிருஷ்ணன், பஞ்சு டைரக்ட் செய்கிருர்கள். எம். என். இராஜத்தின் கதாநாயகி பாத்திரம் நன்கு சோபித்திருப்பது இப்படத்தின்முக்கியமான அம்சமெனச் சொல்லப்படுகின்றது. நம்பமுடியாத சில சம்பவங்கள், பொருத்தமில்லாத சில உறவு முறை மற்றும் அனுவசியமான பாடல்கள் இப்படத்தின் சிறப்புக்கு ஏற்றனவாயில்லை.

# படமாளிகையிற் சீர்கேடு

படமாளிகைகளிற் புகை பிடிக்கும் பழக்கத்தை ஒழிக்க முயற்சிகள் செய்யும் வண்ணம் இங்கிலாந்தில் ஒரு சங்கம் கூடியிருக்கிறது. இச் சங்கம் தன் நோக்கம் நிறைவேறுவதற்காகப் பிரசாரங்களும் பொதுக் கூட்டங்களும் நடாத்தி வருகின்றதாம். இந்தச் செய்தி எங்கள் படமாளிகைகளில் நிலவும் சுகாதாரமற்ற நிலையைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

இங்குள்ள படமாளிகைகளில் காணப்படும் குறைபாடுகள் ஒன்று இரண்டல்ல;பல. முதலாவதாக,மனிதனை மனிதனுகநடத்தும் மனப்பான்மை எங்கள் 'தியேட்டர்'களில் இல்லை. மனிதனை மிருகமாகவே நடத்துகிருர்கள். கலரியில் நூற்றுக் கணக்கான மக்களை நெருக்கமாக உட்காரவைத்து வதைக்கிருர்கள். கொழும்பு போன்ற நகரங்களில் கலரியிலுள்ள மக்களுக்கு ஆசனங்கள் அளிக்கப் பட்டுள்ளன. இங்கே மூட்டைப் பூச்சி நிறைந்த உடைந்த வாங்குகளே அதிகம்.

இரண்டாவதாக: புகைபிடித்தல், வெற்றிலை சுவைத்தல் முதலிய பழக்கங்களும் தியேட்டர்களில் அனுமதிக்கப்பட்டுவருவது வருத்தத்திற்குரியதாகும். படம்பார்க்க வருபவர்கள் தங்கள் பொழுதைச் சந்தோஷமாகக் கழிக்கவே படமாளிகைகளை நாடிச் செல்கின்றனர். ஆனல், அங்குச் சென்ருலோ, அவர்களுக்கு 'ஏன் இங்கு வந்தோம்' என்ற எண்ணமே உதிக்கின்றது. சிகரெட் புகைமயம், வெற்றிலை சுவைத்தவர்களின் எச்சில், இப்படிப்பட்ட அசுத்தம் நிறைந்த சூழ்நிலையில் எப்படிப் படம் பார்க்க முடியும்!

மூன்ருவதாக: இங்குள்ள படமாளிகைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள், படம் பார்க்க வருவோரை உபசரிப்பதற்குப் பதிலாக உபத்திரவத்துக்குள்ளாக்குகின்றனர். மரியாதையும், அடக்கமும் வேண்டிய இடத்தில் அவமரியாதையையும், முரட்டுத்தனத்தையுமே காண்கின்ருேம். இடைவேளைக்கு முன்னரே இவர்கள் தங்கள் சோடா, சொக்கலெட் வியாபாரத்தை ஆரம்பித்து விடுகிருர்கள். அந்த வியாபாரம் இடைவேளை முடிந்தபின்னருங்கூடத் தொடர்ந்து நடைபெறுகின்றது. சோடாப் போத்தல்களை ஒன்ருேடொன்று உராஞ்சிச் சப்தம் உண்டாக்குவதும், படம் பார்ப்பவர்களைத் திரையிலிருந்து மறைப்பதும் எங்கள் படமாளிகைகளிற் சர்வசாதாரணம்.

நாலாவதாக: அளவுக்கு மிஞ்சிய ஆசனங்களைத் திணித்து, எல்லோருக்குமே கஷ்டத்தை உண்டாக்கி விடுகிருர்கள். ஒரு தியேட்டரில் எவ்வளவு ஆசனங்கள் வைத்தல் வேண்டுமென்று ஒரு கணக்கு இருக்கின்றது. ஆனல், அந்த அளவையும் மீறிப் பல ஆசனங்களை இடையிற் புகுத்தி நெருக்கத்தையும், புழுக்கத்தையும் உண்டாக்கிவிடுகிருர்கள்.

இக் குறைகள் தியேட்டர்களில் சாதாரணமாக எதிர்பார்க்கப்பட வேண்டியவையென்றும், அவற்றை அதிகம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடாதென்றும் 'தியேட்டர்' முதலாளிகள் சாக்குப்போக்குச் சொல்கிருர்கள். 'தியேட்டர்' முதலாளிகள், யாழ்ப்பாண மாநகரசபை அதிகாரிகள் ஆகியோர் இக் குறைபாடுகளைப் படமாளிகைகளிலிருந்து நீக்க உடனடியாக முயற்சி செய்யவேண்டும்.எமது சமூகத்திற் காணப்படும் இவ்விதமான குறைபாடுகளை நீக்குவதன்மூலமே எங்கள் இனத்தின் முன்னேற்றத்துக்காக நாம் உழைக்க முடியும். இத்துறையில் தியேட்டர் முதலாளிகளுடன் பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். —மின்மினி

## 'அறுவர்' படங்கள்

தமிழ் சினிமாத்துறையில் ஈடுபட்டுள்ள ஆறு நிபுணர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுத்தயாரிப்பில் படங்களை ஆக்கி வருகிருர்கள். அவர்கள், டைரக்டர் கே. சோமு, கதையாசிரியர் ஏ. பி. நாகராசன், படப்பிடிப்பாளர் வி. கே. கோபண்ணு, சங்கீத டைரக்டர் கே. வி. மகாதேவன், கவிஞர் ஏ. மருதகாசி, மேற்பார்வையாளர் ரி. விஜயரங்கம் ஆகியவர்களே. இதுவரை அவர்கள் பன்னிரண்டு படங்கள் தயாரித்துள்ளனர். அவர்கள் இன்னும் பதின்மூன்று படங்கள் வெகு விரைவில் பூர்த்தி செய்வார்கள். அத்துடன் தங்களது கூட்டுப் படங்களின் தொகை இருபத்தைந்தானதும், அவர்கள் அதை முன்னிட்டு "வெள்ளி விழா" ஒன்றினை விமரிசையாக நடாத்தத் திட்டமிட்டிருக்கிருர்கள். இவ்வறுவரும் ஒருமுகமாகத் தங்கள் சேவையைத் தமிழ்ச் சினிமாவுக்கு அர்ப்பணித்துவருவது ரசிகர்களுக்கு மகிழ்வூட்டும் விஷயமாகும் என்பதில் சந்தேகமேயில்லை.

## வண்ணக்கிளி

மொர்டேன் பிக்ஸர்ஸாரின் அடுத்த திரைப் படத்தின் பெயர் **'வண்ணக்கிளி'**.'வண்ணக்கிளி' ஒரு புதுவிதமான கதையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒரு முரடன்—அவன் பலாத்காரமாக மணம் புரிந்த அனதைப் பெண் ஒருத்தி-முரட்டுக் கணவனிடம் அவளுக்குள்ள பதிபக்தி—அவனை அவள் எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில் சீர்திருத்தல்—இவைதான் கதையின் முக்கிய அம்சங்கள். பி. எஸ். சரோஜா, மனேகர், பிரேம் நஸீர், மைனுவதி, டி. ஆர். ராமச்சந்திரன், டி. பி. முத்துலட்சுமி முதலியோர் இப் படத்தில் நடிக்கிருர்கள்.

விளையாட்டுப் பகுதி

# வெற்றிக் கிண்ணத்துக்கான கைப்பந்தாட்டப் போட்டி

கிழக்கிலங்கைக் கைப்பந்தாட்டக் கழகம், "மகேந்திரா வெற்றிக் கிண்ணத்துக்கான கைப்பந்தாட்டப் போட்டி" யொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. "மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள, கைப்பந்தாட்டக் கழகங்கள் பல இப் போட்டியிற் பங்குபற்றச் சம்மதித்துள்ளன." திறமையாக விளையாடும் வீரர்களுக்கும் தனிப்பட்ட வெள்ளிக் கிண்ணங்கள் பரிசளிக்கப்படும்.

பெரும்பாலும் போட்டிகள் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் ஆரம்பமாகலாம்.

**உதைபந்தாட்டம்:**

ஆசிய இளைஞர் உதைபந்தாட்டப் போட்டியொன்று மலாயாவில் நடைபெறவிருக்கிறது. ஏப்ரல் 18—23ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் இப் போட்டியில் பத்து ஆசிய நாடுகள் கலந்துகொள்ளும். அவை யாவன: இலங்கை, தென் கொரியா, யப்பான், ஹொங்-கொங், பர்மா, சிங்கப்பூர், பிலிப்பைன் தீவுகள், தேசீய சீன, தாய்லாந்து, மலாயா. இந்த உதைபந்தாட்டப் போட்டிக்கு, மலாயாப் பிரதமர் துங்கு அப்துல் ராஹ்மன் 12,000 மலாயன் டொலர்கள் பெறுமதியான ஒரு வெற்றிக்கிண்ணம் அளித்திருக்கிருர்.

**கிறிக்கெற்:**

மேற்கிந்திய கிறிக்கெற் கோஷ்டி பாகிஸ்தான் கிறிக்கெற் கோஷ்டியை ஒரு ஆட்டத்தினுலும், 156 ஓட்டங்களினுலும் மூன்ருவது பந்தயப் போட்டியில் தோற்கடித்தது. விபரங்கள் பின்வருமாறு: (மேற்கிந்தியர்: முதல் ஆட்டம்: 469—பாகிஸ்தான்: முதல் ஆட்டம்; 209 — இரண்டாம் ஆட்டம்: 104)

**டென்னிஸ்:**

மொன்றே கார்லோ சர்வதேச 'டென்னிஸ்' பந்தயப் போட்டியில் ருேபேர்ட் ஹைலிற் என்னும் பிரெஞ்சிய 'டேவிஸ் கப்' ஆட்டக்காரர், அமெரிக்க 'விம்பில்டன்' ஆட்டக்காரரான பட்ஜ் பற்றி என்பவரைத் தோற்கடித்தார். இதன் மூலம் இச்சர்வ தேசப் போட்டியில் அவர் முதல் ஸ்தானம் பெற்ருர். அதே போட்டியில் பெண்மணிகளுக்கிடையில் நடந்த விளையாட்டில் திருமதி சுசி கோர் மோக்ஸி என்னும் ஹங்கேரியப் பெண் முதல் ஸ்தானத்தை, இத் தடவையுடன் நாலாவது முறையாகப் பெற்ருர்.

# யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கம்

மேற்படி சங்கம் நடாத்தும் 'மன்மதராயன்' வெற்றிக் கேடய 'நொக்-அவுட்' உதைபந்தாட்டப் போட்டி ஸ்தம்பித்து நிற்கிறது.

குருநகர் கோஷ்டியும் கிருஸ் கொப்பர்ஸ் கோஷ்டியும் ஆடிய ஆட்டம் 1-1 கோல்களுடன் முடிந்தது. வெற்றி தமதே என்ற உறுதியுடன் விளையாடிய கிருஸ் கொப்பர்ஸ் கோஷ்டியை திகைக்கச் செய்யும் வகையில் குருநகர் பற்றிக் என்பவர் பஸில் தட்டிக்கொடுத்த ஒரு பந்தை கோலுக்குள் செலுத்தினுர். அதன் பின், கிருஸ் கொப்பர்ஸ் ஆட்டக்காரர் குருநகர் கோலை முற்றுகையிட்டனர். குருநகர் கோல் காப்பவர் பெனடிக்ட் அற்புதமாக விளையாடினுர். ஆட்டம் முடிவதற்கு 10 நிமிஷங்களிருக்கும் போது ராமநாதன் தட்டிக் கொடுத்த ஒரு பந்தை பரம்சோதி கோலுக்குள் அடித்து கிருஸ் கொப்பர்ஸைக் காப்பாற்றினுர்.

அதிக நேரம் கொடுக்கப் பட்டும் இருகோஷ்டிகளும் ஒரு கோலும் பெறவில்லை. திரு. இ. ஸ்ரீ நிவாசன் மத்தியஸ்தம் வகித்தார்.

ஆகவே சென்ற வாரம் மறு ஆட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இவ்வாட்டம் தொடங்கிச்சில நிமிஷங்களுக்கிடையிலேயே குருநகர் ஜோசப் மனுவேலும் கிருஸ் கொப்பர்ஸ் பரமலிங்கமும் வாக்குவாதப்பட்டதற்காக மத்தியஸ்தர் ஸ்ரீ நிவாசனுல் எச்சரிக்கை செய்யப்பட்டனர். 25-வது நிமிஷத்தில் அவர்கள் மீண்டும் சச்சரவுப் பட்டனர். அவர்களிருவரையும் மத்தியஸ்தர் வெளியேற்றமுன் கை கலப்பும் நிகழ்ந்தது. கிருஸ் கொப்பர்ஸ் நவரத்தினமும் இக் கை கலப்பிற் கலந்து கொண்டார். அதன் பின் ரசிகர்களும் உள்ளே நுழைந்தனர். பரமலிங்கம் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஆட்டத்தைத் தொடர்ந்துவிளையாட முடியாமல் போய்விட்டது.

திரு ஸ்ரீநிவாசன் சமர்ப்பித்த அறிக்கை உதைபந்தாட்டக்குழுவினுல் திரு பி. ஜி. எஸ். டேவிட் அவர்கள் தலைமையில் ஆலோசிக்கப்பட்டது. இவ்விரு கோஷ்டிகளுக்குமிடையே மறு ஆட்டம் இவ்வாரத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆனல் குருநகர் கோஷ்டியிலிருந்து ஜோசப் மனுவேலும் கிருஸ் கொப்பர்ஸ் கோஷ்டியிலிருந்து பரமலிங்கம் நவரத்தினம் ஆகிய இருவரும் ஒரு வருட காலத்துக்கு விளையாட முடியாதவாறு நிறுத்தப்பட்டு இலங்கை உதைபந்தாட்டக் கழகத்துக்கு சிபாரிசு போயிருக்கிறது. இவ்வளவு கண்டிப்பான தண்டனையை இன்றைய சூழலில் ரசிகர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நிச்சயமாய்க் கூறலாம். எல்லாத் துறைகளிலும் போலவே கட்டுப்பாடுகளையும் விதிகளையும் மீறுகிற மனேபாவம் வளர்ந்து வருகிற காலத்தில் இது எல்லோருக்கும் ஒரு நல்ல படிப்பினையாகும். இம் மூன்று ஆட்டக்காரரும் ஓராண்டு காலத்துக்கு இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்துடன் இணைந்த எந்த ஆட்டத்திலும் பங்குபற்ற முடியாது. அதே வேளையில் சும்மா விளையாடி பயிற்சி பெற்றுக் கொண்டிராது விட்டால் இவ்வளவோடு இவர்கள் உதைபந்தாட்டவாழ்வு முடிவடைந்தது போலத்தான். ஆகையால் இனிமேல் மைதானத்தில் ஆட்டக்காரரால் கலகங்கள் விளைவது குறையுமென எதிர்பார்க்கலாம்.

குருநகர்—கிருஸ் கொப்பர்ஸ் 3-வது ஆட்டம் முடிந்ததும் தொடர்ந்து போட்டிகள் நடைபெறும்.

## யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதாரம்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் என இத் தொழிற்சாலை இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்யும் ஒரு பிரமுகர் கூறினர். இது தனிப்பட்ட ஒருவரின் முயற்சியல்லாதபடியால் பணம் படைத்த மக்கள் பலர் பல பங்குகளை வாங்கி ஒத்துழைத்தால் கூடியவிரைவில் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்கும். ஆகக் குறைந்த பங்கில் சேர விரும்புவோர், ரூபாய் 250/- செலுத்தினல் போதுமென அறியக்கிடக்கிறது. பருத்தி பயிரிடப் படுமுன், துணி உற்பத்தி செய்வதற்குத் தேவையான நூல் வகைகளெல்லாம் இறக்குமதி செய்யப்படும். இத்தொழிற்சாலை முதலில் வெளிநாட்டு நிபுணர் உதவியுடன் திறக்கப்படும். செக்கோசிலாவாக்கிய நிபுணர்கள் இதில் முக்கிய பங்கெடுத்துக் கொள்வார்களென அறியக்கிடக்கிறது. யாழ்ப்பாண இளைஞர்களுக்குத் துணி உற்பத்தி சம்பந்தமான நுண்கலைகளைக் கற்றுக்கொடுத்ததும் இவர்கள் தம்நாடு திரும்புவார்கள். இப்படியான முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்தால்தான் யாழ்ப்பாண மக்கள் இனி முன்னேற முடியும். இதைப் பணம்படைத்த எல்லா யாழ்ப்பாணத்தவரும் உணர்ந்தால் இதைப்போன்ற வேறு பல தொழிற்சாலைகளும் திறக்க முடியும்.

### சுவைமிக்க பழங்கள்

யாழ்ப்பாணம் வரண்ட பிரதேசமாகவிருப்பினும் சுவைமிக்க பழங்களுக்குக் குறைவில்லை. மாம்பழம், பலாப்பழம், தோடம்பழம் முதலிய பழரசங்களிலிருந்து ஜாம், ஜெல்லிவகைகள் செய்ய முடியும். இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் திறப்பதிலும் மக்கள் கவனம் செலுத்தலாம். ' தக்காளிபபழ ஜாம் ', 'பனம்பழ ஜாம்' முதலியன தோலைகட்டியில் ஆராய்ச்சி நோக்கோடு செய்யப்படுகின்றன. ஆனல் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் தக்காளிப் பழ ஜாமும், பனம்பழ ஜாமும் சிறந்த முறையில் தயாரிக்கலாம். இவற்றில் அக்கறை செலுத்தினல் மக்கள் பலருக்கு வேலையும் கிடைக்கும் என்பது உண்மையே.

பளைப்பகுதியில் மாசார் என்னுமிடத்திலுள்ள மணல், கண்ணடி செய்வதற்கு மிகவும் சிறந்ததெனச் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதையும் நாம் பரிசீலனை செய்து ஒரு தொழிற்சாலை திறந்தால் எமது பொருளாதாரம் மேலும் ஒருபடி உயரும்.

விஸ்கோத்துத் தொழிற்சாலை, பலவகைஇனிப்பு வகைகள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் முதலியனவும் திறக்கப்படலாம். இதனல் பிற இடங்களிலிருந்து நாம் விஸ்கோத்து வகைகளை வருவிப்பதைக் குறைக்கலாம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும் எமது பொருளாதாரத்தை விருத்தி செய்யவும், யாழ்ப்பாணத்திலில்லாத பல மூலப்பொருள்களை வருவித்து அவற்றைக்கொண்டு நாம் பல தொழிற்சாலைகளைத் திறக்கலாம். ஏற்கெனவே இப்படி ஒரு தொழிற்சாலை திறக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் அலுமினியப் பாத்திரங்கள்செய்யும் ஆலையையே இங்கு குறிப்பிடுகின்றேன். சைக்கிள், றேடியோமுதலியவற்றின்மூலப் பொருள்களை வரவழைத்து அவற்றை நாம் இங்கே பொருள்களாக்கி விற்கலாம்.

குடிசைக்கைத்தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்படல்வேண்டும். வெங்காயக் கூடுசெய்தல், பாய் பின்னல், பெட்டி இழைத்தல், மட்பாத்திரங்கள் வனைதல், சப்பாத்து உற்பத்தி செய்தல், துடைப்பம் முதலியன செய்தல் போன்ற குடிசைக் கைத்தொழில்கள் உபயோகமானவை.

மேற்குறிப்பிட்ட வழிகளில் யாழ்ப்பாண மக்கள் ஊக்கம்காட்டினல் (இன்றைய சூழ்நிலையில் இது இன்றியமையாததாய் விட்டது) எமதுபொருளாதாரத்தை இன்றைய நிலையிலும் பார்க்க நாம் பெரிதும் உயர்த்த முடியும். எமக்குத் தேவையான பொருள்களை நாம் உற்பத்தி செய்யும் நிலையையும் அடைந்துவிடலாம். பொருளாதாரம் விருத்தியடைந்துவிட்டால், அரசியல் அலைகள் இன்றுபோல் எம்மீது மோதி வதைக்க மாட்டா. எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற உயர்ந்த நிலையையே நாம் அடைந்துவிடுவோம்.

## இருபதாம் நூற்றாண்டு இளங்கோ விபுலாநந்த அடிகளார் நினைவு விழா

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ் நூலாக விபுலாநந்த அடிகளார் இயற்றிய 'யாழ் நூல்' விளங்குகின்றதெனத் திருக்கோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விபுலாநந்தர் விழாவின்போது திரு. பெ. பொ. சிவசேகரம் குறிப்பிட்டார்.

இவ்விழா சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவினை ஆரம்பித்து வைத்துப் பேசிய பாராளுமன்றப் பிரதிநிதி திரு. என். ஆர். இராஜவரோதயம் கூறியதாவது: விபுலானந்த அடிகளார் ஈழநாட்டிலிருந்து அண்ணமலைப் பல்கலைக் கழகத்திற்கு, தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றச் சென்றிருந்தார். அவ்வமயம் அங்கு ஒரு வைபவத்தின்போது அவரது இல்லத்தினைச் சூழ்ந்து பிரித்தானியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அவர் தமது இல்லத்திற் காங்கிரஸ் கொடியைப் பறக்கவிட்டார். அடிகளாரைப் போன்று, ஈழத் தமிழினம் அச்சமின்றி வாழ்ந்தால் விடுதலையை விரைவிற் பெற முடியும், எனக் குறிப்பிட்டார்.

பண்டிதர். ஐ. சரவணமுத்து பேசும்போது, அன்று இளங்கோ அடிகள் முத்தமிழையும் வளர்ப்பதில் முனைந்திருந்தார், அதுபோன்று இன்றைய இருபதாம் நூற்றாண்டு இளங்கோ அடிகளாக, விபுலானந்த அடிகளார் திகழ்கிருர், பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்பதற் கிணங்க ஆங்கில மொழியிலுள்ள விளக்கங்களை எல்லாம் சேர்த்து மதங்க சூளாமணி எனும் நாடக நூலை அடிகளார் தமிழ் உலகுக்குத் தந்தார்கள்.

செல்வி சரஸ்வதி சுவாமிநாதன் அடிகளாரின் வாழ்க்கையைப்பற்றி விரிவாகக் குறிப்பிட்டார். கழகச் செயலாளர் திரு. சோமசுந்தரம் அனைவருக்கும் நன்றி கூறினர்.

### அரசாங்கத்தின் மிரட்டலுக்கு ஆசிரியர்கள் அஞ்சவேண்டியதில்லை

ஆசிரியர்களாய்க் கடமையாற்றுபவர்களின் நல் வாழ்வைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை முகாமையாளரும், கல்வி அமைச்சரும் இப்போது கையாண்டு வருகின்றனர். நம்மை இத்துரதிருஷ்டத்தினின்றும் காப்பாற்றக்கூடியது, தொழிற் சங்க முறையிற் பணி செய்யும் எங்கள் ஆசிரிய சமாஜம்தான். இந்த உண்மையை நாம் சில வாரகாலத்துக்குமுன் திட்டவட்டமாய் அறிந்து கொண்டோம்.

இவ்வாறு வலிகாமம் கிழக்குத் தமிழாசிரிய சங்கச் செயற்குழுவின் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய சங்கத் தலைவர் திரு. கே. இ. குமாரசாமி குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: நாட்டின் கல்வி முன்னேற்றம் எங்ஙனம் துரிதப்படும் என்று அறிய அதிகாரிகள் ஆவல் கொள்ளுகின்றனர். ஆசிரியர்கள் மனச் சமாதானத்துடன் தொண்டாற்ற வசதிகள் அளிக்கப்பட்டால், இத்தகைய பிரச்சினைக்கு இடமிராது.

சில தினங்களுக்குமுன் ஒரு பள்ளிக்கூடப் பரிசளிப்பு விழாவில் இலங்கைப் பல்கலைக்கழக உபவேந்தர் சேர். என். அற்றிக்கலை பேசியபோது அரசாங்கத்தின் மிரட்டலுக்கு ஆசிரியர்கள் அஞ்சவேண்டியதில்லையெனக்கூறியிருந்தார். இவ்வித வாக்குறுதி கிடைத்த போதிலும், ஆசிரியர்கள் சட்டமுறைப்படி தங்கள் உரிமைகளைப்பெற ஒத்து உழைப்பதே உசிதமென எண்ணுகிறேன்.

மூன்று ஆசிரிய சமாஜங்களும் ஒருமித்துச் சேவை செய்வதால், கல்வித்துறையில் அரசாங்கம் சனநாயக முறைகளை அனுஷ்டிக்கும் நல்லகாலம் உதயமாகுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

### சங்கரத்தையில் கிராம முன்னேற்றச் சங்கவிழா

சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை மண்டபத்தில் 5-4-59 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சங்கரத்தை கிராம முன்னேற்றச் சங்கத்தின் பத்தாண்டு நிறைவுவிழாவும் சுகாதார, விவசாய, கைத்தொழிற் பொருட்காட்சியும் நடைபெறும். அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீ காந்தா தலைமைவகிப்பார். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், வடபகுதி சுகாதார அதிபர் டக்டர் கே. சிவஞானரத்தினம், வடபகுதி விவசாய அதிபர் எஸ். கனகரத்தினம் உட்பட வேறும் பலர் விரிவுரைகள் ஆற்றுவார்கள். பரிசளிப்பு, படக்காட்சி, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## மக்களின் மொழி உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### மறு உத்தரவு வரை

சிங்களம் மாத்திரம் சட்டம் நிறைவேறியதும், பிரதமர் கெஸட் மூலம் ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதாவது ஏற்கெனவே அரசாங்க நிர்வாகத்தில் மொழி விஷயமாக இருந்துவந்த ஏற்பாடு, மறு உத்தரவு வரை தொடர்ந்து இருக்குமென்று அறிவித்தார். அவர் அந்த உத்தரவைப் போட்டிருக்காவிடில், சட்டம் நிறைவேறிய தினத்திலிருந்து, எல்லாம் சிங்கள மயமாகியிருக்கவேண்டும். அது அனுபவ சாத்தியமல்ல வென்பதையும் 24 மணி நேரத்துக்குள் சிங்களத்தைப் புகுத்திவிட முடியாதென்பதையும் பிரதமர் உணர்ந்தே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இன்னும் இரண்டு வருஷத்துக்குள் எல்லாவற்றையும் சிங்கள மயமாக்கிவிட முடியுமா? ஆங்கிலத்தை முற்ருகக்கைவிட முடியுமா? இது மிக முக்கியமான கேள்வி. பிரதமர், ஆங்கிலத்தில் பேசுவதை இன்னும் கைவிடவில்லை. கைவிடவும் முடியவில்லை. தமிழர், சிங்களவர், பறங்கிகள் இவர்களடங்கிய உத்தியோகஸ்தர்களின் கூட்டங்களிலே அவர் ஆங்கிலத்தில் தான் பேசவேண்டியுள்ளது. பார்லிமெண்ட் உள்ளிட்டுப் பல கூட்டங்களிலும் அவர் ஆங்கிலத்தையே பெரிதும் பாவிக்கின்ருர் ஆங்கிலம் ஒரு பொது மொழியாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. தமிழை நியாயமான அளவு உபயோகிப்பதாகச் சட்டம் செய்த பிரதமர், ஆங்கிலத்தைப்பற்றி இதுவரை எவ்வித சட்டமும் செய்யவில்லை. சட்டம் நிறைவேற்ருவிடினும், அதை அவர் கைவிடவில்லை. சிங்களம் மாத்திரம் சட்டப்படி அவர் சிங்களத்திலேயே பேசுவதாயின், அவரது கருத்து பல அதிகாரிகளுக்குப் புரியாது. தனிச் சிங்களச் சட்டம் நிறைவேறியதால், நாட்டில் சமூக அமைதி குலைந்துவிட்டதை அவர் உணர்ந்தே இருக்கவேண்டும். அரசாங்க இலாகா நிர்வாகம் எவ்விதம் சீர் குலைந்துள்ளதென்பதையும் அவர் அறிந்திருக்கவேண்டும்.

இந்த அரசாங்கத்தின் பதவி காலம் இன்னும் இரண்டே வருஷங்கள்தான் உள்ளன. அந்த இரண்டு வருஷங்களுக்கும், சட்டப்படி ஆங்கிலம் உத்தியோக மொழியாகத் தொடர்ந்து இருக்கும். புதிய தேர்தலுக்கு முன் ஆங்கிலத்தைக் கைவிடப்போவதில்லை.

### சுலபமல்ல

தேர்தலுக்குப்பின் நிலைமை என்ன ஆகும்? என்பது குறித்து நிச்சயமாக எதுவும் கூறமுடியாது. என்ருலும், சுமார் ஒன்றரை நூற்றூண்டு காலமாக நிர்வாக மொழியாகவும் பொது மொழியாகவும் இருந்துவந்த ஆங்கிலத்தைத் திடீரெனக் கைவிடுவதென்பது சுலபமல்ல.

சிங்களம் மாத்திரம் சட்டம் நிறைவேற்றிப் போதிய முன் அறிவிப்புச் செய்துவிட்டதாயும், சிங்களம் தெரியாதவர்கள் தீவிரமாக அதைக் கற்க முனையவேண்டும் என்றும் தபால் அமைச்சர் கூறுகின்ருர். சிங்கள மரைக்காயருக்குச் சிங்களம் தெரிந்திருக்கலாம். ஆனல் நாட்டில் லட்சக்கணக்கான மக்களுக்குச் சிங்களம் தெரியாது. பள்ளிக்கூடங்களிற் சிங்களவரல்லாதார், சிங்களம் கற்க முடியாமலும் சட்டம் தடுத்து வந்தது. சில வருடங்களாக வடமாகாணத்தில் பல கல்லூரிகளிலும் தாங்களாக நடத்திவந்த சிங்கள வகுப்பை, கட்டாய சிங்களச் சட்டம் நிறைவேறறப்பட்டதும், சுயமரியாதை காரணமாக நிறுத்திவிட்டனர். இதனல் தமிழ் மாணவர்களுக்கே நஷ்டமென்றும், தங்களுக்குக் கவலையில்லை என்றும, சில சிங்கள வகுப்புவாதிகள் நினைக்கலாம். சிங்களம் தெரியாததால், அவர்கள் அரசாங்க உத்தியோகத்துக்கு வரமுடியாமற் தடுக்கப்படலாமென்றும், உள்ளூர மகிழ்ச்சியடையலாம். ஆனல் பிரதமர்போன்ற பொறுப்புவாய்ந்தவர்கள் அவ்விதம் அலட்சியமாக இருக்க முடியாது.

நாட்டில் சமூக ஒற்றுமையும், அமைதியும் ஏற்படுத்த வேண்டிய பெரியபொறுப்பு பிரதமர் போன்றவர்களுக்கு உண்டு. சிங்கள கிராமவாசியும் கூடத் தன் குழந்தைக்கு ஆங்கில அறிவு வேண்டுமென்று ஆசைப்படுகிருர். ஆங்கிலத்தைக் கைவிட கல்விமந்திரிக்கும் இஷ்டம் இல்லை. ஆகவே அடுத்த தேர்தலில் ஆங்கிலத்தை ஒழிக்கவேண்டுமென்ரே, அல்லது மொழி வெறியையோ கிளப்புவர்களுக்குப் பொது மக்களின் ஆதரவு இருக்க முடியாது. மக்களின் ஏழ்மையைத் தீர்க்கக்கூடிய வேலைத் திட்டங்களை நடத்திவைப்பவர்களுக்குத்தான் ஆதரவு இருக்கும்.

ஆங்கிலம் முன்னர் ஆட்சியாளரின் மொழியாகவும், நமது அடிமைத் தனத்தின் சின்னமாகவும் இருந்தது. ஆனல் நாடு சுதந்தரம் பெற்ற பின் நிலைமை மாறிவிட்டது. உலக மொழியான ஆங்கிலத்தை இந்தியா ஒரு தேசிய மொழி ஆக்கவும், அதை நீடித்துப் பல வருஷங்கள் பாவிக்கவும் தீர்மானித்துள்ளது. பாகிஸ்தானும் அப்படியே. மற்றப் பல விஷயங்களில் இந்தியாவைப் பின்பற்றும் பிரதமர், ஆங்கிலத்தைத்தொடர்ந்து பாவிக்கும் விஷயமாகவும் பின்பற்ற முன்வரின் அதில் வியப்பில்லை.

மொழி உரிமை, மக்களின் அடிப்படை உரிமைகளில் முக்கியமானது. அடிப்படை உரிமைகளுக்குச் சட்டபூர்வமாக உத்தரவு அளிக்க வேண்டும் என்று அரசியல் அமைப்புக் கமிட்டி சிபார்சு செய்யுமென்றும் கூறப்படுகிறது. ஸ்விட்ஸர்லந்து அரசியலிலே நான்கு மொழிகள் அரசாங்க மொழிகளாக உள்ளன. அந்த அரசியலை ஆதரிக்கும் பிரதமர், மொழி உரிமையை இங்கு சிறுபான்மைச் சமூகங்களுக்கு மனம் ஒப்பி மறுக்க முடியாது.

மொழி, சமய வேற்றுமை வெறிகளை யாராவது கிளப்புவார்களோ என்ற பீதியும் பிரதமருக்கு இனி இருக்கத் தேவையில்லை. அப்படிக் கிளப்புபவர்களை அடக்கிவிட அவருக்குப் பார்லிமெண்ட் போதிய அதிகாரம் அளித்து இருக்கின்றது.

ஆகவே, ஏற்கெனவே அவசரப்பட்டு மொழிவிஷயமாகச் செய்யப்பட்ட பெருந்தவறை மாற்றிக்கொண்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் அமைதியான முன்னேற்றத்துக்கும் வழி செய்ய அவருக்கு இது நல்ல தோர் சந்தர்ப்பமாகும்.

எதிர்பாருங்கள்! வெகு விரைவில்!!

சினிமாஸ் தியேட்டர்ஸ் தாபனத்தாரின் திரைகளில்

தித்திக்கும் தீந்தமிழ்க் காவியமாக ஈழத்தின் எத்திக்கும் எதிரொலிக்க வருகிறான்!

# நாடோடி மன்னன்

இரு வேட நடிப்பு
டைரக்ஷன்,
தயாரிப்பு
முதலியவைகளை
ஏற்று
வெற்றிகண்ட




நட்சத்திரங்கள் :

புரட்சி வீரன் எம். ஜி. ராமச்சந்திரன்

★ எம். என். நம்பியார்
★ பி. எஸ். வீரப்பா
★ எம். ஜி. சக்கரபாணி
★ ஜே. பி. சந்திரபாபு
★ டி. கே. பாலச்சந்திரன்
★ பி. பானுமதி
★ பி. சரோஜாதேவி
★ டி. பி. முத்துலெட்சுமி
★ எம். என். ராஜம்
★ ஜி. கே. சகுந்தலா

திரையுலகிற்கே ஒரு மறுமலர்ச்சி! சிந்தனைக்கே ஒரு புது உணர்ச்சி!


கெயிட்டி தியேட்டரில் 5-வது வாரமாக

★ ஜெமினி கணேசன் ★ சாவித்திரி நடித்த

## திருமணம்

இன்று தொடக்கம்

செல்லமஹால் வெள்ளித்திரையில்



ஸ்ரீராம்
வனஜா
ஜி. எம். பஜீர்
டி. பி. முத்து-லெட்சுமி

நடித்த

## மாய மனிதன்

நடனம்: ஹெலன். பின்னணி: ஜிக்கி, டி. வி. ரெத்தினம், ரத்னமாலா, எஸ். சி. கிருஷ்ணன்.

எதிர்பாருங்கள்! தங்கப் பதுமை (தமிழ்)


பத்திரிகைகளும் பொதுமக்களும் போற்றிப் புகழ்கின்றனர்!

4-வது மகத்தான வாரம்

சென்ட்ரல்-ஓடியன்-ராணி-லாஸா-ஜோதி

(மருதானை) (கல்கிசை) (யாழ்ப்பாணம்) (கண்டி) (திருகோணமலை)

தினசரி மாலை 6 மணி இரவு 9-30 மணி சனி, ஞாயிறு மாலை 2 மணி
ஞாயிறு காலைக் காட்சி 10 மணி



நட்சத்திரங்கள் :

ஏ. நாகேஸ்வரராவ்
சாவித்திரி
ராஜசுலோசனா
கே. ஏ. தங்கவேலு
பி. கண்ணம்பா
ரங்கராவ்
ஜி. வரலெட்சுமி
கே. சாரங்கபாணி

நடனம்: ராகினி
சுகுமாரி

அன்ன பூரண பிக்சர்சாரின்

## மஞ்சள் மகிமை

(தமிழ்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் ஈழநாடுப் பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எ ஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம் திகதி வெளியிடப்பெற்றது.